# கோநகர் பொழுது

## ௨௦௦௪



### கோண்டாவில் இந்து மகாவித்தியாலய பழைய மாணவர் சங்கம்-கனடா

கோநகர் பொழுது 2004

# K.P.S
## JEWELLERY EMPORIUM

20 ஆண்டுகளாக மொன்றியலில்
நன்மதிப்பை பெற்ற ஒரே நிறுவனம்



**5991 Victoria**
**Montreal**

Tel:(514) 343-5333
(514)726 7123

"ஒற்றுமையும் ஆற்றலும் ஒருங்கிணைய உழைப்போம்"

கோண்டாவில் இந்து மகா வித்தியாலய
பழைய மாணவர் சங்கம் - கனடா
பெருமையுடன் வழங்கும்

# கோநகர் பொழுது '2004

## சிறப்பு மலர்



தித்திக்கும் தீந்தமிழ்க் கலைகளின் சங்கமம்

காலம்
April 17, 2004 - சனிக்கிழமை

கனடா கந்தசுவாமி கோவில்
733 Birchmount Road, Scarborough, ON



## சமர்ப்பணம்

எங்களின் வளமான வாழ்வுக்கு
வழித்துணையாய்
கல்வி அறிவுச்சுடரேற்றி அகில உலகெங்கும்
அன்னையவள் கல்லூரியின் புகழ் பரவச் செய்த
எம் இனிய கல்லூரியின்
அதிபர்கள், ஆசிரியர்கள், ஆசிரியைகள்
அனைவருக்கும் இத் தித்திக்கும் 125ம் ஆண்டில்

**கோநகர் பொழுது**

மலரினை சமர்ப்பணம் செய்கின்றோம்

KONDAVIL H. M. V. OLD STUDENTS ASSN - CANADA

கோண்டாவில்
இந்து மகா வித்தியாலய பழைய
மாணவர் சங்கம் - கனடா

# தமிழ்த்தாய் வாழ்த்து

வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ் மொழி
வாழிய வாழியவே!

வான மளந்த தனைத்து மளந்திடும்
வண்மொழி வாழியவே!

ஏழ்கடல் வைப்பினுந் தன் மணம் வீசி
யிசை கொண்டு வாழியவே!

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே!

சூழிகலி நீங்கத் தமிழ் மொழி யோங்கத்
துலங்குக வையகமே!

தொல்லை வினைதரு தொல்லை யகன்று
சுடர்க தமிழ் நாடே!

வாழ்க தமிழ் மொழி வாழ்க தமிழ் மொழி
வாழ்க தமிழ் மொழியே!

வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே!

**சி. சுப்பிரமணிய பாரதியார்**

# பாடசாலைக் கீதம்

பல்லவி

எழில்மிகு கோண்டாவில் பதிமேவும்
எங்கள் வித்தியாலயம் வாழ்க

அனுபல்லவி

அழகுறு கல்வி கவின்கலை யாவும்
அள்ளித் தருவாள் எம் அன்னை

சரணம்

தமிழொடு சைவம் தழைத்திட அருளும்
தாயைப் போற்றித் துதிப்போமே
செந்தமிழ் ஆங்கிலம் அறிவியல் யாவும்
தந்திடும் தாயை பணிவோமே

# Canadian National Anthem

**O Canada!**
**Our home and native land!**
**True patriot love in all thy sons command.**

**With glowing hearts we see thee rise,**
**The True North strong on and free!**

**From far and wide,**
**O Canada, we stand on guard for thee**

**God keep our land glorious and free!**
**O Canada, we stand on guard for thee.**

**O Canada we stand on guard for thee..**

# திருவருள்மிகு பிள்ளையார் தேவஸ்தானம்
## கோண்டாவில் நெட்டிலைப்பாய்
## 5-03-2004

## ஆசியுரை

கோண்டாவில் இந்துமகாவித்தியாலய பழைய மாணவர்கள் அனைவரும் சேர்ந்து கனடா திருநாட்டில் சிவ புண்ணியம் பசுபுண்ணியம் இரண்டையும் சிறப்பாகச் செய்து வருவதை அறிந்தும் கேட்டும் மிக மிக மகிழ்ச்சியடைந்தேன். கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோவிலில் ஆலய கட்டிடத் திருப்பணி இராஜகோபுரத் திருப்பணி என்பவற்றிற்கெல்லாம் வாரி வாரி வழங்கி அத்திருப்பணிகளெல்லாம் குறைவற நிறைவேற்றித் தந்தவர்கள் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய பழைய மாணவர்கள் தான் என்று சொன்னால் மிகையாகாது. மேலும் தொடர்ந்து நடந்த மகா கும்பாபிஷேகமும் சிறப்புற நடைபெற்றதென்றால் அதுவும் இவர்களின் பெரும் கொடையினாலே தான் என்று சொல்வதில் பெருமை அடைகின்றேன் மேலும் பழைய மாணவர்களின் குடும்பமும்ம தனிப்பட ஏராளமான திருப்பணிகளை ஆலயத்தில் செய்திருக்கிறார்கள். இது மாத்திரமல்ல பசு புண்ணியம் கருதி தாங்கள் கல்வி கற்ற பாடசாலை சிறக்கவேண்டும் என்னும் எண்ணங்கொண்டு மாணவர்கள் வசதியாக இருந்து கல்வி கற்பதற்கு அழகான பல கட்டிடங்களைக் கட்டி தந்திருக்கிறார்கள். பள்ளிக்கூடத்திற்கு மாடி வீடு கட்டி ஆசிரியர் மாணவர்கள் எல்லோரும் பலன் பெறும் வண்ணம் தாம் தாம் இளமையிலே கல்வி கற்ற இடம் என்பதை மறவாது நன்றியுடன் செயல்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு சிவ புண்ணியம் பசு புண்ணியம் இரண்டையும் சிறப்பாக ஆற்றிவரும் கோண்டாவில் இந்துமகாவித்தியாலய பழைய மாணவர்கள் பாராட்டப்பட வேண்டியவர்கள். அவர்கள் விநாயகப் பெருமானின் பேரருளினால் சகல சௌபாக்கியமும் பெற்று நலமுடன் வாழ பூரண நல்லாசி கூறி அமைகின்றேன்.

இங்ஙனம்
பிரதிஷ்டா திலகம் சிவாகம ஞான பானு
பிரம்மஸ்ரீதா ஹரிஹர சுப்பிரமணியக் குருக்கள்
பிரதான சிவாச்சாரியார்
கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் தேவஸ்தானம்

Ministry of Health and Long-Term Care
Office of the Minister
10th Floor, Hepburn Block
80 Grosvenor Street
Toronto ON M7A 2C4
Tel 416-327-4300
Fax 416-326-1571
www.health.gov.on.ca

Ministère de la Santé et des Soins de longue durée
Bureau du ministre
10e étage, édifice Hepburn
80, rue Grosvenor
Toronto ON M7A 2C4
Tél 416-327-4300
Téléc 416-326-1571
www.health.gov.on.ca

Ontario

April 17, 2004

**Kondavil Hindu Maha Vidyalayam Old Students Association – Canada**

**Vanakam!**

Congratulations on establishing the Konagar Poluthu program as part of the Kondavil H.M.V. Old Students Association in Canada.

The Konagar Poluthu Program is an exquisite example of the exceptional contributions to our society and your commitment, dedication and the loyalty of all the members of this prestigious alumni organization.

With the Konagar Poluthu Program, you are continuing to change people's lives and offering our community as a whole, a glimpse of your rich and colourful cultural traditions that enrich the lives of all of our communities, not only in Ontario but in all of Canada!

It is fitting that your launch coincides with the 125th anniversary of the Kondavil Hindu Maha Vidyalayam School in Sri Lanka.

We wish you a healthy and "Puthu Varudha Vaalthukkal".

Nanry Vanakkam,

George Smitherman
Minister

# தலைவர் உள்ளத்திலிருந்து........

எனது அன்பான உள்ளங்களே! "காலம் பொன் ஆனது." "கடமை கண் ஆனது." என்பதற்கமைய வாழும் இந்நாட்டில் இன்று ஒரு மாலை நேரத்தை எமது கல்லூரி வளர்ச்சி கருதிக் கொண்டாடும் கோநகர் பொழுதைக் கண்டு களிக்க வந்திருக்கும் அனைவருக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயப் பழைய மாணவர் சங்கத்தின் சார்பாக சித்திரைப் புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

இயற்கையின் செயற்பாடுகளை உணர்த்தும் பஞ்சபூதத் தத்துவங்களையும் சைவத்தமிழ் மக்கள் கொண்டாடும் நன்றிக்கடன்களையும் தாயக நினைவுகளையும் மீண்டு நினைக்க சித்திரைப் பெருநாள் பொங்கல், போர்த்தேங்காய் அடித்தல், வண்டிச் சவாரிகளை மறத்தலாகாது. புலம் பெயர்ந்த நாடுகளில் பிறந்தும் வளர்ந்தும் வாழ்ந்தும் வரும் இளைய சந்ததியினருக்கும் தாயக மண்ணின் வாசனை என்றும் வீச இவ்விழா நல்ல வகையில் அமைந்து பயன்தர வாழ்த்துகின்றேன்.

எமது பாடசாலை 125 வருட சரித்திரம் படைத்து சைவமும் தமிழும் தலையோங்கச் செய்த பெருமையுடையது. ஆனால் உயர்தர பாடசாலையாக அமைப்பதில் விளையாட்டிடம் அமைப்பதற்கு வசதியான நிலம் இல்லை என்று காரணம் காட்டிக் கல்வித் திணைக்களம் தாமதப்படுத்தியது.

இப் பாடசாலையில் முதல் மேல்மாடிக் கட்டிடத்தை அதிபர் திரு. செ. நடராசா காலத்தில் திரு. தி. புவனேந்திரன் தலைமையில் பழைய மாணவர் குழுவின் சிரமதானப் பணியிலும், அன்றைய அபிவிருத்திச் சபைச் செயலாளர் சட்டத்தரணி திரு. சி. சிதம்பரநாதன், பொருளாளர் திரு. க. சபாபதி, (சிறாப்பர்) திரு. ச. சண்முகம், திரு. V. குணரத்தினம், திரு. செல்லப்பா. நடராசா போன்ற பெரியார்களின் முயற்சியாலும் அரச ஆதரவுடனுன் அமைத்தார்கள். தொடர்ந்து மகாவித்தியாலய தரத்திற்கு உயர்த்த எடுத்த செயல்கள் பயன் தந்தன.

உயர்தர கலைப் பிரிவுடன் கல்வி முழுமை அடைந்து மாணவர் திறமையால் உயர்வுடைய விளையாட்டுப் போட்டிகள் அவசியம். இதனை உணர்ந்த நன்றியுள்ள பழைய மாவர்களின் பெருமுயற்சியில் உருவான பழைய மாணவர் சங்கக் கனடா கிளை 1996 இல் தொடங்கி இன்றுவரை செயலாற்றிய காலத்தின் விளைவுதான் பாடசாலைத் தேவையில் கணிசமான பங்கைச் செய்தது. இதன் பயனாக வாங்கிய விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடந்து முடிந்த மெய்வல்லுநர் போட்டிகள் புலம் பெயர்ந்து வாழும் பல்லாயிரம் மாணவர்கள் தாயக மண்ணின் பெருமையை உயர்த்தும் கல்லூரித் தாய்க்குச் செலுத்திய நன்றிக்கடன் என்பதை உறுதிப் படுத்தியுள்ளது.

மேலும் பாடசாலைத் தேவைகளை அறிந்து ஆவன செய்ய கிளை நிர்வாகிகளின் சேவைக்கு ஊக்கமும் ஆக்கமும் நல்கிய அனைவருக்கும் நன்றி உரித்தாகுக!

வாழ்க இந்து மகாவித்தியாலயம்! வளர்க இந்து மகாவித்தியாலயம்!



இ. தங்கராசா (முன்னாள் ஆசிரியர்)
தலைவர்
கனடா இ.ம.ப.மா.சங்கம்

## From the Secretary



Kondavil Hindu Maha Vidyalayam Old School Association - Canadian branch, want to thank every one for their sincere support for the past 8 years. We wouldn't be here, where we are now, if it weren't for the support of our hard working association members. This organization started with only few people, and currently has over 30 active members.

2004 will mark another milestone for our association. The 125th anniversary for Kondavil Hindu Maha vidaliam is only a month away. In honor of this special occasion, we will be publishing our first association book "**Konagar Poluthu**" - with pride and honor. Once again, I'm asking kindly for every ones continuous support in making this year 'a memorable and a successful one'.

We suggested the idea of 'forming an association' to past Kondavil Hindu student living in various countries. The out come was a huge success, where (Germany, London, Switzerland, and Paris) formed an organization.

Within 8 years of existence past Kondavil Hindu Students 'living in Canada, contributed money and purchased land for a new playground. Currently, there is an ongoing talk of sponsoring "scholarship's" to Kondavil Hindu Students.

As a secretary I'll give my fullest effort in helping this organization to 'grow and prosper'.

Sarangan Thayananthan
Business Administration (Humber College).

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பதறிவு- குறள்

எது எப்படித் தோன்றினாலும் அதன் உண்மையைத் தெரிந்து கொள்வது தான் அறிவு.

# பொருளாளரிடமிருந்து

தொடர்ந்து செல்லும் எமது பணிகள்

கனடா வாழ் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் பழைய மாணவர் சங்கம் பாடசாலையின் 125ம் ஆண்டைக் கொண்டாடும் வேளையில் 2004ம் ஆண்டு முதன் முதலாக வெளிவரும் **கோநகர்பொழுது** மலர் வெளியிடுவதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம்.

கடந்த வருடங்களில் பாடசாலைக்கு விளையாட்டு மைதானம் இல்லை என்ற குறை கனடா பழைய மாணவர்கள் ஒத்துழைப்பால் 9 1/2 பரப்பு காணி வேண்டிக் கொடுத்து பாடசாலையின் தரத்தை உயர்த்துவதற்கு உதவி செய்துள்ளோம்.

மேலும் இலண்டன், ஜேர்மனி, சுவிட்சலாந்து ஆகிய நாடுகளுடன் தொடர்பு அந்நாட்டின் பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து பணம் திரட்டி அனுப்புவதற்கு கனடா பழைய மாணவர்கள் முயற்சி பெரிதும் உதவி செய்து உள்ளது என்பதை யாரும் மறக்க முடியாது.

2003ம் ஆண்டு வசந்த கால ஒன்று கூடலில் பாடசாலை அதிபராக இருந்த திருமதி சரஸ்வதி முருகையா அவர்கள் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்திருந்தார்கள்.

புதிய வருடத்தில் கல்லூரி நிர்வாகம் திருமதி பாக்கியலட்சுமி மார்க்கண்டு (அதிபர்), உப அதிபர் திரு. அருணகிரிவாசன் ஆகியோருடன் தொடர்பு கொண்டு பழைய மாணவர் சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க இரசாயன, கணனிகளைக் கொண்ட வகுப்பறை ஒன்றை உருவாக்கிக் கொடுப்பதற்கும் கல்லூரியின் விளையாட்டுத்துறை மேலும் விருத்தி அடையச் செய்வதற்கும் சங்கம் ஆலோசனை செய்கின்றது. எனவே இச்சங்கம் தன் முன்னால் உள்ள மகத்தான பணியை நிறைவேற்றுவதற்கும் அனைத்து பழைய மாணவர்கள் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்கின்றேன்.

## சிந்திக்க

ஒருவன் படித்தவை, அவனிடம் படிதல் வேண்டும். அவன் அவற்றைப் படைக்கவும் வேண்டும்.

நாம் பிறரைக் கண்டு பொறாமை கொள்ளக்கூடாது
பிறர் நம்மைக் கண்டு பொறாமை கொண்டால் அது நம் வாழ்வின் சிறப்பு



நன்றி

பொருளாளர்
தியாகரட்ணம் கேமநாதன்
ப.மா.சங்கம்-கனடா
கோ.இ.மா.வி.
2000-2004

# "தனித்துவமாக வளர வாழ்த்துக்கள்"



யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் 1878ஆம் ஆண்டு திண்ணைப் பாடசாலையாக ஆரம்பித்து பழம்பெருமை வாய்ந்த பாடசாலையாகத் திகழ்கின்றது. சைவம், தமிழ் ஆகியவற்றினூடாக ஒழுக்கக் கல்வியை வளர்ப்பதை நன்நோக்கமாகக் கொண்ட நிறுவுனரின் எண்ணம் நிறைவேறி இன்று நூற்றிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவைப் பெற்றிருக்கின்றமை நம் அனைவரையும் பெருமைக்குள்ளாக்குகின்றது. இப்பெருமையில் இவ்விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்புவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

இப்பாடசாலை தன் வரலாற்றில் நடந்து வந்த பாதையின்-நெளிவு, சுழிவுகளுக்கு முகம் கொடுத்து-பற்றுதியுடன் உழைத்த அதிபர்களின் தியாகத்தினாலும்-சீரிய ஆசிரியர்கள் நன் மாணாக்கர்கள் உறவாலும், பண்புள்ளம் கொண்டபெற்றோர்கள், பழைய மாணவர்களின் ஒத்துழைப்பாலும் வளம்பெற்று பெரிய விருட்சமாக தழைத்து நிற்கின்றது.

780க்கு மேற்பட்ட மாணவ வளத்தைக் கொண்ட நமது பாடசாலை கோண்டாவில் கிராமத்தில் தனித்துவமாக விளங்குகின்றது. புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கமைய நவீன விஞ்ஞான யுகத்துக்கு முகம் கொடுக்கும் வகையில் நமது மாணவச் செல்வங்களை தயார்படுத்தும் பொறுப்பு இதனோடு ஒன்றித்து நிற்கும் அனைவரையும் சாரும்.

பாடசாலையின் தேவை கருதி அதனை இலட்சியமாகக் கொண்டு நல்லனவற்றையே நிறைவேற்றி செயற்பட்ட சாதனைகள் வரலாற்றின் திருப்பு முனைகளாகும்.

**"பெற்றதாயும் பிறந்த பொன்னாடும்**
**நற்றவ வானின் நனிசிறந்தனவே"** .

என்ற பாரதியின் பாடல் அடியொற்றி தான் பிறந்த தாய் நாட்டிலிருந்து புலம் பெயர்ந்து வாழும் இப்பாடசாலையில் கற்ற பழைய மாணவர்கள் ஒன்று சேர்ந்து **"யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் பழைய மாணவர்கள் சங்கம்-கனடா"** என்ற உயிரோட்டமான அமைப்பின் மூலம் எமது பாடசாலைக்கு பல சாதனைகளை நிறைவேற்றி வருகின்றமைக்கு நன்றி.

தன் மைந்தர்களால் நிறைவேற்றிய சாதனைகளால் எமது பாடசாலை அன்னை கல்லூரி நிலைக்கு தலை நிமிர்ந்து நிற்பது பாராட்டப்படுவது தொன்றாகும். அன்னையின் தேவைகருதி-அதனை இலட்சியமாகக் கொண்டு உருவாகிய சங்கத்தின்-எட்டாவது ஆண்டு நிறைவுக்கும்-இதுவரை செயற்பட்டுநிறைவேற்றிய சாதனைகளிற்கும், பாடசாலையின் நூற்றியிருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு விழாவுக்கும் அதனை யொட்டி வெளியிட இருக்கும் மலரிற்கும் என் மனமார்ந்த ஆசிகளும், வாழ்த்துக்களும் கூறி, இச்சங்கம் மேலும் வளர்ந்து தொண்டுகள் பல செய்ய இறையருள் வேண்டிப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி.

**செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டு**
அதிபர்,
யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.



உ

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

**தெல்லிப்பழை, இலங்கை.**

# Sri Durgadevi Devasthanam

**Tellippalai, SriLanka.**

தலைவர்:
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.**

**President:**
Durgaduranthari, Sivathamilselvi,
**Dr. Miss. Thangamma Appacuddy, J.P.**

8/3/04



யாழ்/ கொண்டாவில் இந்துமகா வித்தியாலயம்
நூற்றி இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவு
பற்றிய வாழ்த்துரை.

"மன்னனும் மாசறக்கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனில் கற்றோன் சிறப்புடையன் - மன்னர்க்குத்
தன்தேசமல்லால் சிறப்பில்லை கற்றோர்க்குச்
சென்ற இடமெல்லாம் சிறப்பு".

இப்பாடலின் மூலம் கல்வி கற்பதினால் ஏற்படும் சிறப்பு குறிப்பிடப்படுகிறது. யாழ் மண்ணில் பல பெருமக்கள் பாடசாலைகளை அமைத்து கல்விப் பணி புரிந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. கொண்டாவில் இந்து மகா வித்தியாலயம் "வெங்கடாசல ஐயர்" என்ற நாமத்தைக் கொண்ட அந்தணப் பெருமகனாரால் ஸ்தாபிக்கப்பட்டது. இதனால் இப் பாடசாலையை ஐயருடைய பாடசாலை என்றும் அழைப்பர். கல்விப் பணியிலும், சமூகப்பணியிலும், தெய்வீகப் பணியிலும் நாளொரு வண்ணமாக முன்னேறி இன்று மகாவித்தியாலயம் என்ற தரத்துக்கு உயர்த்தப்பட்டுள்ளது. எமது மண்ணில் கல்விக்கு முதலிடம் உண்டு. இதனாலேயே எங்கள் முன்னோர் மலேசியா, சிங்கப்பூர், லண்டன் போன்ற நாடுகளில் பெரும் பதவி வகித்து பணிபுரிந்து வந்துள்ளனர்.

ௐ



# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை.

# Sri Durgadevi Devasthanam

**Tellippalai, SriLanka.**


தலைவர்:
துர்க்காதுரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி,
**கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P.**

**President:**
Durgaduranthari, Sivathamilselvi,
**Dr. Miss. Thangamma Appacuddy, J.P.**


அது மாத்திரமல்ல இலங்கையிலும் தமிழர்கள் வகித்த பதவிகள் மதிப்புக்குரியன. நாடறிந்த பெரியார் செல்லப்பா நடராஜா இப்பாடசாலையின் முன்னைநாள் மாணவன் என்பதை அறியும் போது அது கல்வி நிலையத்துக்கு ஒரு சிறப்பு முத்திரையாகும். தவத்திரு அம்பலவாண சுவாமிகளை நான் நேரில் தரிசித்துள்ளேன். அன்னாரிடம் திருமுறை கற்கக்கூடிய வாய்ப்பை மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலையில் நான் பெற்றுக் கொண்டேன்.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இக்கல்விக்கூடம் வளர்ச்சி அடைந்துள்ளது. எனவே சைவமும் தமிழும் இம்மண்ணில் தழைத்தோங்க அரும்பாடு பட்ட ஸ்தாபகர் வெங்கடாசல ஐயர் அவர்களை உள்ளத்திலிருத்தி மேலும் மேலும் இறை தொண்டுடன் கலைத்தொண்டும் சிறந்து ஓங்க வேண்டும் என்று திருவருளைப் பிரார்த்தித்து அமைகின்றேன்.

"ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து."

தங்கம்மா அப்பாக்குட்டி


**கலாநிதி. செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி**
**சமாதான நீதிபதி**
**தலைவர்**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**
**தெல்லிப்பழை, ஸ்ரீ லங்கா**

16.02.2004



# ஆசிச் செய்தி

மனிதரை வழிநடத்த மிகவும் முக்கியமான ஓர் இடம் பாடசாலை ஆகும். இந்த பாடசாலை 125வது ஆண்டு விழாக் கோலம் காண உள்ளது. எத்தனையோ கல்விமான்களை உருவாக்கியும் உருவாக்க இருப்பதும் ஆகும். இப் பாடசாலையை வளர்ப்பதற்கு பெற்றோர், பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகள் எல்லாருடைய ஒத்துழைப்பும் இன்றியமையாததாக உள்ளது இப் பாடசாலை இன்னமும் முன்னேற பழைய மாணவர் சங்கம் (கனடா) மேல் மேலும் வளரவேணும் என ஆசி கூறுவதோடு பாடசாலையும் இன்னும் வளரவேணும் என பிரார்திப்போமாக.

**நன்றி.**

**வளர்க பாடசாலை.**
**வளர்க பழைய மாணவர் சங்கம்.**

சிவஸ்ரீ சாமி சிறீஸ்கந்தராஜாக் குருக்கள் (ஜே.பி)
கோண்டாவில்.

# உப செயலாளர் உள்ளத்திலிருந்து......

கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் 125 வருடங்களைக் கடந்த இன்றைய நிலையில் எம்மைப் போன்ற பல்லாயிலம் மாணவர்களுக்குக் கல்வி அறிவூட்டிய பெருமை உடையது.

அந்நியர் ஆட்சிக்காலத்தில் எம்மவர் மதம் மாறிக் கிறீத்தவரான காலத்திலும் சைவமும் தமிழும் அழியாது நாவலர் அடியொற்றி வாழ்ந்த சைவப் பெரியார்களது பெருமனதுடன் ஆரம்பிக்கப்பெற்ற பெருமையானது.

எமது மூதாதையர்கள் முதல் இன்றுவரை இப்பாடசாலையின் வளர்ச்சி மிகவும் மகிழ்ச்சிக்கு உரியதாகும். ஐயர் பாடசாலை முதல் இந்து மகாவித்தியாலயம் என்று பெயர் பெறும்வரை வசதிகள் படிப்படியாகக் கிடைத்தாலும் புலம் பெயர்ந்த மாணவர்கள் வரிசையில் கனடா வாழ் மாணவர்கள் 1996 இல் பழைய மாணவர் சங்கம் அமைத்து ஆரம்பகாலச் செயலாளராகப் பணியாற்றிய என்னுடன் சேர்ந்த பாடுபட்ட நிர்வாகிகளின் செயற்பாடுகள் போற்றத்தகும். இதன் பயன்தான் இன்று எமது கல்லூரிக்கு வாங்கிக் கொடுத்த விளையாட்டிடம். ஏனைய காரணிகளின் கணிசமான பங்களிப்பாகும். 1996-2003 வரை செயலாளராகப் பணியாற்றி பாடசாலை பற்றிய தேவையின் கணிசமான பங்கைச் செய்தேன்.

ஆண்டுதோறும் யூலை மாதத்தில் பழைய மாணவர்கள் பூங்காவில் ஒன்று கூடிச் சிறுவர்களிடையே விளையாட்டுப் போட்டிகளை நடாத்தியும் சிரேஷ்ட உறுப்பினர்களால் பரிசில் வழங்கியும் எமது அங்கத்தவரை அதிகரிப்பதன் மூலம் பாடசாலை வளர்ச்சிக்கு ஓர் வாய்ப்பாகும்.

எமது பாடசாலை பல்வளங்களும் பெற்று வளர நாம் அனைவரும் தொடர்ந்தும் ஊக்கமாகச் செயற்பட்டு உதவக் கடவுளைப் பிரார்த்தித்து நிறைவு செய்கின்றேன்.

ஆ. நித்தியானந்தம்
முன்னாள் செயலாளர்
கனடா இந்துமகாவித்தியாலய பழயமாணவர் சங்கம்

# முன்னாள் தலைவர் சிந்தனையில் இருந்து

கனடாவில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக புலம்பெயர்ந்து வாழும் வடக்கு கிழக்கு மாகாண தமிழர்கள் தங்கள் இன மத மொழி கலாச்சாரங்களை மறக்காமல் அதை தங்களுடைய பிற்கால சந்ததியினருக்கு அறியச் செய்வதற்காகப் பல வழி முறைகளை பின்பற்றிக்கொண்டிருக்கிறார்கள். இதனை பின்பற்றி ஒவ்வொரு ஊர்மக்களும் தங்களுடைய உற்றார் உறவினர் நண்பர்களை சந்திக்க நல்லதொரு சந்தர்ப்பமாக ஒன்று கூடல்களை தொடர்ந்தும் நடாத்தி வருகிறார்கள்.

எங்களுடைய கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பழைய மாணவர் சங்கம் உருவாக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் கடந்து விட்டன. 10 பழைய மாணவர்களின் விடாமுயற்சியினால் 260 வெலசிலியில் உள்ள 2904 அறை இலக்கத்தில் முதல் முதலாக கூடி எடுக்கப்பெற்ற தீர்மானப்படி பாடசாலைக்கு ஒரு விளையாட்டு மைதானம் அவசியம். அதற்கு உரிய காணியை வாங்கிக் கொடுக்க வேண்டும் என்ற ஒரே இலட்சியத்துடன் சங்கத்தை ஆரம்பித்தோம்.

எங்கள் நோக்கம் பாடசாலையை முன்னேற்ற வேண்டும் என்ற குறிக்கோளை தவிர ஒன்றுகூடல் கலை விழா போன்ற நிகழ்வுகளை நடத்த முன்னுரிமை கொடுக்கவில்லை. இதன் பிரதி பலிப்புத்தான் $ 10,000 அளவில் சேர்த்து விளையாட்டு மைதானம் அமைப்பதற்கு உரிய காணியை வாங்கிக் கொடுத்ததுடன் வேறு பல காணிகளையும் இலண்டன், ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ் ஆகிய நாடுகளில் வாழும் சேவை மனப்பான்மை கொண்ட பழைய மாணவர்களுடன் தொடர்பு கொண்டு அவர்களுடைய பங்களிப்பையும் பெற்று பல லட்சம் ரூபா பெறுமதியான காணிகளை வாங்கி கொடுத்ததுடன் பாடசாலைக்கு தேவையான பல பொருட்களை கொழும்பில் இருக்கும் பழைய மாணவர்களைக் கொண்டு அன்பளிப்புச் செய்வித்தும் ஊக்குவித்தோம்.

எதிர்காலச் சந்ததியினருக்கும் பாடசாலை பற்றிய உணர்வை ஊட்டி படித்த பாடசாலையின் சன சமூக நிலையம், மருத்த நிலையம் மற்றும் பல தரப்பட்ட சமூக சேவை நிலையங்களுக்கும் தங்களினாலான உதவிகளை செய்யுமாறு கேட்டுக் கொண்டு எனது கருத்தை முடித்துக் கொள்கின்றேன்.

உலகெங்கும் பரவி இருக்கும் பாடசாலை பழைய மாணவர்களோடு தொடர்பு கொண்டு அவர்களும் எங்கள் பாடசாலைக்கு உதவி செய்து முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கில் புத்துணர்ச்சியை ஊக்குவித்து செயல்படுத்திய பெருமை எங்கள் சபைக்கே சேரும்

நன்றி
துரையப்பா இராமச்சந்திரன்
முன்னாள் தலைவர்
ப.மா.ச. கனடா

# KONDAVIL WELFARE ASSOCIATION U.K
## கோண்டாவில் நலன்புரிச் சங்கம் ஐ.இ


President:
Mr M Pulendran

Vice-president
Mr S Senthilnathan

Secretary:
Mr S Srisankar

Asst. Secretary:
Mr M Uthayakumaran

Treasurer:
Mr S Sriskantharajah

Asst. Treasurer:
Mr S Shanthakumar

Committee Members

Mr V Aingaralingam

Mr K Jivithkumar

Mr K Kanagarajah

Mr A Ragulan

Mr S Rajkumar

Mr K Selvalingam

Mr S Selvanesan

Mr S Sivaraj

Mr T Sivarasa

Mr E Umakanthan

Mr E Vaasavan


## ஆசிச்செய்தி

கோண்டாவில் இந்து மகாவித்தியாலையத்தின் 125வது ஆண்டு விழாவிற்கு மேற்படி சங்கத்தின் சார்பில் ஆசிச்செய்தி ஒன்றினை அனுப்புவதையிட்டு அளவற்ற மகிழ்ச்சியடைகின்றோம்.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலையத்தில் ஆரம்பக்கல்வி பயின்று சர்வதேசத்திலும் புகழ்கொடி நாட்டிச் சேவையாற்றும் இந்து அன்னையின் புதல்வர்களின் எண்ணிக்கை கணக்கிலடங்காதவை. புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் தாம் பிறந்த மண்ணையும் தாம் பயின்ற கல்வியையும் மறவாமல். உலகெங்கிலும் சங்கமமைத்து அம்மண்ணின் தேவையறிந்து ஆவன செய்து வரும் சங்கங்களில் கனடாவில் இயங்கும் உங்கள் சங்கமும் ஒன்று. கல்விபயின்றதை மறக்காமல் ஒரு படி மேலாக அவ்வன்னைக்கு விழா எடுப்பது மட்டுமல்லாது மலரொன்று வெளியிட முனைந்திருப்பது மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும்

எமது சங்கமானது லண்டன் மாநகரில் வாழும் கோண்டாவில் கிராம மக்களை இயன்றவரை ஒன்றிணைத்து அம்மக்களின் மொழி, கலாசார, பண்பாட்டு விழுமியங்களைப் பேணுவதையும் இலங்கையில் உள்ள கோண்டாவில் கிராம பொது நிறுவனங்களின் வளர்ச்சியையும் கருத்திற் கொண்டு அமைக்கப்பட்டது. எமது நோக்கத்துக்கமைய எமது சங்கசெயற்பாடுகள் விரிவடைந்து எம் தாய் மண்ணில் இருக்கும் ஆலயங்கள் கல்விச்சாலைகள் நூல்நிலயங்கள் ஆகியனவற்றின் தேவைகளை பூர்த்தி செய்வதை குறிக்கோளாகக்கொண்டு இயங்கி வருகின்றோம்

கோண்டாவில் இந்து மகாவித்தியாலையத்திற்கு எம்மிரு சங்கங்கள் தனித்தனியாக வாங்கிக் கொடுத்த காணிகளுக்கு மேலதிகமாக நாம் சுவிஸ், ஜேர்மன் நாடுகளில் வாழும் கோண்டாவிலைச் சார்ந்த மக்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, நான்கு நாடுகளும் சேர்ந்து ஒரு காணியை வாங்கிக் கொடுக்க முடிந்துள்ளது. இவ்வுதவியானது பாடசாலையின் பல்வேறு நெருக்கடிகளை குறைத்ததோடல்லாமல் புதிய கட்டிடம் போடவும், மாணவர்கள் விளையாடவும் இடம் கிடைத்தமை பாடசாலை சமுகத்தை மிகவும் மகிழ்ச்சியில் ஆழ்த்தியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

உங்கள் விழா வெற்றிகரமாக நடைபெற வாழ்த்தும் இச்சந்தர்ப்பத்தில் உங்களின் ஆக்கபூர்வமான எந்த ஒரு முயற்சிக்கும் நாம் கைகொடுக்கக் காத்திருக்கின்றோம் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வெல்க உங்கள் எண்ணம்

வாழ்க உங்கள் சங்கம்

அன்புடன்

செ.செந்தில்நாதன்


emails for Contacts:-
home@senthilnathan.co.uk
Sris [sris@amman.idps.co.uk]
Vibi_arthi@hotmail.com



**70 George V Avenue Pinner Middlesex HA5 5SW**
**Telephone: 020 8723 7952**
**Web site: www.kondavil.co.uk**

# நீங்காத நினைவுகள்

யாழ்ப்பாணத்தின் மத்தியில் இணுவை, கொக்குவில், தாவடி, உரும்பிராய் ஆகிய ஊர்களாற் சூழப்பட்டது கோண்டாவில் என்ற ஊர். இவ்வூரின் மேற்குப் பகுதியில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் அமைந்துள்ளது சுமார் 125 வருடங்களாக இங்கு சைவமும் தமிழும் போற்றப்பட்டு வளர்க்கப்பட்டு வருகின்றன. வெள்ளிக் கிழமைகளில் சிவபுராணம், தேவாரம், திருவாசகம் ஒலிக்கும். பாடசாலை வளவுக்குள் புகுந்தவுடன் முதலில் தெரிவது சாணியால் மெழுகிக் கோலம் போட்டு வைக்கப்பட்ட பிள்ளையார். ஆசிரியர்களும் மாணவர்களும் சந்தனம் குங்குமப் பொட்டிட்டு அழகாக இருப்பர். ஆசியர்களும் மாணவர்களும் கவலை எதுவுமின்றி சந்தோஷமாக இருந்தனர். இது 1979ம் ஆண்டு தொடக்கம் 1987ம் ஆண்டுவரையிலான காலப்பகுதியிலாகும். இக் காலப்பகுதியில் நான் ஆசிரியராகக் கடமையாற்றினேன். சில காலம் உப அதிபராகவும் கடமை புரிந்தேன்.

பிரபலமான பாடசாலையொன்றிலிருந்து இப்பாடசாலைக்கு வந்தவுடன் சிறப்பு இயல்புகளையும் மனித நேயத்தையும் கண்டு வியந்தேன். இப்பாடசாலை ஒரு குடும்பம் போல் இயங்கியது. யாருடைய தூண்டுதலும் மேற்பார்வையும் இல்லாமல் ஒவ்வொரு ஆசிரியரும் தமது வேலையை ஒழுங்காகச் செய்வதை முக்கிய கடமையாகக் கருதினார்கள். எல்லாப் பிள்ளைகளையும் எந்த வேறுபாடுமின்றி நேசித்துக் கற்பித்தார்கள். தாங்கள் லீவு எடுக்கும்போது சக ஆசிரியர்களிடம் வகுப்பைப் பார்க்கும்படி ஒழுங்கு செய்துவிடுவர். ஆசிரியர்கள் மற்றவருக்கு உதவிசெய்யும் மனப்பாங்குடையவர்களாகவும் இருந்தனர். இடைவேளையில் மனையியல் அறையில் தேனீர் தயாராக இருக்கும். ஆசிரியர்கள் அங்கு சென்று போதியளவு தேனீர் அருந்துவர். இடையிடையே உணவுப் பண்டங்களும் வைக்கப்பட்டிருக்கும். தேவையானபோது பணம் மாறலாம். பழங்கள் கைமாறும். கஷ்ட நஷ்டங்கள் பகிர்ந்து கொள்வர். அக்காலத்தை என்னால் மறக்கவே முடியாது.

பெரும்பாலானோர் தொழிலாளர்களினதும் விவசாயிகளினதும் பிள்ளைகள். வறுமைக்கோட்டுக்குக் கீழ் வாழ்ந்தார்கள். பணம்படைத்தவர்கள், உத்தியோகத்தர் ஆகியோரின் பிள்ளைகள் கல்லூரிகளிற் சென்று பயின்றனர். பாடசாயின் அபிவிருத்திக்கு அரசாங்கம் பணம் ஒதுக்கியும் அப்பணத்தைப் பெற்று புதிய கட்டிடத்தை அமைக்கக்கூடிய வலுவான பெற்றோர் ஆசிரியர் சங்கமோ அன்றி அபிவிருத்திச் சபையோ இருக்கவில்லை. அப்பணமும் உபயோகப்படாது அரசாங்கத்திற்கே திரும்பிவிடும். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் இளைப்பாறவுள்ள அதிபர்களைத் தேர்ந்து இப்படியான பாடசாலைகளுக்கு அனுப்பிவைப்பது அப்போதைய கல்வித் திணைக்களத்தின் செயற்பாடாக இருந்தது.

சில ஆசிரியர்களும் பெற்றோர்களும் சேர்ந்து பாடசாலையை அபிவிருத்தி செய்ய எடுத்துக் கொண்ட முயற்சிகள் ஊரிலே பெரிய மனிதர் என்று தம்மைக் காட்டிக் கொண்டிருந்த சிலரால் பிற ஊரவன் என்ற வேறுபாட்டைக் காட்டி முறியடிக்கப்பட்டது. இவர்களின் பிள்ளைகளோ அன்றி உறவினர்களோ இப்பாடசாலையிற் படிக்கவில்லை. இப்பாடசாலையை அபிவிருத்தி செய்து திறம்பட நடத்தக்கூடிய ஆசிரியர்களை அதிபராக்க எடுத்த முயற்சிகளும் ஊர் வாதிகளால் முறியடிக்கப்பட்டது.

இன்று உலகில் பல்வேறு நாடுகளிலும் முக்கியமாக கனடாவில் வாழ்கின்ற இப்பாடசாலை பழைய மாணவர்கள் தாங்களும் பெரிய கல்லூரியில் படிக்கவில்லையே எம் மூதாதையர் எமது பாடசாலையை பெரிய கல்லூரியாக மாற்றவில்லையே என்ற ஆதங்கம் இருக்கத்தான் செய்யும். ஆகவே நீங்கள் இப்பாடசாலையை அபிவிருத்தி செய்ய உதவுங்கள். இறுதியில் முக்கியமான ஒரு விடயத்தைச் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. தாயகப் போராட்டத்தில் இப்பாடசாலையின் பழைய மாணவர் ஏற்ற பொறுப்பு மிகப்பெரியது. தாய் மண்ணுக்காகப் பலர் உயிர்த்தியாகம் செய்துள்ளனர். மற்றைய பெரிய கல்லூரிகளோடு ஒப்பிடும்போது இவ்வித்தியாலயத்தில் அதிகமான மாணவர்கள் பங்கேற்றது யாவரும் அறிந்ததே.

எஸ். தில்லையம்பலம்
முன்னாள் உபஅதிபர்

# என் இதயத்திலிருந்து!

எமது யா. கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் 125ஆவது ஆண்டு பூர்த்தி விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதை அறிந்து பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வேளையில் சமீபகால வளர்ச்சி எமக்கு மகிழ்வைத் தருகின்றது.

அந்நியர் ஆட்சியால் தமிழும், சைவமும் நலிவுற்றுக் கொண்டிருந்த காலத்திலே, தமிழையும், சைவத்தையம் வளர்க்க ஆறுமுகநாவலர் பல சைவவித்தியாசாலைகளை நிறுவியபோது ஐயர் ஒருவரால் ஆரம்பிக்கப்பட்டதே எங்கள் சைவவித்தியாசாலையாகும். ஐயரால் உருவாக்கப்பட்டதால் ஐயர் பள்ளிக்கூடம் என்று அன்று அழைக்கப்பட்டது. பெரிய நிலப்பரப்பையுடைய எமது கிராமத்தவர் மட்டுமல்ல அயற் கிராமத்தவர் பலரும் இங்கு கல்வி பயின்று மேன்மை பெற்றனர். தனியார் பாடசாலையாக ஆரம்பித்து அரசாங்கப் பாடசாலையாக மாறி உயர் திரு. செ. நடராசா அதிபர் அவர்கள் காலத்தில் இந்து மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. மாடிக்கட்டிடம், மனையியற் கட்டிடம், சுகாதாரமான வகுப்பறைகள் என புதிய பல கட்டிடங்கள் அதிபரின் ஆக்கத்தாலும் ஊக்கத்தாலும் எம் ஊரவரின் உறுதுணையுடன் நாம் பெற்றவை பலப்பல.

இப்படியாக வளர்ந்திடினும் நாங்கள் கற்ற கற்பித்த காலங்களில் கட்டிட வசதிகள் போதாமை, உயர்கல்வி வகுப்புகளின்மை, விளையாட்டிட மைதானமின்மை, போதிய இடவசதிகளின்மை போன்ற குறைபாடுகள் இருந்தே வந்தன. புலம் பெயர்ந்து இங்கு வாழும் பழைய மாணவர்களாகிய எம்மவர் மத்தியில் இக்குறைபாடுகளை நீக்க ஆவன செய்ய வேண்டும் என்ற பேரெண்ணடம் எழுந்தது. இயந்திர வாழ்க்கையின் மத்தியிலும் ஒன்றுகூடினோம். ஆலோசித்தோம். எம்மாலியன்ற பல உதவிகளை வழங்கினோம். உரியவர்களை அணுகினோம். எங்கள் உதவிகள் வெற்றுச் சங்காக அமையாது. காற்றொலி எழுப்பும் சங்காக அமைந்ததையிட்டு பெருமை அடைகின்றோம். ஆம், எங்கள் செயற்பாடுகளுக்கு அங்கு செயல்வடிவம் கொடுத்து புதிய காணிகள் வாங்கி கட்டிடங்கள் அமைத்து, உயர்கல்வி பெறும் வாய்ப்பினை அளித்து பல்கலைக்கழகம் செல்லும் மாணவர்களையும் உருவாக்கினார் இன்றைய அதிபரும் பழைய மாணவியுமான செல்வி. பா. மார்க்கண்டு அவர்கள். எங்கள் முயற்சி வெற்றியளித்ததையிட்டு பெருமகிழ்வு அடைகின்றோம்.

இவ் வளர்ச்சி மேலும் தொடர வேண்டும். எங்கள் வித்தியாலயத்தில் அறிவுச் செல்வத்தை நிறைவுறப் பெற்று நல்லதோர் சமுதாயம் உருவாக வேண்டும். பிறந்த பொன்னாடு வளம் பெற வேண்டும். இதற்கு என் இதயபூர்வமான வாழ்த்துக்களும் ஆசிகளும் உரித்தாகுக.

பழைய மாணவி
முன்னாள் ஆசிரியை ச. கிருஷ்ணாணந்தா

# கோண்டாவில் சைவ மகா வித்தியாலயம்

யாழ் குடா நாட்டில் சிறந்து விளங்கும் கல்விக் கூடங்களில் கோண்டாவில் மேற்கு சைவ மகாவித்தியாலயமும் ஒன்று. இது மிகப் பழைமையும் புகழும் மிக்க கல்விக்கூடம். 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வாழ்ந்த நல்லூர் ஆறுமுகநாவலர் என்னும் சைவப் பெரியார் சைவத்தையும், தமிழையும் வளர்க்கும் நோக்கில் வண்ணார்பண்ணை, கோப்பாய், கொழும்புத்துறை ஆகிய ஊாகளில் சைவத்தமிழ்ப் பாடசாலைகளை நிறுவினார். கோண்டாவில் மேற்கில் ஓர் ஐயர் தாமும் ஒரு சைவத் தமிழ்ப் பாடசாலையை நிறுவித்தானே தலைமை ஆசிரியராகவும் இருந்து திறம்படக் கல்வி கற்பித்து வந்தார். ஐயர் ஆரம்பித்த பாடசாலை ஐயர் பாடசாலை என்று வழங்கலாயிற்று.

ஐயரின் பின் வேறு சிலரும் இதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து திறம்படக் கல்வி ஊட்டி வந்தனர். 1920 களின் பிற்பகுதியில் இணுவையூர் பெரியதம்பி ஆசிரியர் தலைமை ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். இவர் காலத்தில் இக் கல்விக்கூடம் மிக வளர்ச்சி அடைந்தது. க.பொ.த.ப. வரை வகுப்புக்கள் வைக்கப்பட்டன. பதினைந்துக்கும் மேற்பட்ட ஆசிரியர்களோடும் ஐநூறுக்கும் மேற்பட்ட மாணவர்களுடனும் அக்காலத்திலேயே சிறந்த கல்விக்கூடம் ஆக உயர்ந்து விளங்கியது. கொக்குவில், தாவடி, சுதமலை, இணுவில் போன்ற அயற் கிராமங்களில் இருந்தும் பல மாணவர் வந்து கல்வி கற்றனர். இப்பாடசாலை ஆங்கிலப் பாடசாலைகளின் தரத்திற்கு உயர்ந்துவிளங்கியது. இங்கு கல்வி கற்ற பலர் ஆசிரியர்களாயினர். சிலர் இப்பாடசாலையிலேயே ஆசிரியர் பதவியிலும் பெற்றனர்.

பெரியதம்பி ஆசிரியரின் பின் திரு. இ. பொ. குமாரசாமி ஆசிரியர் தலைமை ஆசிரியர் ஆனார். இவர் இப்பாடசாலையின் பழைய மாணவர் ஆவார். இவர் காலத்தில் பாடசாலைகள் 1960இல் அரசுடமை ஆக்கப்பட்டன.

இவரது அயரா முயற்சியினால் கட்டிடங்கள், வசதிகள் அதிகரித்து மாணவர் தொகையும் பெருகியது. அதனால் மகாவித்தியாலய தரத்திற்கு உயர்த்தப்பட்டது. பின்னர் காலத்திற்குக்காலம் சில அதிபர்கள் வந்து திறம்பட நிர்வகித்தனர். இப்போது இப்பாடசாலையின் பழைய மாணவி செல்வி: மார்க்கண்டு அவர்கள் அதிபர் பொறுப்பேற்று மிகத் திறம்பட கடமையாற்றி வருகின்றார். சமீபத்தில் நானும் என் மனைவியும் இலங்கை சென்றிருந்தபோது இப்பாடசாலையைத் தரிசித்தோம். இன்றைய அதிபர் செல்வி மார்க்கண்டு அவர்கள் இக்கல்விக் கூடத்தினைக் கண்ணும் கருத்துமாகப் பேணி வருவது பாராட்டப்படக்கூடியது. நான் இப்பாடசாலையில் 1935ஆம் ஆண்டு 5ம் வகுப்பில் கற்றுத் தேறியவன். நானும் ஓர் ஓய்வுபெற்ற ஆசிரியர், அதிபர் என்றபடியால் இப்பாடசாலையில் எனக்குக் கற்பித்த ஆசிரியர்கள், பிற்காலத்தில் இங்கு கற்பித்த ஆசிரியர்கள் திறமை பற்றி நன்குஅறிவேன். என் மனைவி திருமதி பத்மாவதி நவரட்ணம் அவர்கள் இப்பாடசாலையில் 18 ஆண்டுகளுக்கு மேல் கல்வி கற்பித்தவர். இன்றும் இங்குள்ள இவரிடம் கல்வி பயின்ற மாணவர்கள் இவரைப் பாராட்டுவது கண்டு பெருமைப்படுகின்றேன்.

125 வது ஆண்டு நிறைவு விழாக்காணும் இக் கல்விக்கூடம் மேன்மேலும் சிறப்பும், பெருமையும், வளர்ச்சியும் பெற வாழ்த்துகின்றேன்.

235 Hupfield Trail
Scarborough, ON.
M1B 4L9
Canada
10.03.2004



சீனிவாசகம் நவரத்தினம்
பழைய மாணவர்
ஓய்வுபெற்ற அதிபர்
யாழ் கொக்குவில் நாமகள் வித்தியாலயம்

# உறுதியான சேவைக்கு உளமார்ந்த வாழ்த்துக்கள்

'ஈதல் இசைபட வாழ்தல் அது அல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு'

என்னும் வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப தாய்மண்ணின் நலன்களில் கண்ணுங் கருத்துமாகச் செயற்பட்டுவரும் கோண்டாவில் நலன்புரிக் கழகமும், கோண்டாவில் இந்து மகாவித்தியாலயப் பழைய மாணவர் சங்கமும் என்ற இவ் அமைப்பின் கீழ் ஒன்றிணைந்து செயற்பட்டு வரும் நல் நெஞ்சங்களைப் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

இச்சங்கத்தின் சேவையால் ஆலயங்கள், பாடசாலை, நூல் நிலையங்கள் கோண்டாவில் கிராமத்தில் வளர்ச்சி காண்கின்றன. இந்த வகையில் கோண்டாவில் மேற்கில் சைவம், தமிழ் ஒழுக்கம், பண்பாடுகளை வளர்த்து வரும் பெருவிருட்சமாக யா- கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் வளர்ச்சிப் பாதையில் செல்கின்றது. பழம் பெருமை வாய்ந்த எமது இப்பாடசாலை நூற்றாண்டு விழாகண்டு, 125வது ஆண்டில் காலடி வைக்கின்றது. 2001ம் ஆண்டில் ரூபா ஐந்து இலட்சம் செலவில் ஒன்பது பரப்புக் காணியை வாங்கித்தந்து கோண்டாவில் இந்துவின் வளர்ச்சியில் ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியது இச்சங்கமே. இதற்காக அப்போது சங்கத்தின் தலைவராக இருந்த திரு.து. இராமச்சந்திரன், மற்றும் திரு ஹேமநாதன் ஆகியோர் எம்முடன் அடிக்கடி தொடர்புகொண்டு மற்றும் அனைத்து உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் அபிமானிகளைத் திரட்டி காரியத்தை நிறைவு செய்ததை நாம் என்றும் மறக்கமுடியுமா?

இக்காணிக் கொள்வனவினால் பாடசாலையில் கற்றல், கற்பித்தற் செயற்பாட்டுடன் ஏனைய திறன்களையும் வளர்ப்பதற்கு வழி பிறந்தது. கற்றற் செயற்பாட்டில் க.பொ.த. (உ.த) வகுப்பில் கலைப்பிரிவு, ஆரம்பிக்கப்பட்டு, 2003 ஏப்பிரலில் நடாத்தப்பட்ட க.பொ.த. (உ.த) பரீட்சையைச் சந்தித்த முதல் தொகுதி மாணவர்களில் ஐவர் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பிக்கும் தகுதியைப் பெற்றனர். இவர்களில் இருவர் வெட்டுப்புள்ளிக்கு மேல்பெற்று 2004ம் ஆண்டு ஜனவரியில் பல்கலைக்கழகம் செல்லவுள்ளனர் என்பதை மகிழ்வுடன் அறியத்தருகின்றேன். தற்போது எமது பாடசாலை 1ஊ தரத்திற்கு உயர்த்தப்பட்டுள்ளது.

மேலும் கனடாவில் வாழும் பழைய மாணவர் வாங்கித்தந்த காணியில் கடந்த இரு வருடங்களாக இல்லமெய் வல்லுனர் போட்டியை நடாத்தி வருகின்றோம். இக்காணியின் உதவியுடன் மென்பந்து, துடுப்பாட்டம், வலைபந்து, உதைபந்தாட்டம் என்பவற்றையும் பயின்று ஏனைய பாடசாலைகளுடன் எதிர்த்து விளையாடி எமது மாணவர்கள் வெற்றிகளும் பெற்றுள்ளனர்.

இலண்டனில் இயங்கும் கோண்டாவில் நலன்புரிச்சங்கம் மூலம் திரு. ச. இராஜ்குமார் அவர்கள் கனடா, ஜேர்மன், சுவிஸ் பழைய மாணவர்களையும் இணைத்து ஒன்றரை இலட்சம் (1 1/2) ரூபா செலவில் வாங்கித் தந்த வீட்டுடன் கூடிய 7 பரப்புக்காணிக்கு இரண்டரை இலட்சம் (21/2) ரூபா முற்பணம் தந்த கனடா பழைய மாணவர் சங்கத்தினை எமது பாடசாலைச் சமூகம் என்றும் மறக்கமாட்டாது. இதற்காக ஜேர்மனியில் வாழும் திரு. சின்னத்துரை புஷ்பநாதனும், சுவிசில் வாழும் திரு. சீவரத்தினம் சௌந்தரும் முன்னின்று உழைத்தனர்.

மேலும் புலம் பெயர்ந்து வெளிநாட்டில் வதியும் பழைய மாணவர்களில் பலர் இங்குவரும்போது தனிப்பட்ட முறையிலும் பாடசாலைக்கு உதவி, ஆலோசனைகளையும் வழங்குவது எமக்கு பெரும் உற்சாகத்தைத் தருகின்றது, திரு. து. இராமச்சந்திரன் அவர்கள் இங்கு வரும்போது எமக்கு அறிமுகப்படுத்திய கொழும்பில் வதியும் இருமாணவர்களான திரு. சோ. சிவகுமார், திரு. ராஜன் ஆகியோர் முறையே கணனித் தொகுதி, ஒலிபெருக்கித் தொகுதி என்பவற்றைத் தந்து உதவினர். இதற்கான பெருமையும் தங்கள் சங்கத்தையே சாரும்.

இவ்வாறான எமது பாடசாலையை வளமூட்டி திறன்கள் மிக்க மாணவர்களை உருவாக்க உரமூட்டி வரும் கோண்டாவில் இந்து பழைய மாணவர் சங்கம் கனடா' என்ற இந்த அமைப்பிற்கு பின்னால் அணிதிரண்டு நிற்கும் அனைவரும் சகல வளமுடனும் வாழ அதன்மூலம் சங்கம் வளர இறை ஆசிவேண்டிப் பிரார்த்திக்கின்றேன்

நன்றி

இங்ஙனம்
**செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டு**
அதிபர்- யா- **கோண்டாவில் இந்து ம.வி.**

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற
எமது நல்லாசிகள்!

# ஸ்ரீ சிவா விஷ்ணு ஆலயம்

"இறை தரிசனம் இணையில்லா இன்பம்"



ஆலயம் சிறக்க உங்கள் சரீர உதவிகளை நாடுகின்றோம்.
சிவா விஷ்ணு கடாட்சத்தைப் பெற்று உய்யும் வண்ணம், வேண்டுகின்றோம்.



தொடர்புகளுக்கு:
ஆலய நிர்வாகம்
சிவஸ்ரீ ச. லலிததாச
குருக்கள்
திருமணப் பதிவு
அதிகாரி

**ஆலயம் திறக்கும் நேரம்**
**Temple Open Time**
9.00 a.m - 1.00 p.m
6.00 p.m - 9.00 p.m

**பூசை நேரங்கள்**
**Pooja Time**
9.30 a.m
12.00 noon
7.30 p.m

**ஸ்காபுரோவிலிருந்து காரில் வரும் அடியார்கள்**
401 W ஊடாக Exit Western Rd. North எடுத்து Right on Sheppard 1st Signal 38 Rivalda

**ஸ்காபுரோவிலிருந்து Busஇல் வரும் அடியார்கள்**
#84 Sheppard West Bus இல் வந்து ஆலய வாசலில் இறங்கலாம்

38 Rivalda Rd., North York, ON M9N 2M3
Tel: 416-740-0062 / 416-740-8929

**அனைத்து இந்துமத கிரியைகள் நடாத்திட அமிர்தமங்கள சேவை**

கோநகர் பொழுது '2004 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

**Call:**
**Aiyathurai (AL) Kamapathippillai**
**Sales Representative**
**PRESIDENT'S, PLATINUM, GOLD, EMERALD AWARD**
**Bus:416-740-4000 (24Hr. Pager)**
**Fax:416-740-8314**
**Res:416-675-0504**
**Cell:416-817-0833**
**HOME LIFE / SUPERSTARS REAL ESTATE LIMITED**
**23 Westmore Drive, Unit #102**
**Rexdale, On M9V 3Y7**



* வீடு, வியாபார நிலையம் வாங்க, விற்க, வாடகைக்குப்பெற

* வைப்புத் தொகையின்றி வீடு வாங்க

* இலாபகரமான வட்டி விகிதத்திற்கு அடமான கடனைப்பெற

* உங்கள் குடும்ப வருமானத்திற்கு அமைவாக எந்தளவு அடமானக் கடன் பெறமுடியும். எத்தகைய வீட்டை வாங்க முடியுமென்ற விபரங்களைப் பெற

* தற்போதைய பெறுமதி மதிப்பீட்டுக்களைப்பெற

மேலும் இலவச ஆலோசனைகளுக்கு இன்றே அழையுங்கள்!

# OWN YOUR DREAM HOME

IF YOU ARE SELLING OR BUYING A PROPERTY

FOR LOW DOWN PAYMENT

TO ARRANGE FOR A MORTGAGE ON VERY ATTRACTIVE RATES FOR REAL ESTATE TRANSACTION

FOR UPDATED EVALUATION

HOMELIFE HIGHER STANDARDS

வீடு

# நூற்று இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவில் யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலய

## வரலாறும் வளர்ச்சியும்

தன் வரலாற்றில் நூற்று இருபத்தைந்து ஆண்டுகள் பழம்பெருமையில் திளைத்தும், நவீன யுகத்திற்கு மாணவர்களைத் தயார்படுத்தும் யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் தனது வரலாற்றுப் பாதையையும் அதனோடு இணைந்த வளர்ச்சியையும் மீட்டெடுப்பதில் மகிழ்ச்சி அடைகின்றது.

## ஆரம்பத் தோற்றமும் வளர்ச்சியும்

எமது கல்விக் கூடம் பிரம்மஸ்ரீ முருகேசு ஐயர் வெங்கடாசலஐயர் அவர்களால் திண்ணைப் பள்ளியாக ஸ்தாபிக்கப்பட்டது. 1878ஆம் ஆண்டு பங்குனி மாதம் 5ந் திகதி திரு. வைரவநாதர் இராமு, திரு.இராமநாதர் ஆறுமுகம் ஆகியோரால் வித்தியாதானத்திற்கு வழங்கப்பட்ட நான்கு கரப்புக் காணியில் இயங்கியது. 1892இல் அரசு அங்கீகாரம் பெற்று நன்கொடை பெறும் நிலைக்கு உயர்ந்தது. திரு.வேலுப்பிள்ளைச் சட்டம்பியார் முதல் உபாத்தியாயராக விளங்கினார்.

தமிழையும் சைவத்தையும் வளர்க்கும் அடிப்படை இலட்சியமாகக் கொண்ட ஐயர் பாடசாலையான இச் சைவ வித்தியாசாலை 1903ஆம் ஆண்டு பிரம்மஸ்ரீ இராமசாமி ஐயர் முத்தையர் அவர்களைத் தர்மகர்த்தாவாகப் பெற்றது. பாடசாலை ஸ்தாபகரும், கோண்டாவிலில் வாழ்ந்த பெருமக்களும் இத் தர்மகர்த்தாகவுக்கு அனுசரணையாக பாடசாலையைப் பரிபாலிக்கவல்ல நிர்வாகக் குழு ஒன்றை உருவாக்கினர். நிர்வாகச் சிறப்பினால் தரம் ஐந்து வரை இயங்கி வந்த இப்பாடசாலை 1915ஆம் ஆண்டில் கனிஷ்ட பாடசாலைத் தரத்தை அடைந்தது. 1928இல் கனிஷ்ட பொதுத்தராதரப் பத்திரப் பரீட்சைக்கு மாணவர்களைத் தோற்றுவிக்கும் அங்கீகாரத்தைப் பெற்றது.

திரு. நா. பொன்னையா, திரு.மு.கனகசிங்கம் ஆகிய முகாமையாளர்களின் காலத்தில் பாடசாலை பல சிறப்புக்களைக் காணப்பதாயிற்று. கனிஷ்ட பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கு முதன்முதல் தோற்றிய மாணவர்களில் திரு.க.வை.சிற்றம்பலம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்), திரு.க.கனகசிங்கம்(ஓய்வு பெற்ற ஆசிரியர்) ஆகியோர் சித்தி பெற்ற பெருமைக்குரியவர்களாவர்.

1928ஆம் ஆண்டிலிருந்து கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கான- சாதனா பாடசாலையாகவும் இப்பாடசாலை விளங்கியது. காலப்போக்கில் திருநெல்வேலி சைவ ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்கு சாதனா பாடசாயையாகவும் விளங்கியது.

1932ஆம் ஆண்டில் சிரேஷ்ட பாடசாலையாக இவ்வித்தியாலயம் தரம் உயர்த்தப்பட்டது. 1932இல் ஒன்றரைப் பரப்பு விஸ்தீரணம் உள்ள காணியையும், 1938ஆம் வருடத்தில் ஏழுபரப்பு

விஸ்தீரணம் உள்ள காணியையும் கொள்வனவு செய்வதற்கு பெரியார் திரு.சி.ஆறுப்பிள்ளை பெரிதும் உதவினார். முகாமையாளரினதும் தலைமை ஆசிரியரினதும் விடாமுயற்சியின் காரணமாக 1950ஆம் ஆண்டளவில் பிரதான மண்டபம் ஒன்று உருவாக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் திரு.மு.கனகசிங்கம் முகாமையாளராகவும், இணுவில் உயர்திருமு..பெரியதம்பி தலைமை ஆசிரியராகவும் விளங்கினர். திரு.மு.பெரியதம்பி தலைமை ஆசிரியரின் காலம் பாடசாலை வரலாற்றில் பொன்னான காலமமாகும். இவரது தலைமைத்துவத்தில் கல்வி அறிவு, ஒழுக்கம், கட்டுப்பாடு கொண்ட மாணவப் பரம்பரை உருவாகியமை குறிபபிடத்தக்க சிறப்பம்சமாகும். இக்காலப்பகுதியில் இப்பாடசாலையின் அயற் கிராமங்களான இணுவில், தாவடி, சுதுமலை, கொக்குவில், திருநெல்வேலி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு கல்வி கற்றனர். இப்பாடசாலையே இக்கிராமங்களுக்குள் பெரிய பாடசாலையாக விளங்கியது. பாண்டித்தியம் பெற்ற ஆசிரியர்களையும், பல்தொழில்நுட்ப விற்பன்னர்களையும் உருவாக்கிய இப்பாடசாலை முத்தமிழையும் சைவத்தையும் வளர்ப்பதில் சிறப்புற்றுத் திகழ்ந்தது.

பாடசாலையை நிருவகிப்பதில் 1952இல் புதிய நிருவாகசபை அமைக்கப்பட்டு, நிருவாக விதிமுறைகள் புதுப்பிக்கப்பட்டன. இப்புதிய நிருவாகசபை-ஊர்மக்களின் ஒத்துழைப்புடன் பாடசாலையின் வளர்ச்சிக்கு திட்டமிட்டு உழைக்கத் தொடங்கியது. மாணவர்களின் முன்னேற்றத்தைக் குறிக்கோளாகக் கொண்ட மனையியல், சங்கீதம், சித்திரம்,, நெசவு போன்ற கல்வித்துறைகள் புகுத்தப்பட்டன. மாணவர்களுடைய தொகையும் அதிகரித்தது. கற்பித்தலை வளமாக்க நல்லாசிரியர்கள் தெரிந்து நியமிக்கப்பட்டனர்.

திரு.மு.பெரியதம்பி தலைமை ஆசிரியரின் பின் 1956ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் பாடசாலை தலைமைப் பெறுப்பை ஏற்றுத் திறம்பட நிருவகித்த அதிபர் திரு.இ.பொ.குமாரசாமி அவர்களின் சேவை போற்றுதற்குரியதாகும். அன்னாருக்கு உதவியாக உப அதிபர் திரு.மு.இளையதம்பி அவர்கள் கடமையாற்றினார். கடமை உணர்வும் செயற்திறமும் மிக்க ஆசிரியர்களின் சேவைகள் போற்றுதற்குரியதாகும். கற்றல் செயற்பாட்டுடன், இணைபாடவிதானச் செயற்பாடுகளும் துரிதமாக வளர்ந்தன.

**அரசு பொறுப்பேற்றல்:**

1960ஆம் ஆண்டுக்காலப் பகுதயில் பாடசாலையை அரசு பொறுப்பேற்றதும் மகா வித்தியாலய கோரிக்கை வலுப்பெற்றது. இதற்கமைய பாடசாலைச் சமூகம் வழிப்புடன் செயற்பட்டதன் காரணமாக விஞ்ஞான அறையும், அதற்குரிய உபகரணங்களும் பெறப்பட்டமையால் விஞ்ஞானக் கல்விக்கு வித்திடப்பட்டது. யாழ்.மாவட்டத்தில் உள்ள தமிழ் மொழிமூலமான பாடசாலைகளுக்குள் தனித்துவமான இடத்தைப் பெற்றமைக்கு பாடசாலையின் இணைபாடவிதானச் செயற்பாடுகள் காரணமாக இருந்தன. ஆசிரியர்கள் கற்றல் செயற்பாட்டுடன் இணைப்பாடவிதானச் செயற்பாட்டிலும் ஈடுபாடு கொண்டு உழைத்தமையால் பாடசாலை முழு நிறைவைப் பெற்றது.

அதிபர் இ. பொ. குமாரசாமி அவர்கள் ஓய்வு பெற திரு.செ.நாகலிங்கம் அவர்கள் பதில் அதிபராக 1971ல் பொறுப்பை ஏற்றுப் பாடசாலையை 1973வரை நிருவகித்து வந்தார். இவர் இக்காலத்தில் பாடசாலையின் கல்வி முன்னேற்றத்திற்கு தனது முழு நேரத்தையும் செலவு செய்தமை குறிப்பிடத்தக்கதொன்றாகும். இக்காலப் பகுதியில் உபஅதிபராகக் கடமையாற்றிய திரு. ஆ. திருநாவுக்கரசு அவர்களின் தொண்டு பாடசாலைக்கு அளப்பரிய சேவைஎன்பது மறப்பதற்கு இல்லை.

இன்று இப்பாடசாலையின் முகப்புத்தோற்ற கவினுறு மேல்மாடிக் கட்டிடத்துக்கு 1972இல் கால்கோள் இடப்பட்டது. பழைய பிரதான மண்டபம் அமைந்திருந்த இடத்தில் மாடிக்கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான முயற்சிக்கு அக்காலப்பகுதயில் அதிபராக இருந்த குப்பிளான் திரு.செ.நடராசா அவர்களும் உப அதிபர் திரு.ஆ.திருநாவுக்கரசு அவர்களும் பாடசாலைச் சமூகத்தை ஒன்று திரட்டி செயற்பட்டனர். இந்த வகையில் கட்டப்பட்ட மேல்மாடிக் கட்டிடத்திற்கு நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் உயர்திரு. சி. அருளம்பலம் அவர்கள் ஒதுக்கிய நிதியுடன் பாடசாலைச் சமூகம் திரட்டிய நிதியும் உதவியது. பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்கம், பழைய மாணவர் சங்க யாழ்-கொழும்புக்கிளைகள், வித்தியாலய ஆசிரியர் கழகம், நலன்விரும்பிகள், கல்வித் திணைக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோரின் ஒத்துழைப்பும் பங்களிப்பும் போற்றுதற்குரியது. அக்காலப் பகதியில் மாணவர்களின் கற்றலுக்கான வகுப்பறைத் தேவையை நிறைவு செய்தமையும் அக்கட்டிடத் திறப்புவிழா 1976.03.11இல் நடைபெற்றமையும் நினைவு கொள்ளத் தக்கதொன்றாகும்.

## நால்வர் திருவுருவ விக்கரகங்கள்.

மேல்மாடிக் கட்டிடத்தின் மேற்பகுதியில் பிரார்த்தனை மண்டபம் அமைந்துள்ளது. சைவ மாணவர்கள் பூசித்து-சமயப் பண்பாட்டை வளர்தெடுப்பதற்கு கோண்டாவில் மேற்கில் வாழ்ந்த அருள் மிகு அம்பலவாணர் சுவாமிகள் வணங்கிப்பூசித்த நால்வர் விக்கிரகங்களை அவர் மருமகர் திரு.இ.அப்பாத்துரை அவர்கள் பாடசாலைக்கு அன்பளிப்புச் செய்தமையும், அந் நால்வரின் குருபூசைத்தினங்கள் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். நால்வரின் அருளால் பாடசாலை நலனோம்பி நிற்கின்றது.

1976இல் அரசமானியத்துடனும் பெற்றார் ஆசிரியரின் நிதி உதவியுடனும் நவீன மனையியற் கூடமும் வகுப்பறை பிரிசுவர்களும் பாலர் கல்விக் கூடத்தேவைகளும் மற்றும் மேலதிக சுகாதார வசதிகளும் உருப்பெற்றன.

## பாடசாலை தரம் உயர்வு

கட்டிட வசதிகளை அபிவிருத்தி செய்த எமது பாடசாலை நீண்டகாலமாக மேற்கொண்ட பலரின் முயற்சியில் மகாவித்தியாலயமாக 1982ம் ஆண்டு தரமுயர்த்தப்பெற்றது. கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு.வ.நடராஜா அவர்கள் இக் காலப்பகுதியில் அதிபராகக் கடமையாற்றினார். அவரின் முயற்சியும் பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் திரு.ச.யோகராசா அவர்களின்

தளர்விலா பெருமுயற்சியும் அக்கால நல்லூர்ப் பாராளுமன்ற உறுப்பினர் திரு.மு.சிவசிதம்பரம் அவர்களின் ஒத்துழைப்பும் மகா வித்தியாலயக் கனவு நிறைவேற உதவியது.

1982.05.22ஆந் திகதி இப்பாடசாலை மகாவித்தியாலயமாக தரம் உயர்த்தப்பட்டது. அக்காலத்தில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த அதிகூடிய புள்ளியாகிய 199 புள்ளியைப் பெற்று பாடசாலைக்கு பெருமையை சேர்த்த செல்வன்.ஜெசிந்தன் என்ற மாணவன் இன்று யாழ்.அரசினர் போதனா வைத்தியசாலையில் டாக்டராக கடமையாற்றுகிறார்.

மேலும் அதிபர் திரு.வ.நடராசா 1985ஆம் வருட கடைசிப்பகுதியில் ஓய்வுபெற பதில் அதிபராக இருந்தவர் திருமதி.ச.முருகையா ஆவார். இவரைத் தொடர்ந்து 1986.03.05இல் வித்துவான் திரு.க.சொக்கலிங்கம் எம்.ஏ அவர்கள் அதிபர் பதவியை ஏற்று பாடசாலைச் சமூகத்தின் ஒத்துழைப்புடன் 14.09.1986இல் பாடசாலை நூற்றாண்டு விழாவைக் கொண்டாடி ‘‘இந்து தீபம்’’ என்ற சிறப்பு மலரையும் வெளியிட்டமை குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாகும்.

1987ல் இந்திய அமைதிப்படை மேற்கொண்ட யுத்த நடவடிக்கையால் மேல் மாடிக்கட்டிடத்தின் கிழக்குப்பகுதி சேதமைடைந்த நிலையில் அதிபர் அவர்களுக்குப் பக்கபலமாக நின்று, அதனைத் திருத்தி அமைப்பதற்கும் பாடசாலையின் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதற்கும் ஒத்துழைப்பு நல்கியவர். உப அதிபராக கடமையாற்றிய திரு.சு.தில்லையம்பலம் அவர்களாவர். பழைய மாணவர் திரு.சி.புவனேந்திரன் அவர்கள் ஆசிரியர் மலகூடம் ஒன்றை அன்பளிப்பாகக் கட்டி உதவினார். இக்காலப்பகுதியில் அத்திவாரத்துடன் பூர்தியடையாத நிலையில் இருந்த திறந்தவெளியரங்கமும் கட்டி முடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்க செயல் எனலாம்.

வித்துவான் திரு. க. சொக்கலிங்கம் அதிபர் கொத்தணி அதிபராகப் பதவி ஏற்றுச் சென்றதன் காரணமாக 1989.06.01ந் திகதியில் திரு. பொ. கதிர்காமநாதன் அதிபராக நியமிக்கப்பட்டார். 1960ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் 50x25’ விஸ்தீரணம் கொண்ட இரண்டாவது மேல்மாடி அத்திவாரம் இடப்பட்டது. யுத்த அனர்த்தங்களின் விளைவால் கட்டிடம் பூர்த்திசெய்யப்படவில்லை.

**வலுப்பெற்ற போரக்காலச் சூழலும் அதன் பணிகளும்.**

போர்ச்சூழலும் கட்டுமீறிய யுத்த அனர்த்தங்களும் யுத்தவிமானக் குண்டு வீச்சுக்களும் மும்மரமாக இடம்பெற்றுக்கொண்டிருந்த இக் காலப்பகுதியில் திரு. பொ. கதிர்காமநாதன், அதிபர் ஓய்வுபெற உபஅதிபராகக் கடமையாற்றிய செல்வி பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்கள் அதிபர்பதவியை 10.12.1990இல் பொறுப்பேற்றார்.

1991ஆம் ஆண்டு நிகழ்வுற்ற யுத்தவிமானக் குண்டுவீச்சின் காரணமாக பாடசாலையின் மேற்குப்பக்கமாக இருந்த 60’x20’ விஸ்தீரணம் கொண்ட கட்டிடம் சேதம் அடைந்தபொழுதும் அதனைத் தற்காலிகமாகத் திருத்தி வகுப்புக்கள் நடைபெற்று வந்தன. தற்சமயம் அக்கட்டடிம் அபாய நிலையில் இருந்தமையால் திணைக்கள அனுமதி பெற்று இடிக்கப்பட்டுள்ளது.

மேலும் அத்திவாரம் இடப்பட்டு பூர்த்தியடையாமல் இருந்த மேல்மாடிக் கட்டிட கூரைவேலை 1994ஆம் ஆண்டில் திணைக்கள உதவியுடன் செய்யப்பட்டது. 1998, 1999களில் இக்கட்டிடப் பூர்திக்கு புனர்வாழ்வு (RRAN) அமைச்சு மூலம் கிடைக்கப்பெற்ற நிதி பயன்பட்டது. புதிய கல்விச் சீர்திருத்தத்திற்கு அமைய தரம் ஒன்று செயற்பாட்டு வகுப்பறைகள் திணைக்கள உதவியுடன் திருத்தம் செய்யப்பட்டு மேலும் G.T.Z (ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம்) உதவியுடன் மாணவர்களுக்கு திருப்திகரமான 5 லட்சம் பெறுமதியான மலசலகூட வசதிகள் பூர்த்தி செய்யப்பட்டன. இதில் 16% உதவி நிறுவன ஆலோசனைப்படி பொதுமக்களிடம் பெறப்பட்டது.

## இணைபாடவிதானச் செயற்பாடுகள்.

மாணவர்களுக்கான இணைபாடவிதானச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகினறன. அந்தவகையில் ஆண் மாணவர்களுக்கான சாரணியம் 1991ல் இருந்து பயிற்சி அளிக்கப்பட்டு சின்னஞ்சூட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றன. இத்துடன் -சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ், மக்கள் நலன்புரிக் கழக சேவையிலும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுச் சேவை ஆற்றிவருகின்றது. மேலும் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள், பரிசளிப்பு விழாக்கள் என்பன மாணவரக்ளின் திறன்களை வெளிப்படுத்தி நிற்கின்றன. 1992ல் நடைபெற்ற தரம்5 புலமைப்பரிசில் பரீட்சையில் கூடிய புள்ளியாகிய 194 புள்ளியைப் பெற்ற செல்வன்.பே.சுபகேசன் இன்று பொறியியல் துறையில் மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் கல்விகற்கிறார்.

## வரலாற்றில் ஓர் திருப்புமுனை

பாடசாலையில் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் புதிய கல்விச் சீர்திருத்தத்துக்கமைய எமது பாடசாலையிலும் நடைமுறைப்படுத்தப் போதிய இடப்பற்றாக்குறை காரணமானது தரம் ஒன்பது வகுப்புக்கான செயற்பாட்டறை, காணி இடவசதி இல்லாமையால் அரசினால் ஒதுக்கப்பட்ட ரூபா பத்து இலட்சம் இழக்கவேண்டிய துர்ப்பாக்கிய நிலையினை நாம் அடைந்தோம். இவ் இழப்பு எமது பாடசாலைச் சமூகத்தை விழித்தெழ வைத்தது.

இப்பாடசாலையின் மாணவியாக, ஆசிரியராக, பகுதித் தலைவராக, அதிபராக என பல நிலைகளிலும் பாடசாலையை வளப்படுத்துகின்ற செல்வி.பாக்கியலட்சுமி மார்க்கண்டு அவர்களின் செயற்திறன் மிக்க தலைமையின் கீழ் உப அதிபர் திரு.இராமலிங்கம், அருணகிரிவாசன் அவர்களின் விடாமுயற்சியும் சக ஆசிரியரக்களின் உந்துதலும், அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவர் சங்கம், நலன் விரும்பிகளின் கரிசனையும் எல்லாவற்றுக்கும் மேலாக இறை ஆசியும், கனடா, ஜேர்மனி,

இலண்டன், சுவிஸ் எனப்பல நாடுகளில் சிறப்புடன் வாழும் பழைய மாணவர்களின் உயிரோட்டமான உதவிகளும் எமது கல்விப் பணிமனையின் தக்க மேற்பார்வையும் ஒன்றிணைந்து இப்பாடசாலைக்கு பல வளங்கள் பெற்றுத் தந்தமை அனைவராலும் பாராட்டப்படவேண்டிய அம்சமாகும்.

தாய் மண்ணில் இருந்து புலம்பெயர்ந்து கனடாவில் வாழும் எமது பாடசாலையின் பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் "கோண்டாவில் நலன்புரிச் சங்கமும் கோண்டாவில் இந்து பழைய மாணவர் சங்கமும்-கனடா" என்ற அமைப்பின் கீழ் ஒன்பது பரப்புப் காணியை 14-03-2001இல் ரூபா ஐந்து இலட்சத்திற்கு கொள்வனவு செய்துதந்துள்ளனர். இவ்விடயத்தில் திரு.து.இராமச்சந்திரன், திரு.தி.கேமநாதன் போன்றோர் பாடசாலையுடன் அடிக்கடி தொடர்புகளை ஏற்படுத்தி உதவினர்.

இக்காணியை நாம் பெற்றுக்கொண்டதன் பிரதிபலிப்புகளை - பல்வேறு நிலையில் நமது பாடசாலை பெற்றுள்ளது.

## 1. க.பொ.த. உயர்தரம்

வகுப்பறைக் கட்டிடப் பற்றாக்குறையும், தளபாடப் பற்றாக்குறையும் எமது பாடசாலையில் நிரந்தரமான ஓர் இடத்தைப் பெற்று-பாடசாலையின் அபிவிருத்திப் பணிக்கு இடையூறாக இருந்தன. இன்று எமது பாடசாலையில் தரம் 1 தொடக்கம் தரம் 13 வரை 775ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 995இன் வலிகாமம் பகுதி இடப்பெயர்வுக்கு முன் 950ற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்றனர். எனவே, இப்பாடசாலையில் மாணவ வளத்திற்கேற்ப-கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை வளம்படுத்தமுடியாமல் போன நேரத்தில் எமக்கு கனடா பழைய மாணவரகள் கொள்வனவு செய்து தந்த காணி கிடைக்கப்பெற்றமையால் க.பொ.த உயர்தர வகுப்பை 2000ம் ஆண்டில் ஆரம்பிக்க முடிந்தது. 2003ஆம் ஆண்டு ஏப்பிறலில் நடைபெற்ற க.பொ.த. பரீட்சையில் சித்தியடைந்த ஐந்து மாணவர்களில் இருவர் இவ்வாண்டு பல்கலைக்கழகம் செல்கின்றனர். செல்வி.ஜெகதீஸ்வரி கவர்ந்தராசா செல்வி.சங்கீதா இராசரத்தினம் ஆகிய இரு மாணவிகளும் பாடசாலைக்குப் பெருமைதேடித் தந்துள்ளனர்.



மேலும் க.பொ.த உயர்தர வகுப்பை நடாத்துவதற்குத் தேவைப்பட்ட தளபாடங்களை பழைய மாணவர் சங்கம் நடாத்திய சீட்டிழுப்பின் மூலம் பெற்ற நிதியினால் பூர்த்திசெய்தோம். க.பொ.த. உயர்தர வகுப்பு ஆரம்பிக்கப்பட்டதால் எமது பாடசாலை 1C என்ற தரத்திற்கு

உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, எமது பாடசாலை வளர்ச்சிக்கு எமது பழைய மாணவரக்ளின் சேவை பாராட்டக்கூடிய தொன்றாகும்.

மேலும் 14/12/2001 ஆம் ஆண்டில் ‘‘கோண்டாவில் மேற்கு, நலன்புரிச்சங்கம்-இலண்டன்’’ என்ற அமைப்பினால் ரூபா ஐந்து இலட்சம் பெறுமதியுள்ள நான்கு பரப்புக் காணி கொள்வனவு செய்து தரப்பட்டது. 20/11/2002ஆம் ஆண்டில் இலண்டன்-கனடாவில் இயங்கும் மேற்படி இரு அமைப்புக்களும் ஜேர்மன், சுவிஸ் நாட்டில் வாழும் பழைய மாணவர்களும் சேர்ந்து வீட்டுடன் கூடிய ஏழு பரப்புக் காணியை ரூபா பதினொன்றரை இலட்சம் பெறுமதிக்கு வாங்கித் தந்தனர். திரு.ச.இராஜ்குமார் அவர்கள் இதற்கு இணைப்பாளராக இருந்து செயற்ப்படார். ஜேர்மனியில் திரு. சி. புஸ்பநாதனும் சுவிஸில் திரு. சீ. சௌந்தரனும் இதற்கு உதவினர்.

மேலும் வெளிநாடு, உள்நாடுகளில் வாழும் எமது பாடசாலையின் பழைய மாணவர்கள் தனிப்பட்ட முறையில் பாடசாலையைத் தரிசித்து தேவைகளை அறிந்து, உதவுகின்றனர். அந்த வகையில் உதவிகளின் விபரம் வருமாறு.

1. தளபாட அன்பளிப்பு: பெறுமதி 50,000-=
   மாணவர் கதிரை மேசைகள்-திரு.த.தயாபரன், திரு.த.பிரபாகரன்
   கோண்டாவில் மேற்கு (திரு.தம்பிராசா பிள்ளைகள்)
   ஓய்வுபெற்ற மருந்துக் கலவையாளர்.

2. கணனி அன்பளிப்பு: பெறுமதி ரூபா 65,000/=
   கோண்டாவில் மேற்கு, திரு.சேனாதிராசா சிவகுார்
   (கொழும்பு சிவா கொம்பியூட்டர் எலக்ரோனிக் நிறுவன உரிமையாளர்)

3. ஒலிபெருக்கிச் சாதனம்: அன்பளிப்பு ரூபா 80,000/=
   திரு.சபாபதி இராஜேந்திரன், உதவிப்பணிப்பாளர் இலங்கை சுங்கத் திணைக்களம் (கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம், கொழும்பு)

4. தமிழ் தட்டச்சு இயந்திரம் அன்பளிப்பு:
   திருமதி ஞானமணி பாலசுப்பிரமணியம்
   (முத்தட்டு மட லேன், கோண்டாவில் மேற்கு.)

5. தொலைபேசிச்சேவை அன்பளிப்பு:
   (இல 222 7641) திருமதி லீலாராணி தனபாலசிங்கம்
   (கோண்டாவில் மேற்கு)

6. ஆசிரியர் மேசைகள் அன்பளிப்பு:

திரு.த.ஞானக்குமரன்

(கோண்டாவில் மேற்கு, பொறியியலாளர், சிங்கப்பூர்)

7. விஞ்ஞானகூட அறை பயன்பாட்டு ஸ்ரூல்கள் அன்பளிப்பு:

கோண்டாவில் மேற்கு, திரு.பொ.இராசரூபன், கனடா

8. 5அடி உயரங் கொண்ட 1சோடி குத்துவிளக்கு, - திரு. திருமதி. தங்கராசா - கோண்டாவில் மேற்கு (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

9. கிணறு திருத்தம், உதவியோர் திரு. எஸ். தங்கராசா குடும்பம்

(ஓய்வு பெற்ற ஆசிரியர்)

திருமதி தர்மலிங்கம் குடும்பம்

(நெட்டிலைப்பாய், கோண்டாவில் )

10. குழாய்க்கிணறு அன்பளிப்பு:

திரு.சி.புனேந்திரன்(பழையமாணவர்-கோண்டாவில் மேற்கு)

(திரு.சி.அருளம்பலம் ஞாபகார்த்தமாக முன்னாள் நல்லூர் பாராளுமன்ற -உறுப்பினர்)

11. பாடசாலை முகப்பு வளைவு அன்பளிப்பு:

திருசி.ஜெயதாஸ் (ஜேர்மனி)

(ஸ்ரேசனடி, கோண்டாவில் கிழக்கு)

12. மின்மோட்டார்: திருமதி ம.கதிர்காமநாதன்

(பழைய மாணவி, ஆசிரியர் யா/கோண்டாவில் சி.சி.த.க.பாடசாலை)

இவற்றைவிட பாடசாலைக்கென வாங்கப்பட்ட காணிகள் திருத்தம் உட்கட்டமைப்பை அழகுற அமைத்தல், நீள மேசை, அலுமாரிகள் அன்பளிப்பு, மின்வேலைகள், நீர் விநியோகக்குழாய் அமைத்தல், தொண்டர் சேவையில் உள்ளோர்க்கு மாதாந்த உதவிகள் எனப்பல வகையிலும் பலர் உதவியுள்ளனர்.

திருமதி. செ.பராபரம், திருமதி.மீ.ஞானசேகரம், திரு.S.தியாகமூர்த்தி, திரு.க.தியாகமூர்த்தி, திரு.இளங்கோவன், திரு.காளிதாஸ், திரு.த.சிவலிங்கம், திரு.ஆ.குகநேசன், திரு.இ.பாஸ்கரன், திரு.த.தர்மசீலன், திருமதி.இ.நவரத்தினராசா, திரு.எஸ்.பிரதீசன், திருமதி.சு.பரந்தாமன், திருமதி.து.திருநாவுக்கரசு போன்ற இன்னும் பலர்.

மேலும் வருடாந்த பரிசளிப்பு விழா, இல்ல மெய்வன்மைப் போட்டி என்பவற்றைத் திறம்பட நடாத்ததுவதற்கு இயற்கை ஊற்றுப்போல் (சிறிதாகவும், பெரிதாகவும்) உதவும் உள்ளங்கள் இருப்பதால் தொய்வின்றி கோண்டாவில் இந்து அன்னை வளர்கின்றாள்.

**நன்றி.**

**திருமதி. கடம்பமலர் விமலராஜா,**
ஆசிரியர்
யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

கோநகர் பொழுது '2004 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

# நீலம் சில்க்

"சுபமுகூர்த்தப் பட்டு புடவைகளுக்கு இராசியான இடம்

நீங்கள் விரும்பும்
நவீன டிசைன்
பட்டுப் புடவைகள்
பற்பல தெரிவுகளில்
பெற்றிட... நீலம் சில்க்

விசேட தெரிவுகளில்
குறைந்த விலைகளில்
2004ஆம் ஆண்டிற்கான
கூறைப் புடவைகள்,
காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள்,
மைசூர் சில்க், காஷ்மீர் சில்க்,
பஞ்சாபிகள், பட்டு வேட்டிகள்,
கொட்டன்வேட்டிகள், ரெடிமேற்
பிளவுஸ்கள்,
சிறுவர் - சிறுமியர்க்கான
ஆடைகள், சர்வாணிகள்,
தலைப்பாகைகள்,
பரதநாட்டிய ஆடைகள்,
ஆபரணங்கள், Temple Jewellery
அத்தனையும் பெற்றுக்கொள்ளலாம்.





**INDIAN BAZZAR**
1453 Gerrard Street East,
Toronto, Ontario
Tel.: (416) 778-7455

**KENNEDY & EGLINTON**
2378 Eglinton Ave. East
Scarborough, Ontario
Tel.: (416) 759-2002

கோநகர் பொழுது '2004 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

# LOVELY DIGITAL VIDEO

**3420 LAWRENCE AVE. EAST, UNIT #4, SCARBOROUGH, ON**
**(MARKHAM & LAWRENCE)**
**TEL:416-438-6464 / 416-464-3363**

பழைய, புதிய தெளிவான
வீடியோ பிரதிகள்
வாடகைக்கும்
விற்பனைக்கும்

DVD, VCD வாடகைக்கும்
DVD, DVD SONGS, VCD,
VCD SONGS
AUDIO CD,
AUDIO CASSETTES,
VHS SONGS
விற்பனைக்கும்

**WE ALSO SELL GIFTS, TOYS & PHONE ACCESSORIES**




DVD இல் இருந்து VHSற்கு பதிவு செய்த
அனைத்து படங்கள், பாடல்கள் புதிய வீடியோ
பிரதியில் பதிவு செய்யப்பட்டவை
மிக மலிவு விலையில்....

# என் உள்ளத்திலிருந்து......



இன்று 125வது அகவையைத் தாண்டிநிற்கும் கல்விக் கூடமாம் யா/கோண்டாவில் இந்து மாவித்தியாலயத்தில் கல்வி கற்று கடல்கடந்து கனடா சென்று '**கோண்டாவில் இந்து மாவித்தியாலய பழைய மாணவர் சங்கமும் நலன்புரி மன்றமும் கனடா**' எனப் பெயர் அமைத்து தாய் மண்ணின் உயர்விற்காக ஊதியத்தில் ஒரு பகுதியை ஈந்து எட்டாவது அகவை நிறைவில் கால் பதிக்கும் மேற்படி மன்றம் வித்தியாலய 125வது விழாவைக் கொண்டாடி மலர் வெளியிடுவது கண்டு மனம் பூரித்து நிற்கிறது வித்தியாலய சமூகம். அவர்களில் ஒருவராக நின்றுஇறை ஆசி வேண்டி நானும் வாழ்த்துகிறேன். வாழ்க இச்சங்கம், வளர்க அதன் தொண்டு, எம் சரீரம் சீராகவும் செழிப்பாகவும் இயங்குகின்தென்றால் சமபோசாக்கைப் பெற்று, தூய்மையான சூழலைப் பெற்று, சம நிலை பேணி ஒவ்வோரு உறுப்புகளும் தன் தன் வேலையைச் செவ்வனே செய்கின்றன என்பதே அர்த்தம். மூளை இன்றி உடல் இயங்குமா? இதயம் இன்றி உடல் இயங்குமா?இவ்வாறு எந்த சிறு உறுப்பேனும் இன்றி நிறைவான வாழ்வை இச்சரீரம் அடையமுடியாது. இதைப் போன்றதே எந்த ஒரு நிறுவனத்தினதும் சுகவாழ்வு - யாரால் இதன் வளர்ச்சி? என ஆராயத் தலைப்படக்கூடாது. ஆயின் ஆது போட்டியாகி அஸ்த்தமனத்துக்கே வழிகோலும். ஒரு நிறுவனத்தில் இருந்து ஒரு சிறு உதவியாளன் கூட வெளியேறாமல் நாம் கவனிக்கவேண்டும். எதிரியையும் நண்பனாக்கவழி வகை தேடவேண்டும் கல்விக்கூடத்தைஆரம்பித்து சீராக வளர்த்தெடுத்து எம் கையில் தந்த எம் முன்னோருக்குநன்றி கூறி, எம் கடமையைச் சரிவரச் செய்து ஒன்று பட்டு மேலும் வளர்த்து அடுத்த சத்ததியிடம் நன்றியைப் பெறக்கூடியவாறு நாம் கையளிக்கவேன்டும். எனவே இறைவனால் எமக்களிக்கப்பட்ட இச்சந்தர்ப்பத்தை "**....தன் கடன் அடியேனையும் தாங்குதல் என் கடன் பணி செய்துகிடப்பதே**" என இறை நம்பிக்கையுடன் செய்வோம்.

கல்விக் கூடத்திற்காக நாம் செய்யும் பணி அதிபருக்கானதோ, ஆசிரியர்களுக்கானதோ, சங்கங்களை நடாந்துபவர்களுக்கானதோ அல்ல. காலம் காலமாக வரும் பிஞ்சு உள்ளங்களுக்கானது. இது ஒரு இறை தொண்டு. எனவே நாம் எல்லோரும் ஒன்று திரண்டுகற்றல் கற்பித்தல் சிறப்படையவும், பௌதிகவளங்கள் சிறப்படையவும், விளையாட்டு, தொழில் கல்விபோன்ற இணைபாட செயற்பாடுகள் சிறப்படையவும் பணிசெய்வோமாக.

நன்றி

.......................................

(இ.அருணகிரிவாசன்)

உப அதிபர்

கோநகர் பொழுது '2004 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

# JET TRAVELS

**BETTER PRICE * GREAT SERVICE**

## The Best Choice

சகல நாடுகளுக்கும் குறைந்த விலையில் நிறைந்த திருப்தியுடன் பறந்து செல்லவும் உங்கள் சகல பிரயாணத் தேவைகளுக்கும் அழையுங்கள்

**JET TRAVELS**

4429 Sheppard Ave. East
Scarborough, Ont. M1S 1V3
(Brimley & Sheppard)
Tel:416-291-0177
Fax:416-291-4049
E-mail: jettravels@on.aibn.com



# OHM SIVA'S TRADING CO. LTD

**3852 Finch Ave. East (Kennedy & Finch)**
**Scarborough, Ont. Tel: (416) 321-2739**

**ALL TYPES OF FRESH FISH, SQUIDS, PRAWNS AND OTHER SEA FOODS AT COMPETITIVE PRICES**

**மூன்று உயர் விருதுகள் பெற்ற நீண்டகால வத்தகர்**

* சகல இலங்கை, இந்திய உணவு வகைகளும், சரக்கு வகைகளும் மலிவாக எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
* சகல மரக்கறிகளிலும் மொத்த விற்பனை விலையில் 10% கழிவு.
* றோல்ஸ், வடை மற்றும் சகல சிற்றுண்டி வகைகளும் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.
* சகல இறைச்சி வகைகளும் மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம்.




FRESH SEAFOOD



# பனி விழும் பூமியில் ஓர் பவள மலர்



யாழ்ப்பாண மண்ணின் செம்புல நிலத்தில் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் கலைமகளின் பேரொளியில் கல்விமகளாக நிமிர்ந்துள்ளது. 125வது ஆண்டு நிறைவில் நாற்றுக்களின் மீட்டல்களை நனவோடையாக்கி மகிழ்கின்றது.

அந்த வகையில் யாழ்ப்பாணம் கோண்டாவில் இந்து மகாவித்தியாலயத்தின் கனடா பழைய மாணவர் சங்கம் முத்துக்குவியலாக மலர் ஒன்று கோர்ப்பது கண்டு மகிழ்கின்றேன். பாராட்டுகின்றேன், வாழ்த்துகின்றேன். பூமிப்பந்தில் எங்கு வாழ்ந்தாலும் யாழ்ப்பாணப் பூமியின் கல்விக்கூடங்களின் பழைய மாணவர்கள் மழலை வயதில் தமிழ் தந்த அகரப் பாடசாலைகளையும், ஆற்றல்களை வளர்த்த பாடசாலைகளையும் மாறக்காமல் தமது உழைப்பின் பெரும்பகுதியை தாய்நிலத்தின் பாடசாலைகளின் கல்வித் தேவைகளுக்குக் கொடை கொடுக்கும் வள்ளல் நிலை, மழை கொடுப்பதிலும் பார்க்க மிக அதிகமாக நீள்கினறது. பெற்ற தாயும், பிறந்த பொன்னாடும், கற்றதாயும் வழங்கிய சத்தியாம்கொடை, கொடையாகி உயர வாழ்த்துக்கள்.

பனிவிழும் நிலத்தில் சிலிர்த்திடும் பூக்கள், சிந்திடும் ஒளியில் தாய்நிலம் குளிர்ந்திடும் தவநிலையில் நிமிர்கின்றது. தேன்மொழியை உள்வாங்கியவர்கள் பொழிந்திடும் திரவிய தரிசனத்தில் குவிந்திடும் பொற்பாளங்கள் யாழ்ப்பாண மண்ணின் கல்வியை வளர்த்திட கொடை நதியாகிப் பாய்கின்றது.

தொல்காப்பிய சூத்திரங்கள், திருக்குறள் மணிவரிகள், இராமாயண கோலங்களுக்கப்பால், முடிசூடப்பட்ட தமிழால் முடிசூடப்பட்ட தமிழர்கள் இன்று அறிவியல் நுழைவுக்குள் தம்மை நுழைத்து உலகமுழுமையுடன் உழைக்கின்றார்கள். துயிலுக்கும் செல்லாத சூரியன் போல இவர்கள் உழைப்பதால் யாழ் மாவட்ட பாடசாலைகள் பல நவயுக தரிசனத்தில் உயர்கின்றன. பாடசாலைத் தலைமைகள் பெற்றோரையும் பழைய மாணவர்களையும் இரு கரங்களாக்கி சமநிலை வழங்கி தோழமை பாராட்டும் போது கனடா என்ன, உலகம் முழுவதும் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் வரலாறு நூறு, நூறு பூக்களாக வெளியிடப்படும்.

காணி நிலம் வேண்டும் அங்கே தூணின் மாடத்தில் காணும் ஒளிவிளக்கில் கல்வி வளர வேண்டும். அதற்காக கோண்டாவில் மகா வித்தியாலயத்திற்கு ஒன்பது பரப்புக் காணியைக் கொள்வனவு செய்த இப்பாடசாலையின் கனடா பழைய மாணவர் சங்கம் நாம் வாழும் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட்டு விட்டார்கள்.

கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அதிபரின் ஆளுமையின் செழிப்பு ஒரு மலரின் பிரகடனமாக அமைகின்றது. ஆசிரியர்களின் ஆளுகை, மலரின் ஆலாபனையாக உயர்கின்றது. மாணவர்களின் நிமிர்வு முழு உலகத்திற்கும் முழுமையைக் காட்டுகின்றது.

யாழ்ப்பாணம் கோண்டாவில் இந்து மகாவித்தியாலய கனடா பழைய மாணவர்கள் மழலை வயதில் தமிழ் தந்த வித்தயாலயத்திற்குக் கனிப் பூக்களால் ஆராதனை செய்யும் அரும்பெரும் செயல் எனது பாராட்டையும் வாழ்த்தையும் நிறைந்து பெறுகின்றது. ஒவ்வொரு பாடசாலைகளின் இதயக் கனிகளான பழைய மாணவர்கள் உள்ளத்திலுள்ள உண்மை ஒளி உலகம் முழுவதும் வெற்றிகள் குவிக்கும்.

**ப. விக்னேஸ்வரன்,**
வலயக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.
27.02.2004.

# ஐயர்ப் பாடசாலை பற்றிய எனது இனிய நினைவுகள்

(செல்லப்பா நடராசா,

(பாராளுமன்ற முன்னைநாள் சிரேஷ்ட ஹன்சாட் அறிக்கையாளர்).

இற்றைக்கு அறுபது வருடங்களுக்கு முன்னர் சிறு வயதில் நான் ஐயர்ப் பாடசாலையில் கல்வி கற்ற காலத்தில் இப்பாடசாலை யாழ்ப்பாணக் குடாநாட்டில் மிகப்பெரிய தமிழ்ப் பாடசாலைகளுள் ஒன்றாக விளங்கியது. இதன் காரணமாக கோண்டாவில், கொக்குவில், இணுவில், சுதுமலை, தாவடி, திருநெல்வேலியைச் சேர்ந்த பலநூறு மாணவர்கள் இங்கு கல்வி கற்கலாயினர். கோண்டாவில் சைவத் தமிழ்க் கலவன் சாதனா பாடசாலை என்பது உத்தியோகபூர்வமான பெயராகும். கோப்பாய், திருநெல்வேலி ஆசிரிய பயிற்சிக் கல்லூரிகளைச் சேந்ர்ந்த ஆசிரிய மாணவர்களுக்கான சாதனா பாடசாலையாகவும் இது விளங்கியமையால் சாதனா பாடசாலையயாயிற்று. சுமார் எழுபத்தைந்து வருடங்களுக்கு முன்பே இங்கு சிரேஷ்ட (S. S.C) வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டு விட்டன. ஐயர்ப் பாடசாலைக்குப் பிற்பட்ட காலத்திலேயே யாழ், கொக்குவில் இந்துக் கல்லூரிகளும், இராமநாதன் மகளிர் கல்லூரியும் தோன்றின எனலாம். இவற்றிலிருந்து ஐயர்ப் பாடசாலையின் தொன்மையும் புகழும் புலப்படும்.

தவத்திரு முருகேச ஐயர், வெங்கடாசல ஐயர் அவர்களால் (1878 ஆம் ஆண்டில்) தாபிக்கப்பட்ட கல்விக் கூடமாகையால் பொதுமக்களால் ஐயர்ப் பாடசாலை என அழைக்கப்படலாயிற்று. இது காரணப் பெயராகும். இன்று வரை இப்பெயர் நிலைத்துவிட்டது.

### யான்பெற்ற புலமை:-

ஐயர்ப் பாடசாலையில் பெற்ற தமிழ்ப் புலமையும் இலக்கண இலக்கிய அறிவுமே என்னைத் தினகரன் அலுவலகத்தில் பணிபுரிய வைத்தது. பின்னர் பாராளுமன்றத்தில் பணி புரிவதற்கும் யான் ஐயர்ப் பள்ளிக்கூடத்தில் பெற்ற அறிவே காரணமாய் அமைந்தது.

எனது காலத்தில் இணுவிலைச் சேர்ந்த மு. பெயரிதம்பி என்பார் தலைமை ஆசிரியராக இருந்தார். உயர் வகுப்புக்களில் எங்களுக்கு தமிழ் இலக்கியம் போதித்தவர் இவரே. இலக்கணம் பிழை இன்றி எழுத து. சங்கரபபிள்ளை உபாத்தியாயரிடம் கற்றுக்கொண்டோம். இவர்கள் இருவரிடமும் பெற்ற புலமையே இன்று யான் மூத்த பத்திரிகையாளர் என மதிக்கப்படுவதற்கும் காரணமாகும். பெரியதம்பி உபாத்தியாயர் பெரியகுடுமிக்காரர். எந்த நேரமும் கையில் பிரம்பு அல்லது பூவரசந்தடி வைத்திருப்பார். மிகமிகக் கண்டிப்பானவர். பாடங்களில் பிழைகள் விடும் மாணவர்களைப் பிரம்பினால் பதம் பார்த்துவிடுவார்.

### தொடையில் புழு எடுப்பார்:-

சிறு வயதில் எங்களுக்குக் கணிதம் படிப்பித்த சண்முகம் ஆசிரியர் பெரிய முறுக்கு மீசைக்காரர். மேலங்கி அணிவது அவர் வழக்கமல்ல. வேட்டியுடன் சால்வை மட்டுமே அணிவார். சிவப்பேறிய விழிகளை உடையவர். பார்க்கப் பயப்படுவோம். தவறிழைப்பவர்களுக்குத் தொடையில்

புழு எடுக்கிறேன் என்று சொல்லி நன்றாக நசிநசியென்று நசித்து அழுத்தி நுள்ளிவிடுவார். அவரின் கொடிய நுள்ளுக்குப் பயந்து என்றுமே அவர் சொல்லித்ரும் கணக்குகளைச் சரியாகச் செய்வதுண்டு. வீட்டுப்பாடங்களையும் முறையாகப் பாடமாக்கி விடுவோம். குருக்கள் வாத்தியார் என அழைக்கப்பட்ட நடராசா உபாத்தியாயர் தலையில் ஓங்கிப் பலமாகக் குட்டி மாணவர்களைத் திருத்தும் பண்பினர்.

## பூரணமாய் விளங்கிச்சுதோ?:-

அப்பாப்பிள்ளை உபாத்தியாயர் தூய வெள்ளைவேட்டி மேலங்கி நீண்ட சால்வை அணியும் வழக்கமுடையவர். வெள்ளைத் தலைமுடிக்குச் சொந்தக்காரர் அவர். பாடமுடிவில் **"பிள்ளைகளே உங்களுக்கு எல்லாம் பூரணமாக விளங்கிச்சுதோ"** எனக் கேட்பார். மாணவர்கள் அனைவரும் **"ஓம்"** எனப் பலத்த குரலில் சொல்லிய பிறகுதான் அடுத்த பாடத்தை ஆரம்பிக்கும் குணம் அவருடையது.

இ. பொ. குமாரசுவாமி ஆசிரியர் நடு உச்சிவிட்டுத் தலைசீவி சந்தனப் பொட்டணிந்து சால்வையை உர்தரீகமாக மடித்துப் போடும் பழக்கமுள்ளவர். மிகத் திறமைவாய்ந்த எனது ஆசிரியர்களுள் அவரும் ஒருவர். அனேகமாக எனது காலத்து ஆசிரியர்கள் அனைவரும் சால்வை அணியும் வழக்கம் உடையவர்கள்.

## சால்வையுடன் மாணவர்கள்:-

1940ஆம் ஆண்டு காலப் பகுதியில் உயர்வகுப்பு மாணவர்களுள் பலர் மேலங்கி அணியும் வழமை உடையவர்கள் அல்லர். சால்வை அணிந்து பாடசாலைக்கு வருவதையும் சிலர் வழமையாகக் கொண்டிருந்தனர். இச் சுவையான தகவலை இன்று எவரும் நம்ப மாட்டார்கள். யான் நேரில் அவதானித்த விடயம் இது.

என்னைக் கற்பித்த ஆசிரியர்களில் ஆ. சம்பந்தர், மு. இளையதம்பி, இ. நாகலிங்கம், எஸ். முத்துத்தம்பி ஆகியோரை யான் என்றும் மறக்கமுடியாது. நல்லம்மா, தங்கரத்தினம், தங்கம்மா ஆகியோர் என்றும் நினைவுகூரத்தக்க ஆசிரியைகளாவர். எங்களைப் பற்றுப்பாசத்துடன் கற்பித்து ஆளாக்கிய பெருமை இவர்களுக்குண்டு. தமது வகுப்புக்களில் அன்பையும் சொரியும் பண்பு இவர்களிடம் மிகுந்திருந்தது.

அந்தக் காலத்தில் நாங்கள் பாடசாலைக்குச் செல்லத் தவறுமிடத்து வகுப்பாசிரியர் எங்களைத் தேடி எங்கள் இல்லத்துக்கே வந்துவிடுவார்.

## மிகுந்த கரிசனை:-

மாணவர்கள் சுகவீனமுறும் காலங்களிலும் ஆசிரியர்கள் மிகுந்த கரிசனையுடன் அவர்களை நாடிவந்து பெற்றோர்களிடம் சுகநயங்களைக் கேட்டறிவதுண்டு, ஐயர்ப்பாடசாலை மாணவர்கள் எவரும் ஆறு தசாப்தங்களுக்கு முன்னர் பாத அணிகளைப் பாவித்ததாக எனக்கு ஞாபகம் இல்லை.

## நவராத்திரி காலங்களில்:-

நவராத்திரி காலங்களில் நாங்கள் ஆசிரியர்கள் தலைமையில் வீடுகள் தோறும் சென்று, நவராத்திரிப் பாடல்களைப் பாடிக் காசுசேர்ப்பதுண்டு. **"கன்னித் திங்கள் வருகிறதம்மா கருத்துடன் நவராத்திரியாம் கன்னிகை அம்மன் பூசைகள் செய்யக் காசுபணம் வேண்டும்....................."** எனப்பாடுவோம். வீடுகள் தோறும் ஒரு ரூபா தருவார்கள். அதுவே அந்தக் காலத்தில் மிகப்பெரிய சன்மானமாகும். ஒரு தங்கப்பவுணைப் பத்து ரூபாவுக்கு வாங்கக்கூடியதாக இருந்த காலமும் ஒன்றிருந்தது. அதனால் தான் பத்து ரூபாவை ஒரு பவுண் என்று நாங்கள் சிறுவர்களாக இருந்த காலத்தில் முதியவர்கள் கணக்குப் பார்ப்பதுண்டு. நவராத்திரி காலத்தில் இருநூறு ரூபா சேர்ந்தால் இருபது பவுண் சேர்ந்ததாகக் கருத்துப் பரிமாறிக் கொள்வார்கள்.

## கற்பலகையும் கற்கூரும்.

நாங்கள் பாலர் வகுப்பில் படிக்கையில் கற்பலகை, கற்கூருடன் பாடசாலைக்குச் செல்வதுண்டு.வளர வளர மைக்கூடும் எழுதுகோலும் கொண்டு பாடசாலைக்குச் சென்றிருக்கிறோம். எழுதுகோலால்மையைத் தொட்டு எழுதியபின் மை காயாமல் இருந்தால் ஒற்றுத்தாளைப் பயன்படுத்துவோம். உயர் வகுப்பு மாணவர்களையே ஊற்றுப் பேனாவைப் பயன்படுத்த ஆசிரியர்கள் அனுமதிப்பதுண்டு. இன்றைய இளஞ் சந்ததியினர் இவற்றை எல்லாம் அறியமாட்டார்கள். அந்தக் காலத்தில் பிள்ளைகள் எல்லோரும் ஐந்து வயதில்தான் பாடசாலையில் அரிவரி வகுப்பில் சேர்க்கப்பட்டுவதுண்டு. (அரிவரி என்பது தற்போது தரம் ஒன்று)

ஐயர்ப் பாடசாலை வளவில் பாரிய இலுப்பை மரங்கள் எங்கள் காலத்தில் நின்றுள்ளன. அவற்றின் கீழ் நாம் விளையாடியதும் இலுப்பைக் கொட்டைகளைப் பொறுக்கியதும் இன்றும் பசுமை நினைவுகளாக உள்ளன.

எம்மைப் போன்று ஐயர்ப் பாடசாலையை மறவாத பழைய மாணவர்கள் பலர் கனடாவில் இருப்பதையிட்டு நாம் மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றோம். இவர்களின் அளப்பரிய தொண்டுகளால் இன்று மகாவித்தியாலய வளங்கள் பல்கிப்பெருகியள்ளன. இதற்குக் காரணமான கனடாவிலுள்ள பழைய மாணவர் சங்கமும் நலன்புரி மன்றமும் என்ற அமைப்பின் அனைத்து அங்கத்தவர்களையும் பாராட்ட விரும்புகிறேன். திரு. து. இராமச்சந்திரன் மற்றும் திரு. தி. கேமநாதன், திரு. அ. பாலசுப்பிரமணியம் ஆகியோருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக.

இவர்கள் எடுக்கும் விழாவும் மலர் வெளியீடும் பெருஞ் சிறப்படைய யான் பரிபாலனசபைத் தலைவராக இருக்கின்ற நெட்டிலைப்பாய் பிள்ளையாரின் திருப்பாதக் கமலங்களை இறைஞ்சுகின்றேன். வாழ்க வளர்க கனடா வாழ் கோண்டாவில் இந்து மகா வித்தியாலய பழைய மாணவர்களின் கல்விப்பணிகள்.

கோநகர் பொழுது '2004 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

# Gasa Restaurant

**TAKE OUT - CATERING**



**Specializing in**
**கொத்துரொட்டி & ரோல்ஸ்**

தாயகத்தை நினைவு கூரும் அறுசுவை உணவுகளைப் பெற்றுக் கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய இடம்!

சோறு கறி, தோசை, புட்டு, சிங்கப்பூர் நூடில்ஸ், புரியாணி, இடியப்பம் மற்றும் சகல உணவு வகைகளும் சுடச்சுட பெற்றுக் கொள்ளலாம்

**GASA: (416) 321-1219**

**2950 KENNEDY ROAD, UNIT #3 SCARBOROUGH, ON**
**(KENNEDY & FINCH) TEL.: (416) 321-1219**

---

கோநகர் பொழுது '2004 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!



# VIMIKA



**Banquet Hall & Catering**

திருமணம், பிறந்தநாள், பூப்புனித நீராட்டு விழா, கல்லூரி ஒன்றுகூடல் மற்றும் சகலவிதமான வைபவங்களையும் ஆடம்பரமாகக் கொண்டாடிட எம்மை நாடுங்கள்.

ஸ்காபரோவிலும் மண்டப ஒழுங்குகள் செய்து தரப்படும்.

ஜேன் அன் பின்ச் சந்திப்பில் 50 பேர் முதல் 800 பேர் வரை அமர்ந்து கொண்டாடி மகிழ்ந்திட மிகப் பிரமாண்டமான அழகிய மண்டபத்துடன் கூடிய ரேக் அவுட்டும் கேற்றறிங்கும் செய்து தரப்படும்.

1959 Finch Avenue West, Downsview, ON M3N 2V3

Tel:416-746-1223 Cel:416-917-1518 Fax:416-746-1053

**www.vimika.com**

# CULTURAL HERITAGE OF SRI LANKA

**Introduction : What is heritage?**

Heritage means the forefathers at a region or a certain place lived in a manner in which they cultivated crops, did trade, worshiped the gods and goddesses, and they spoke languages. the language is the main criterian to measure a heritage's distribution through the ages. The UNESCO Courier [September 1997, page 6.] defines the term heritage as that" the term cultural heritage refers to monuments, groups of building, and sites with historical, aesthetic, ethnilogical or anthropological value. Natural heritage refers to outstanding physical and geological formations, habitates of thereatened species if animal and plants, and areas, with scientific. Conservations or aesthetic value.

The heritage consists a wider scope of explantions in the point of view of anthropology and archaeology. Anthropology defines the boundary of heritage that comprises the expression of lineage of heriditery genious and glorious human past. Archaeology frames the heritage within the human evolution and human archivements. Our present knowledge on all walkis of life was attained because of our ancesters themselves preserved and handed over their forefathers property of knowledge of heritage to present generations.

The term heritage is not only deemed for human world, but also catagorises the day today life of the animaal world. When man was appeared in this world, he never distinquished his life from the rest of the animal world. In the inception of his life, he had to enact as an animal in order to savegurad from the terrible animals like Lions, Tigers and Lieobad. In short, he lived as an animal which lived in the density forests. Therefore, the term heritage includes the both activities of the forerunners, i.e.man and animals. Then, in the course of time, man has invented to domesticate few animals, such as dogs, horses, pigs, oxen etc.. Thus the term heritage has a wider meaning which relates the human kinds with animal world. Sri Lanka also is not exceptional one for this concepts and this island has its heritage from 30000 years before present.

## HERITAGE OF SRI LANKA.

Sri Lanka is well known for its longest heritage in the world. As far as the historic years is concerned 2500 years of long period of cultural heritage links the island Sri Lanka with the rest if the world. The location of the island has itself proposed the high standard of hydralic civiliza-

tion in this world. In the world heritage, the China comprises the first place in the irrigational technology and the Island Nation, Sri Lanka is in the second place. In the local history, Sri Lanka civilization, the term RAJARATA CIVILIZATION denotes the marveous achivement of irrigational technology through which the heritage of island took shape. Thus the interior structures of cultural heritage of Sri Lanka were based on out of the means of surplus productions, derived from the irrigational technology. The religions like Hinduism and Buddhism were playing very important roles in shapping up the superstructures of cultural patterns in Sri Lanka through the ages.

The builders of the large tanks and traditions during the ancient period in Sri Lnka were Proto - Dravidians. They were the first builders of the statecraft in this island and they were responsible for the first introduction of iron tools, paddy and artificial lakes with larger dams & cannals. They were called as the Megalithic people. Before the advent of Vijaya [B. C. 543.] to Sri Lanka, the Megalithic peopl who lived in Sri Lanka were engaged in sea farring trading activities with the Romans in the west and the Malabarians in the south and southeast Asia. Therefore, the Dravidians contributed the foundation of heritages is land in this in the first inception

With the arrival of Buddhsm 3rd century B. C., the secound phease of cultural heritage appeared in the horizone of buduring the ist civilization in Anuradhapura. There were many activities at Anuradhapuraafter the introduction of the Buddhism, such as big stupas, buddhist statues, art & crafts and royal gradens with royal palaces came to exsist. The pyramidal stupas were the giant achivements in the annals of the heritage of the Sri Lankan history. Besids of these cultural developments, the oceanic trade activities from west to far east were extended with the political advancements Due to this Sri Lanka had to under go for the cultural fuisions and cultural assimilations with foreign countries. This was the third phase of cultural heritage in the history of Sri Lanka.

The trade was the fundamental causes for the cultural intercoures from various countries through different periods. In the beginning merchants came from Greek and Rome and then Masedoania and Arabia. The merchants from the North and South India came to Sri Lanka continuously upto 15th century A. D. These merchants guids also contributed many cultural monuments and edifies to Sri Lankan heritage. During the hegimony of the Cholas over Sri Lanka for 77 years many temples and bronze images were erected. The island reached the top cultural advancement during the Cholas and thereafter.

## Conclusion:

The cultural heritage of Sri Lanka has more than 25000 years of time span. In this period of time Greeks, Arabians, Romans, Persians, Muslims, Portugues, Duch and English men emparked their ships at the ports of Sri Lnkan sea-shore and they stamped their cultural trade marks as part of Sri Lankan cultural heritage. Sothat, Sri Lanka is now prevailed as the multi - cultural land of heritage in the Indian ocean. The peace - makers of the present devotees too trying to achieve that Sri Lanka as the land of craddle for multi -cultural emporium.

*Mrs. S. Krishnarajah*
Teacher
J/Kondavil Hindu M. V.

கோநகர் பொழுது '2004 சிறப்புற எமது வாழ்த்துக்கள்!

# the freedom to choose the power to get there

**Freedom 55** Financial **provides** a wide range of ***financial products*** and services to get you where you want to be. ***Let me help you reach your goals with a sound financial plan.***

## Freedom 55 Financial

**A division of London Life Insurance Company**

**INSURANCE**
- LIFE
- DISABILITY
- CRITICAL ILLNESS
- HEALTH & DENTAL

**SAVINGS & INVESTMENT**
- GIC
- RRSP
- RESP (With 20% Govt. Grant)
- MUTUAL FUNDS
- SEG FUNDS

***Opening of Bank Accounts, Line od credit and Credit cards can be arranged***



திட்டமிடலுக்கும்
இலவச ஆலோசனைகளுக்கும்:
**Thana Nagulesapillai**
Financial Security Advisor
Res: 905-678-6351
Cell:416-565-6193
Email: thana.nagulesapillai@freedom55financial.com

**BUSINESS:**
Phone: 416-789-4527 Ext 276
Fax:416-789-0236
3200 Dufferin Street, Suite #210
Toronto, Ontario M6A 2T3

# பிஞ்சின் ஏக்கம் (சிறுகதை)

உலகமே அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தது. ஆனால் நாய்கள் ஊளையிடும் அவலமும், பூனைகள் கூடி அழும் அவலமும், குமரனை நித்திரையில் மூழ்க விடவில்லை. குமரன் முழித்திருந்து ஆழ்ந்த யோசனையில் இருந்தான். நாளைக்கு எப்படியாவது மருந்தைவாங்கி அப்பாவுக்குக் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அப்பாவின் நிலைமை இன்னும் மோசமாகலாம்.

எல்லாம் இந்த அப்பாவால் தான். யானை தன் தலையில் மண் கொட்டியதுபோல் அப்பதனக்குத் தானே வினையைத் தேடிக்கொண்டவர். அம்மா குடிக்க வேண்டாம் என்றால் அம்மாவுக்கு வசை மொழிகள் தான் கிடைக்கும். நான் குடிப்பேன் யார் என்னைத் தடுப்பது? **'குடிகாரன் பேச்சு விடிந்தால் போச்சு'** என்ற பழமொழிக்கு இணங்க விடிந்தால் அப்பாவை விட நல்ல பிள்ளை யாரும் இல்லை. மாலையானதும் **'பழைய குருடி கதவைத் திறவடி'** என்ற கதைதான். ஏழு மணியானதும் பெரிய பூகம்பமே ஏற்படும். அப்பாவின் அட்டகாசத்திற்கு அளவே இருக்காது.

பார்வதி, அடியே பார்வதி, எங்கையடி துலைஞ்சனி. டேய் குமரன், நீ பெரிய படிப்பாளியா? உவள் அக்கா எங்கே? பின்னர் அடி உதைதான். சிலவேளை சாப்பாடு சட்டி, பானை முகத்திற்குப் போகும். இரவு என்றால் மரண பயம் தான். இப்படியென்றால் எப்படிப் படிப்பது. பாடசாலைக்குச் சென்றால் ஆசிரியர்களின் ஏச்சுககள், அடிகள் எனது குடும்பச் சூழல் அவர்களுக்குத் தெரியுமா? எம்முடைய பொளாதார நிலை எப்படிப் புரியப் போகிறது. உண்ண ஒழுங்கான உணவு இல்லை. மழை வந்தால் வீடு முழுவதும் வெள்ளம்.

**"கொடிது கொடிது வறுமை கொடிது**
**அதனிலும் கொடிது இளமையில் வறுமை"** ஆகும்.

இதனை நான் அனுபவித்தேன். அம்மாவின் நிலையோ அதனை விடப்பரிதாபம். அழகான அம்மாவுக்கு குடிகார அப்பாவா? அக்கா படிப்பை விட்டு மெசினோடு போராடுகிறாள். சிறிய தங்கைகள் மூவரும் உலகமே தெரியாதவர்கள். வறுமை அவர்களிடமும் தெட்டத் தெளிவாகத் தெரிந்தது. எங்களிடம் அன்பு செலுத்த, அரவணைக்கும் அம்மா. அப்பா இருந்தும் என்னபயன்? பாவம் அம்மா என்ன செய்வா?.

ஆம் அப்பா, அம்மாவை விரும்பியே செய்தார். எங்களைப் பெற்ற பின்னர் கஷ்டப்பட்டே உழைத்தார். ஆனால் நண்பர்களுடைய சேர்க்கையில் குடிக்கு அடிமையாகி விட்டிருந்தார். எங்களைத் திரும்பியே பார்ப்பது இல்லை. அம்மா ஓடி வந்தபடியால்

யாருமே உதவி செய்வது இல்லை. அப்பா குடித்துக்குடித்துத் தன்னையே கெடுத்துவிட்டார். காலப்போக்கில் ஈரல் பாதிக்கப்பட்டு விட்டது. இப்போது வைத்தியசாலையில் இருக்கிறார். மருந்து வாங்க காசுக்கு எங்கே போவது?

கணித ஆசிரியரிடம் செல்கின்றேன். மணியை அழுத்தினேன். **"ஓ! குமரனா? வா உள்ளே"** ஏன்? மெலிந்து விட்டாய். பாடசாலைக்கு ஏன் வருவது இல்லை. சுகமாக இருக்கின்றீர்களா? கேள்வி மேல் கேட்டார் ரீச்சர். அப்பாவுக்கு சுகமில்லை. அப்பா ஆஸ்பத்திரியில். நான் போன விசயத்தைச் சொன்னேன். உடனே ஆசிரியர் இருநூறு ரூபாவைக் கொடுத்தார். நன்றி ரீச்சர் எனக் கூறிவிட்டு, மருந்தகம் நோக்கிச் சென்றேன். அக்கா அழுது வீங்கிய முகத்துடன் வருவதைக் கண்டு அதிர்ந்தேன். அப்பா நிம்மதியாகத் தூங்கிவிட்டார். இனி அம்மாவை, சகோதரர்களை பார்ப்பது நானா? இது தான் மனித வாழ்வா. அப்பா கடைசியில் மன்னிப்புக் கேட்டாரே. என்ன பிரயோசனம். அம்மா ஆரம்பத்தில் சொன்னபோது கேட்டிருந்தால் இந்த இளம் வயதில் போய் இருப்பாரோ? குடியில் குடும்பத்தைக் கைவிட்டுச் சென்றுவிட்டாரே என பிஞ்சு உள்ளம் ஏங்கித் தவித்தது.


**ஆக்கம்:-**

**செல்வி ஸ்ரீ. துஸ்யந்தி**

தரம் - 12

யா/கோண்டாவில் இந்து ம. வி.

# யாதும் ஊரே யாவரும் கேளிர்

வரப்புயர நீருயரும்
நீருயர நெல்லுயரும்
நெல்லுயரக் குடி உயரும்
குடி உயரக் கோனுயரும்
கோனுயரக் கோல் உயரும்

கோல் உயரக் கோன் ஆண்ட வில் உயரும் என்று எண்ணத் தோன்றும். வானத்தை நம்பி விவசாயம் புரிகின்ற தமிழீழ மண்ணில் ஆழத்தை நம்பி அதனுள்;றும் அற்ப நீரை நம்பி அவர்தம் மெய்வருந்தி அற்புதமாக விவசாயம் புரிகின்ற மண்ணில் இக் கோண்டாவில் மண்ணும் வளம் மிக்கது என்பதை மகுடம் சூட்டுவது அல்ல இக்கட்டுரையின் நோக்கம்.

மானத்தை, அறிவை, மண்ணை, மொழியை, மனிதத்தை, மறத்தை வானத்தில் வைத்து வணங்கும் ஞானத்திலுயா மானிடர்கள் வாழ்கின்ற மண் இந்தக் கோண்டாவில் என்பதைச் சொல்வதல்ல இக் கட்டுரையின் நோக்கம். தேசத்தை நினைந்து தேன் தமிழீழத்தை தத்தம் தாயை விடவும் மேலாய் கருதி வாழ்கின்ற பாசத்தை, பக்தியை, பரிவை, தேசியத்தின் தாகத்தை அவர்களின் தைரியத்தை தமிழர்க்குத் தெரியப்படுத்துவதல்ல இக்கட்டுரையின் நோக்கம்.

திருநெல்வேலியின் அருகூடராய் கிடக்கின்ற பெருவூர் கோண்டாவில் வாழ். பெருமக்களின் பெருந்தன்மை அவ்வூர் வழி நடந்துவரும் அயலவரை நினைந்து வழியருகே சுமைதாங்கிகளை அழைத்து தாகமுடன் வருகின்றவர்களுக்காய் தண்ணீர்ப்பந்தல்கள் படைத்து தாகசாந்தி புரிகின்ற தமிழ்ப் பண்பினை தொட்டுக் காட்டுவதல்ல இக்கட்டுரையின் நோக்கம். தர்மசிந்தையிலும் மேலாக தமிழீழ விடுதலைக்காகன தியாகங்களிலும் தலைசிறந்த ஈகைகளிலும் இவ்வூர் சிறந்து விளங்குவதை எடுத்துக்காட்டுவதல்ல இக்கட்டுரையின் நோக்கம். கோன்முறை அரசு செய்ய குறைவிலாதுயிர்கள் வாழ நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலக மெலாம் என்பதற்கிணங்க வாழ்வாங்கு வாழ்கின்றவர்களாய் வாழும் ஊர் என்பதை வர்ணிப்பதல்ல இக்கட்டுரையின் நோக்கம்.

பெற்ற தாயும் பிறந்த பொன் நாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே என்பதற்கொப்ப தேன் தமிழர் யாவருமே தாயும் தாய்நாடும் தம்முயிர் எனப் போற்றி வாழ்வதிலிருந்து யாரும் தவறிவிடவில்லை என்றாலும் இதுகூட ஓர் வகையில் சுயநலம் கொண்ட உணர்வு என்று கருத வேண்டிக் கிடக்கின்றது. உன்னைப் போல் பிறரையும் நேசி ஊரார் பிள்ளைக்கு ஊட்டு உன்பிள்ளை தானாய் வளரும் யாதும் ஊரெ யாவரும் கேளிர் எல்லோரும் மனிதர்கள் ஊரெ கேளிர் என்றெல்லாம் ஏன் சொன்னார்கள் எதற்காகச் சொல்லுகிறார்கள்? இவைகளையெல்லாம் நோக்குமிடத்து உலகம் மிக அகன்று உள்ளது மிக அகல வேண்டும் உன்னுக்குள் உள்ள உன் நலத்தைத் துறந்து ஊர், உலக நலத்தை உன்நலமாகக் கருது அதுவே உன்னை உன்னதமாக்கும் என்பதே உயர்ந்தோரின் கருத்து நாடு என்ன செய்தது எனக்கு? என்பதை விட்டு நாட்டுக்கு நான் என்ன செய்தேன் என்பதை நினை என்றாற்போல் நான் என்னும் அகந்தை நினைப்புக்களிலிருந்து விலகி நாம் என்ற நினைப்பு நன்மை என்பதை நினைத்து நாம் வாழத் தலைப்படுவதே நல்லது ஆக நான் உள்ள வரையிலும் நடப்பது எதுவும் நன்மையாகிவிடாது என்பது போல் அதாவது நான் என்கின்ற ஆணவத்தை நீக்கி நாம் நாங்கள் நமது எமது ஊர் உறவு, இனம், வீடு, நாடு, தேசம் இவை எல்லாவற்றையும் கடந்து உலகம் எமது எமது சுற்றமே உலகம் என்று கருது என்பது தான் தனிநலம் கடந்து பொது நலமாக இருக்க முடியும் என்றுதானே பொருள்படுகிறது. ஆனாலும்கூட தன்னலமானது ஒன்றும் தவறான தொன்றல்ல சுயநலத்திலிருந்துதான் பொதுநலம் பிறக்கின்றது என்றார்கள். சுவர் இருந்தால் தான் சித்திரம் வரையலாம் என்பார்கள். தனக்குதவாதவன் தரணிக்கா உதவுவான், தனக்கு மிஞ்சித்தான் தானமும் தர்மமும் என்று பார்க்கும்போது சுய நலம் கொண்ட ஒருவரால்தான் பொதுநலமும் செய்ய முடிகிறது என்று தான் கருத வேண்டும்.

ஒருவன் தான் தனது, தமது தாய், பிள்ளை, மனைவி, உறவு, தன்வீடு என்று உழைத்து உயர்ந்து வாழ்ந்து தம்மைத் தாம் தற்காத்துக் கொண்டாலே மற்றவர்கள் பாரம் குறைகிறது. ஆக சுயநலம் கூட இந்த வகையில் சிறப்பும் பெறுகிறது. ஆனால் இந்தச் சுயநலம் ஒருபோதில் வெறியாகிப் பேயாகிப் பேராசையில் மற்றவர்களது வாழ்க்கையைப் பாதிக்குமாக இருந்தால் சுய கௌரவத்தையே அது இழந்துவிடுகிறது.

எவன் எக்கேடு கெட்டா லும் தான் வாழ்ந்து உயர்ந்து உயர்ந்து விடுவதாக எண்ணி நியாயமற்ற செயல்களைச் செய்ய முற்படுகின்ற ஒருவகைச் சுயநலம் பேராபத்தானது, அநீதியானது, அக்கிரமமானது என்றுகூடச் சொல்லலாம். நன்மை செய்ய இயலாது விட்டாலும் தீமை செய்யாதிருத்தல் என்பதும்கூடத் தர்மம்தான். ஆனால் தான் பெற்ற செல்வங்களை எல்லாம் தலைமுறைக்காகக் கட்டிக் காத்து சற்றேனும் தர்மசிந்தை யற்று வாழ்வது அதர்மமாகிவிடும் என்பது சான்றோர் கூற்று.
சுயநலத்தில் பொதுநலம் கலந்திருப்பதுபோல் பொது நலத்திலும் சுயநலம் கலந்திருக்கும். ஆனால் அது மிகுந்திருப்பதுதான் ஆபத்தானது, வசித்திரமானதும் கூட. அதாவது ஒருவனது புறச் செயற்பாடுகள் பொதுநலம் மிக்கதுபோலவும் அகச்செயற்பாடுகள் அவன்தன்நலம் கொண்டதாகவும் வாழ்ந்து பேரையும் புகழையும் சேர்க்கவும் பெரும் செல்வங்களை குவிக்கவும் தன்னை வெளிக்காட்டாது வேஷம் கலைவது என்பது மிகத்துரோகம்

யாவையும் சுரண்ட நினைப்பது தன் நலமே நோக்காகக் கொண்டு தூய்மையான சிந்தனை இன்றி குறுகிய நோக்கங்களிற்காக நேர்வழி தவறி குறுக்குவழி செல்வது மன்னிக்கப்பட முடியாத மாநிடத்துரோகம் என்பதுதான் உண்மை. பொதுநலமானது உள்ளத்திலிருந்துபிறப்பதானது உதட்டிலிருந்தோ இன்னொருவரின் தூண்டுதலால் பிறப்பதல்ல. ஒருபுகழுக்கோ பெயருக்காக பொதுநலத் தொண்டாற்றுவதும் பொதுநலமாகாது. வலது கை கொடுப்பதை இடதுகை அறியாது என்பதுவும் கடமையைச் செய் பலனை எதிர்பாராதே என்பதற்கொப்ப எவன் பொதுத் தொண்டில் ஈடுபடுகின்றானோ அதுவே புனிதமான பொதுநலம் என்பது பெரியோர் கருத்து ஆக தனக்கென வாழா பிறர்க்கென வாழும் தமிழ்ப் பண்பின் நிமித்தம் பிறந்தவர் யாவரும் அப்படியே வாழத்தலைப் பட்டு விட்டால் மக்க ள் தெய்வங்களாகப் போற்றப்படுவர்.

சந்தர்ப்ப சூழ்நிலையில் பிறந்த பொன்னாடாம் தாயகத்திலிருந்து புலம் பெயர்ந்து பிறதேசங்களில் வாழ்வைப் பதிய வைத்துக் கொண்டாலும் பைந்தமிழர் பண்பாட்டுக் கோலங்களை பறைசாற்றியபடி சுயநலம் என்கின்ற செயற்பாடுகளிலிருந்து சற்று மேலே போய் எங்கள் மொழி, எங்கள் இனம், எங்கள் தேசம், எங்கள் கலை, கல்வி, கலாச்சாரம் என தமிழர்க்குரிய தனித்துவமான பண்புகளை முன்னெடுத்து எங்க ஊர் எங்க பாடசாலை என்ற ஏற்ற மிகு சேவை மனங்கொண்ட அமைப்புகளாக தோற்றுவித்து செயற்படுவது உயர்ந்த பண்பாகும். அதுவும் ஒரு குடைக் கீழ் ஒன்றுபட்டுச் செயற்படுவது உன்னதமானது. மற்றவர்கள் வாழவேண்டும் எமக்கு மேலறிவைக் கற்பித்த கல்விக்கூடங்கள் மேலும் சேவையாற்ற வேண்டும் . மேலும் மேலும் இனிவரும் தலைமுறைகள் ஓங்கி உயர வேண்டும் என்று கருதிச்செயற்படுவது தமிழனது தர்ம சிந்தையைக் காட்டுகிறது. இப்படியான செயற்பாடுகள் நோக்கங்கள் பொது நலம் மிக்க பண்பை வளர்க்கும் சுய நலத்தை துறப்பதற்கானவர்களின் முதற்படி என்று கூறலாம். எனது தாய், எனது மொழி, எனது கல்விக்கூடம் என்பது என்னவோ எல்லாம் உண்மைதான் ஆனால் எதுவும் எனக்கு மட்டுமே சொந்தமான தொன்றல்ல. எமக்குச் சொந்தமானது எல்லாருக்கும் சொந்தமானது என்றாலும் என்றென்றும் எவருக்கும் நிரந்தரமானதுவும் அல்ல. இன்று எனக்கானது இன்னொருநாள் இன்னொருவனுடையதாகன்ற உலக நியதிக்கு நாங்களும் விதி விலக்கல்ல. ஆக எனக்கு உனக்கு எனது உனது என்ற அறியாமைகளை யெல்லாம் கடந்து எமது என்பதல்ல என்பதையும் அறிந்துணர்ந்து என்பணி செய்து கிடப்பதே என்பதற்கொப்ப என்றோ முடிந்த முடிவு என்பதைத் தெரிந்து கொள்வதும் அவசியமாகிறது. ஒருவருடைய பிறப்பிற்கான காரணமே இன்னொன்றுக்கோ இன்னொருவருக்கானது என்பது தான் எமது சைவ தத்துவங்களின் கூற்று. இன்னும் மேலாக இருக்கு, யசுர், சாம, வேத உபநிடதங்களின் மெய்ஞான ஆழங்களை அதன் இங்கிதங்களை அறிந்து தெளிந்தவர்களாக எம்மை நாம் அறிந்து கொள்வதே இக்கட்டுரையின் நோக்கம். ஒன்றிலும் ஒன்றுமில்லை என்ற சிவயோக சுவாமிகளின் சொல்வாக்குப்போல இவ்வாழ்வின் யதார்த்தங்களை நாம் உணர்வோமாக இருந்தால் நாம் இந்த சுய நலம் என்கின்ற சிக்கன சுவர்களைத் தகர்த்து பிறந்த தன் பயனை பெற்றுவிட முடியும் இல்லறம் நல்லறம் என்பாகள் ஏனென்றால் ஒருவன் தனக்கென வாழ்ந்தவர். பிறர்க்கென வாழத் தலைப்படுவதனால் தான் அவ்வறம் சிறந்ததாகப்போற்றப்படுகிறது. ஒவ்வொரு மனிதனும் தான் பிறந்ததற்கான காரணத்தை அறிந்து தெளிதல் வேண்டும். அப்போதுதான் அவன் மனசார அமைதியைப் பெற முடியும். முடவன் கொம்புத் தேனுக்கு ஆசைப்படுவதை அர்த்தமில்லை என்று அறிந்துகொள்ளமுடியும். எவன் எவன் எதற்காகப் பிறந்திருக்கிறானோ அதுவே தன் வாழ்வு என்பதை ஏற்று அதில் மகிழ்ச்சி பெற முடியும். என்பதை உணர்ந்து கொள்ள முடியும். அதாவது நாம் ஒரு ஊருக்காக உழைக்கிறோம் சங்கம் அமைக்கின்றோம். ஆனால் நான் நீ என்று வேறுபடுகின்றோம். எதற்காக எப்படி அது சாத்தியப்படும் யாரும் எதற்கும் உரிமை கொள்வதில் அர்த்தமில்லை என்பதை முதலில் உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் ஒரூரில் பிறக்கிறோம் இன்னோர் ஊரில் வளர்கிறோம். இன்னோர் ஊரில் படிக்கிறோம். இன்னோர் ஊரில் மணம் முடிக்கிறோம். பிள்ளைகளை ஒவ்வொரு ஊரில் திருமணம் செய்து கொடுக்கிறோம். இப்படியாக சிலர் பிறந்த ஊர் என்று சொன்னாலும் அவர் உண்மையாகப் பிறந்தது இணுவில், மருத்துவசாலையாக இருந்திருக்கும். ஆனால் அவர் பிறந்தகம் இதுதான் என்று ஒரு அபிமானத்தில் மிகவும் அர்த்தமுள்ள வராக வாழ்வார். எது எப்படியோ குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓட்டுவதாய் இல்லாமல் ஓர் ஊர் ஓர் தேசம் என்றளவில் ஒவ்வொருவரும் அகன்ற மனதுடையவர்களாக மாறிககொள்வதே ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் அர்த்தமுடையதாக்குகின்றது. ஆக யாதும் ஊரே யாவரும் கேளிர் என்பதே அகன்ற மனமுடையோராய் அனைவரும் ஒரு சுற்றத்தினர் என்றுணர்க. உலகம் அகன்றது என்பதிலும் உள்ளம் அதை விடவும் அகன்றது என்பதை உணரக் கடவதே இக்கட்டுரை சுட்டி நிற்கின்றது. உள்ளத்தால் அகன்றால் உலகமே உன் கைக்குள் என்பது போல் உன்னை நீ அறிவாய்.

சிவா. சின்னத்தம்பி
10-03-04

# K.H.M.V School Event













2003 Get Together



2003 Get Together



2003 Get Together




2003 Get Together




2003 Get Together



2003 Get Together

வாங்க!
விற்க!

# வீடு

விற்க!
வாங்க!



வீடு வாங்க அல்லது விற்க...
அது சம்பந்தமான ஆலோசனைகளைப் பெற
மோட்கேஜ் வசதிகளை அமைத்துத் தர
முதன்முறையாக வீடு வாங்குபவர்களுக்கு உள்ள சலுகைகளை அறிந்து கொள்ள

மனம் போல் மனையைப் பெற...

**சசி செல்வரட்ணம்**

**416.725.1125**
**416.321.6969**

HomeLife
Higher Standards





Dr. IRU VIJAYNATHAN
WALK IN DENATAL CLINIC
பல் மருத்துவ மையம்
416-264-3232
3150 Eglinton Ave E, Scarborough(Markham & Eglinton)
7 Days a week (10am- 08pm)



# நிகழ்ச்சி நிரல்




மங்கள விளக்கேற்றல்
தமிழ்த் தாய் வணக்கம்
கனடிய கீதம்
கல்லூரி கீதம்
அமைதி வணக்கம்
வரவேற்பு நடனம்
சிறுவர் அபிநயம்
வயலின் இசை
பிரதம விருந்தினர் உரை
வீணை இசை
பேச்சு
மயில், பாம்பு நடனம்

கௌரவ விருந்தினர் உரை
கவிதை
கீதலயம்
நகைச்சுவை
திரை இசை நடனம்
மலர் வெளியீடு
பரத நாட்டியம்
கானமும் கலையும்

**இடைவேளை**

நாடகம்
நன்றியுரை
இன்னிசை விருந்து

பிரதம விருந்தினர்
திரு. செல்லையா நடராஜா (இளைப்பாறிய அதிபர்)

கௌரவ விருந்தியனர்
Hon. George Smitherman( Health Minister)

சிறப்பு விருந்தினர்
திரு. வை. சுப்பிரமயணியம்

அறிவிப்பாளர்
திருமதி வாகினி. நி, ரவிந்திரன். இ

Dr. Illango
& ASSOCIATES DENTAL OFFICES
Dr.M. Illango - Dr. I. Janaki - Dr. S. Raveendran



3852 Finch E #204, 303
(Kennedy & Finch)
416-292-7004



3025 Hurontario Street #102
(HWY 10/Dundas)
416-292-7004



# Raj Kiruba, Md, MBBS, CCFP

Family Physician

அன்று ஈழத்தில்

இன்று கனடாவில்

கைராசி மிக்க மருத்துவர்



**2 Fenton Road**
**Unite 4, Markham**
**ON, L3R 7B4**

**Tel:905.948.9455**
**905.948.9534**
**Fax:905.948.0570**










**2003 Get Together Chief Guest:**
**Mrs. S. Murugaiah**
**(past principle Kondavil Hindu Maha Vidyalayam).**







# முதியோருக்குக் கைகொடுப்போம்

முதுமை என்பது வாழ்வின் இரண்டாவது பிள்ளைப்பராயம் போன்றது. அவர்களது வாழ்வு ஆடி அடங்கியவாழ்வு. தம்மை பிள்ளைகள் பார்ப்பார்கள் என எண்ணி இளமைக்காலத்தில்ஓடாய் உழைத்த உத்தர்மர்கள். அவர்களே பிள்ளைகளைப்போல பிறரின் அன்புக்கும் அரவணைப்புக்கும் ஏங்கி நிற்பார்கள். அன்பு செலுத்த ஒருசிலர் இருந்தாலும் தெம்புடன் வாழ்வர். ஆகவே அந்த கண்கண்ட தெய்வங்களை கண்கலங்கவிடாது கைகொடுக்கவேண்டியது எமது தலையாய கடமையாகும். அதனை நாம் செய்யாது விடின் செய்நன்றி மறந்தவர்கள் ஆகிவிடுவோம்

ஏனெனில், இவ்வுலகில் பிறந்த ஒவ்வோரு மனிதனும் தனது வாழ்கைப் பிரயாணத்தில் மரணம் என்கின்ற இறுதி எல்லையைச் சென்றடையும் வரை பல்வேறு அத்தியாயங்களை தாண்டிச்செல்கின்றான். பல்வேறு அத்தியாயங்கள் நிறைந்த இம் மனித வாழ்கையில் முதுமை என்பதும் ஓர்தவிர்க்கமுடியாத அத்தியாயம் என்பதுதான் நிதர்சனம். இன்று இளைஞராக இருக்கும் ஓவ்வோருவரும் தாமும் எதிர்காலத்தில் முதியோர் ஆவோம் என்பதை உணர்ந்து முதியோரைப்பேணி அவர்களுக்கு கைகொடுக்கவேண்டும். நாம் எவ்வாறு முதியோரை நடாத்துகின்றோமோ, அதைப்போலவே நாளை உருவாகும் புதிய சமுதாயம் நம்மை நடாத்தும் என்பதையும் உணர்ந்துகொள்ளவேண்டும்

இந்த முதியோர் எனப்படுபவர்கள் யார்? எம்மை ஈன்றெடுத்த தெய்வங்கள். அவர்கள் முன்னாளில் எம்மை எல்லாம் மார்புமீதும், தோள்மீதும் போட்டுத் தாலாட்டிச் சீராட்டி வையத்துள் வாழ வழிசமைத்தவர்கள். அவர்கள் எம்மைப் பொறுத்த வரையில் ஓர் சுரங்கம் போன்றவர்கள். தமது தேகம், பொருள் சக்தி என்வற்றையும் எமக்காக தியாகம். செய்து வளர்த்து எடுத்தவர்கள். எத்தனையோ எதிர்பார்ப்புகளுடனும், நம்பிக்கைகளுடனும் நம்மைப் பெற்று வளர்த்து எடுத்தவர்கள் தமது மிகுதிக்காலத்தை பிள்ளைகள்,பேரப்பிள்ளைகளின் அரவணைப்புடன் கழிக்கலாம் என எண்ணிக் கனவுகாண்பார்கள். ஆனால், இறுதியில் தனிமையாக ஏக்கம் நிறைந்த நினைவுகள் மட்டும் தான் எஞ்சுகின்றன.

இன்றைய இளம் சமுதாயம் முன்பு போலன்றி முதியவர்களை ஏளனம் செய்வதுடன் அவர்களை பராமரிப்பதிலும் சற்றுபின்நிற்கின்றனது. முதியோருக்குக் கைகொடுப்போம் என்பது தலையாய கடமையாகும் இதனை நாம் எம்மனதில் இருத்திச் செயற்படவேண்டும். ஆனால், இன்று நடப்பது தான் என்ன? பணம் பணம் என்று பணத்திற்காக அலைந்துகொண்டிருக்கும் இன்றைய உலகிலே பணத்திற்காக வயது முதிர்ந்த பெற்றோரைக் கூடத் தனிமையிலே தவிக்கவிட்டு விட்டு வெளிநாடு சென்று விடுகின்றனர். இங்கே அப்புக்கு ஆச்சியும், ஆச்சிக்கு அப்புவும் துணையென்று வாழ்வைக் கழிக்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுவிட்டார்கள். இந்த நிலையில் முதியோர் படும் அவலங்களுக்கும், இன்னல் இடர்களுக்கும் எல்லையே இல்லை. முதுமையின் முதல் எதிரி தனிமை. இந்த முதியோரைப் பராமரிக்க வசதி வாய்ப்புக்கள் இருந்தும் அவர்கள் தமக்குச் சுமை எனக்கருதி முதியோர் இல்லங்களில்

சேர்த்துவிட்டு எத்தனையோ பேர் ஆடம்பரமாக வாழ்கின்றனர். இதனை நாம் ஏற்கலாமா? அல்லது செய்யலாமா? எம் வயதுபோன தாய் தந்தையரே நாம் வணங்கும் முதல் தெய்வங்கள். முதியோரைப் பேண வேண்டும் என நீதி நூல்கள் கூறுவதை நாம் படித்திருக்கின்றோம். **"தந்தை, தாய் பேண்"** என்ற தமிழ் மூதாட்டி ஔவையின் வாசகம் எமது சமூகத்திற்கோர் எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. நம்மீது ஈடு இணையற்ற எல்லைகடந்த நட்பினைக் கொண்டிருக்கும் நம் அன்னையும் பிதாவும் பாரினிலே வணங்குவதற்குரிய நடமாடும் தெய்வங்கள். அத்தகைய உள்ளங்களை நாம் நோகடிக்கவிடக்கூடாது.

ஆகவே, அவர்கள் கடந்தகால வாழ்வை மீட்க மீளவும் ஒரு சந்தர்ப்பத்தை அளித்து, மகிழ்ச்சியுடன் இருக்க உதவி செய்து இவர்கள் போன்ற முதிர்பருவத்தினர் திருப்தியுடன் மரணத்தைஏற்றுத் தெய்வத்துள் வாழ்வாங்கு வாழ அவர்களுக்கு கைகொடுக்கவேண்டும். நாமும் ஆடி அடங்கிய வேளையில், நாளை உருவாகும் சமுதாயம் நம்மையும் நடத்தும் என்பதை உணர்ந்து செயற்பட வேண்டும். முதியோர் மிகமகிழ்வுடன் வாழ அவர்களுக்குக் கைகொடுப்போம்.

*"முதியோர்கள் என்பவர் சுரங்கம் போன்றவர்கள்"*

செல்வி.பா.சுஜித்தா
தரம் 12
யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

# தமிழ் எங்கள் உயிருக்கு நேர்

**தமிழ் எங்கள் உயிருக்குநேர்** என்று பிரகடனம் செய்தான், ஒரு செந்தமிழ் கவிஞன்.செந்தமிழ், சீந்தமிழ்,பைந்தமிழ்,பழகுதமிழ் என்றெல்லாம் பாசஞ் சொரிந்து - **'தமிழுக்கு அமுதென்று பேர்'** என்று அவனிக்கு அறிவித்து மகிழ்ந்தனர் நம் சான்றோர்கள் பொருப்பிலே பிறந்து தென்னன் புகழிலே வளர்ந்து சங்கத்(து) திருப்பிலே இருந்து - வைகை ஏட்டிலே வளர்ந்த தமிழைப்போற்றி ''எங்கள் வாழ்வும்,எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு'' என்று முழங்கினார் பாவேந்தர் பாரதிதாசன் தமிழ் மூன்று,தமிழ் வளர்ந்த நாடு மூன்று,தமிழே தம் உயிரென வளர்த்த மன்னர் மூன்று -தமிழ் ஆய்ந்த சங்கம் மூன்று ''முன்றெழுத்தில் என் மூச்சிருக்கு'' என மகிழ்ந்தான் ஒரு கவிஞன்.

புராதன மொழிகள் பல புகழ்குன்றி வழக்கிழந்த போதிலும் கூட-என்று பிறந்தது என்று அறியமுடியாத நம் தமிழ் மொழி - தன் எழில்குன்றாது புகழும் பொலிவும் பெற்று மிளிர்கிறது. அனைத்துலக அறிஞர்களும் **'இனிமை மொழி'** எனப் போற்றும் பெரும்பேறு நம் தமிழ் மொழிக்குக் கிடைத்திருக்கிறது. ஒல்காப் புகழ் கொண்ட தொல்காப்பியமும் எத்தரையும் போற்றும் அகத்தியமும் - நற்போர் பாரட்டும் திருக்குறளும் - ஔவையார் நல்வழியும் உள்ளும் தோறும் உவகை தரும் கம்பனின்இராம கதையும் - இளங்கோவின் சிலம்பும், குண்டலகேசி, வளையாபதி, மணிமேகலை என வளர்ந்த வாகுமிகு இலங்கிய நூல்களும் என்றும் அழியாதவரத்தை நம் தமிழன்னைக்கு வழங்கிக் கொண்டிருக்கின்றன.

அக நானூறு, புறநானூறு என வளர்ந்த சங்க காலப் பதினெண் மேற்கணக்கு நூல்களும் **'யாதும் ஊரே யாவரும் கேளிர்'** என உலக ஒருமைப்பாட்டை ஓங்கி ஒலித்து தமிழன்னையின் பெருமையை நிலை நாட்டிக்கொண்டிருக்கின்றன தமிழாராய்ச்சி மாகாநாடுகளும், பட்டிமன்றங்களும், கவியரங்குகளும் இலக்கண ஆய்வுகளும் என இன்று உலகெங்கிலும் வாழும் தமிழ் அறிஞர்கள் தமிழின் செழுமையை உலகிற்கு வியக்கவைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

**'உலகில் தமிழன் இல்லாத நாடே இல்லை''** என்கிறார்கள். அவ்வாறு உலகெங்கிலும் பரவி வாழும் தமிழ்தாயின் தவப்புதல்வர்கள் தமிழ்க்கலைகளை, தமிழர்தம் பண்பாடுகளை, தமிழ்கலாச்சாரத்தின் மகிமையை தாம் வாழும் இடங்கள் தோறும் வளர்த்து கொண்டிருக்கிறார்கள். அதனால், அழியா வரம் பெற்று நம் தாய்த்தமிழ்மொழி வளர்ந்து கொண்டிருக்கிறது.

பெரியோர்களே அழகுமிகு அன்னைத்தழிழை, அகழஅகழ முத்துச்சுரக்கும் இன்பச்சுரங்கத்தை உயிரெனப்போற்றி நாங்கள் வளர்ப்போம். **'தமிழுக்கு அமுதென்றுபேர் அந்த தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்குநேர்'** என உணர்வு பூர்வமாக முரசறைவோம். **'பொங்குதமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிஜமென்று சங்கு முழங்குவோம்'** எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று மனமார வாழுவோம் என்ற உறிதியை நாம் எடுத்துக்கொள்வோம்.

**'தமிழ் எங்கள் உயிருக்கு நேர் - அந்தத்**
**தமிழாலே தலைத்தோங்கி வாழட்டும் பார்'**

ஆக்கம்

**செல்வி. உ. கௌசிகா**

தரம் 10A

யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்!

# NEW STAR
## AUTO SERVICE

Complete Automotive Service
and Repairs by Fully Licensed Mechanics

* Tune Up * Brakes
* Computer Diagnosis
* General Electrical Works
* All Mechanical Repairs
* Mechanical Safety Inspection
* Air Condition Gas & Repairs
* Towing Service

சகல விதமான வாகனத்
திருத்த வேலைகளுக்கும்
அழையுங்கள்
விக்கி / சிவா
Tel. / Fax: (416) 747-1743



100 Turbine Dr. Unit #06
North York, Ont. M9L 2S2
Tel: 416-747-1743

# எம்மை வளர்த்து விட்ட கோண்டாவில் இந்து அன்னைக்கு

## ஒரு வாழ்த்து



எமது அன்னை பிறந்து 125 வருடங்கள் உருண்டோடி விட்டன பல்துறையில் சிறந்த மாணவர்களை உருவாக்கி வளர்தெடுத்த அன்னையை இன்று எட்டாவது அகவையில் நிற்கும் கடல் கடந்து வாழும் இத்தாயின் பிள்ளைகள் கனாடாவில் கோண்டாவில் நலன்புரிக் கழகமும் கோண்டாவில் இந்து **"பழைய மாணவர்சங்கமும்"** எனப் பெயரை உருவாக்கி இந்துவின் 125வது வருட நிறைவு விழாவைக் கொண்டாடுகின்றமை பெருமைக்குரியது.

மலர் அமைத்து தம் அன்னையின் பெருமையை ஒளிரச் செய்யும் முயற்சி பாராட்டிற்குரியது சிறப்பு மிக்க இந்த முயற்சிக்காக கோண்டாவிலில் இயங்கும் தாய்ச் சங்கமான யா/கோண்டாவில் இந்து பழைய மாணவர் சங்கத்தின் தலைவர் ஆகிய நான் எமது சங்கத்தின் சார்பில் வாழ்ந்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

**ச. போகராசா**
(தலைவர் பழைய மாணவர் சங்கம்)
யா/கோண்டாவில் இந்து ம.வி.

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்!

# A PROFESSIONAL MORTGAGE SPECIALIST

A home is both an asset and an investment.
Buying a home perhaps may be the biggest financial decision you make in your life.
A good home ought to give you the comfort you need socially and financially.

RBC Royal Bank
* RBC Royal Bank of Canada, licence of trade mark

* REFINANCING
* SELF EMPLOYED
* SWITCH MORTGAGE
* NEW IMMIGRANTS
* 5% DOWN

சகலவிதமான அடமானத் தேவைகளுக்கும்
தமிழில் தொடர்பு கொள்ள அழையுங்கள்:
**மயில்வாகனம் அகிலன்**

PLATINUM AWARD WINNER
15 வருட அனுபவம்

AVAILABLE 7 DAYS A WEEK
FOR APPOINTMENTS & INQUIRIES

**Mailvaganam (Mike) Ahilan, AICB**
**Account Manager - Residential Mortgages**
**RBC Royal Bank**
**Tel.: 416-289-8700  Cell: 416-220-1184**
**mike.ahilan@rbc.com**

# இம்மலருக்கான வாழ்த்துரை

## செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை

கோவில்கள் கல்விச்சாலைகள் நிறைந்த திருவூர் கோண்டாவில். இத்திருவூரில் அறிவாலயமாக விளங்கி பலர் வாழ்வை மேம்படுத்திய கல்விச்சாலை கோண்டாவில் இந்து மகாவித்தியாலயமாகும். இப்பாடசாலையின் இன்றைய துரித வளர்ச்சிக்கு காரணமாக விளங்கும் அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர் பெற்றோர் அபிமானிகளை வாழ்த்துகின்றேன். வணங்குகின்றேன். 1878ல் ஆரம்பிக்கப்பெற்ற இப்பாடசாலை அறிஞர்களை நல்ல கலைஞர்களை இம்மண்ணுக்கு தந்து வரலாற்றுச் சிறப்போடு விளங்குகின்றது.

''வயிற்றுக்குச் சோறு இடவேண்டும்

வாழும் மனிதர்களுக்கெல்லாம் பயிற்றிக் கல்வி தந்து இப்பாரினை உயர்த்திட வேண்டும்'' என்ற மகாகவி பாரதியின் பாவரிக்கு அமைய ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றும் உன்னத பணியாற்றும் இக்கல்விச்சாலை சூரிய சந்திரர் உள்ளவரை சுடர்விட்டு பிரகாசிக்க வேண்டும் என இறைவனை இறைஞ்சி வாழ்த்தி எனது வாழ்த்துரையை சமர்ப்பிக்கிறேன்.

**"யாவர்க்குமாம் இன்னுரைதானே"**

*ஆறு. திருமுருகன்*
உப அதிபர்
ஸ்கந்தவரோதயா கல்லூரி
சுன்னாகம்.

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்!

# சட்ட அலுவலகம்

## நாதன் சிறீதரன்

# LAW OFFICE

## NATHAN SRITHARAN

BARRISTER, SOLICITOR & NOTARY PUBLIC (ONTARIO)

**LEGAL AID CERTIFICATE ACCEPTED**

TEL: (416) 499-2760 FAX: (416) 499-6534

2190 WARDEN AVE., #208, SCARBOROUGH, ONT. M1V 1T6

(WARDEN & SHEPPARD)

# கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் விழாவிற்கு மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் வழங்கும்

## வாழ்த்துச் செய்தி

யா/கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கு வாழ்த்துச் செய்தியொன்றை வழங்குவதில் மகிழ்ச்சியடைகிறேன். 1878ம் ஆண்டில் பிரம்ம ஸ்ரீ முருகேச ஐயர் வெங்கடாசல ஐயர் அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட திண்ணைப்பள்ளி. இது தனது 125 அகவையை பூர்த்தி செய்து இந்து மகா வித்தியாலயமாகத் தரமுயர்ந்து சிறப்புற கல்வியில் பணியாற்றி வருகின்ற நிறுவனமாக அமைந்துள்ளமை பாராட்டிற்குரியதாகும். 1915ல் கனிஷ்ட பாடசாலை தரத்தை எட்டி 1932ல் சிரேஷ்ட பாடசாலையாகி இன்று 1 சீ பாடசாலையாக விளங்குகிறது.

கிராமியச் சூழலில் ஆரம்பித்து இயங்கி வருகின்ற இப்பாடசாலை அயற் கிராம மாணவர்களைத் தன்பால் ஈர்க்கும் வல்லமையைப் பெற்றுள்ளமை அங்கு வழங்கப்படும் தரமான கல்வியினாற் தான் எனலாம். இவ் வளர்ச்சிக்கு இடையூறாக காலாகாலம் அமைந்த இடப் பெயர்ச்சிகளின் மத்தியிலும் அவற்றைச் சவாலாக ஏற்று கல்லூரியை பலப்படுத்த உதவிய அதிபர் பலர். இப்பாடசாலையின் வளர்ச்சிக்கு அங்கு கடமையாற்றிய அதிபர், ஆசிரியர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் யாவரினதும் கூட்டு முயற்சியே காரணமாகும். பாடசாலைக்கு நில வளங்களைப் பெற்றுத் தருகின்ற பழைய மாணவர்கள் தம் கல்லூரி அன்னைக்கு பெருந் தொண்டாற்றி வருகின்றனர். கல்லூரியில் கட்டிடங்களையும் விளையாட்டிடத் தேவைகளையும் பூர்த்தி செய்தும் வருகின்றனர்.

இப்பாடசாலை தொடர்ந்து வளங்கள் பல பெற்றுத் தரம் மிக்க பாடசாலையாக மிளிர்ந்து மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு உதவுகின்ற ஒரு நிறுவனமாக என்றும் நிலைத்து நிற்க எனது வாழ்த்துக்கள்.

**திருமதி. செ. மகாலிங்கம்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்!

இலங்கை, இந்திய பலசரக்கு வகைகளின்
இறக்குமதியாளர்களும் மொத்த விற்பனையாளர்களும்

MANUFACTURERS, IMPORTERS & DISTRIBUTORS
தயாரிப்பாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும்

Niru Brand. நிரு பிராண்ட்

Rus-C ருசி

# NIRU ENTERPRISES INC.

76 Howden Road, Scarborough, Ont. M1R 3E4 Canada
Tel: 416-750-1976 Fax: 416-750-8779
Email: niru@total.net Web: www.niru.com

# Sri Lanka



Sri Lanka is our country. It is a beautiful Island in the Indian Ocean The Capital of Sri Lanka is Sri Jayawardenapura, Kotte. The central parts of Sri Lanka are hilly. It is cool in the hill country.

Cocount, rubber and tea are three of the main crops of sri Lanka is a home for many races. They are the sinhalese, the Tamils the muslims the Burghers and a number of others small groups of people. The Sri Lankan also speak a variety of Languages. They are Sinhalaa, Tamil and English. I think Sri Lanka is the most beautifyul part of the world.

Thank You

*Master.Sothinathagutrukkal Thiriyamipasarma*
Grade 5
J/Kondavil Hindu M.V

# Poem

### Child's heart

I'm a pure blank sheet.
I haven't enemies in my heart
I don't know how to cheat
I dont't hurt your seat
Be couse that's my route

*Thank you.*

Miss. Vaishnavi Naskaran
year 4
J/Kondavil Hindu M.V

## Parts of the body

My head shoulders knees and toes
knees and toes
My two ears two eyes mouth and
a nose.
My head shoulders knees and toes.
Knees and toes.

*Thank you.*

**Miss. Gayantharuby Balasingam**
***Grade 5***
***J/Kondavil Hindu M.V***

# துணுக்குகள்

1. முன்னேனறத்தின் முதற்படி கல்வி ஆகும்
2. கோபம் என்பது மாலுமி இல்லாத மரக்கலம் போன்றது

(முகம்மது)

3. மனிதன் தனக்குத் தெரிந்தவற்றை மட்டும் பேசுவானாகில் உலகில் அமைதி நிலவும்.

(பேனாட்ஷோ)

4. நீ அறிவு பெற்றிருந்தால், அச்சுடரில் மற்றவர்களும் பயன்பெறட்டும்.

(புலவர்)

5. கொடுக்கும் மரங்கள் வாழ்கின்றன.
கொடுக்கா மரங்கள் வீழ்கின்றன
கொடுத்தால் மனிதன் வாழ்கின்றான்

(அன்னை திரேசா)

6. உங்களிடம் அன்பு செய்வோரிடம் நேசியுங்கள்.
பகைக்கிறவர்களுக்குச் செபியுங்கள்

(காந்தி)

7. உங்களைப்போல், உங்கள் அயலவரையும் நேசியுங்கள்

(யேசு)

8. நல்லவர்கள் அனைவரும் அன்பையே விரும்புகின்றனர்.

(வில்லியம் சேர்ஸ்ஸில்)

9. மற்றவர்களுக்கு ஒருபோதும் தீங்கு செய்யாதே. இறைவனுக்குத் தொண்டு செய்பவர்கள் இதனை ஒருபோதும் ஏற்க மாட்டார்கள்.

(பகவத் கீதை)

10. மனித வாழ்வு என்பது சிந்திப்பது அல்ல, செய்ற்படுவது.

11. மகிழ்ச்சி மனிதனை வாழவைக்கின்றது.

12. பகுத்தறிவு என்பது எனக்கு ஆண்டவன் தந்த கொடை

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்!

# ARAN SUPER MARKET
# அரன் சுப்பர் மார்க்கட்

GREAT GROCERY GOODS

FRESH SEAFOOD

இலங்கை,
இந்திய
உடன் மரக்கறி
வகைகள், மீன்,
இறைச்சி வகைகளை
நியாயமான விலையில்
பெற்றுக்கொள்ள
நாடவேண்டிய இடம்.
புதிய - பழைய வீடியோ
படங்கள்,
ஒடியோ CD
கசெட் நாடாக்கள்
வாடகைக்கும்
விற்பனைக்கும்
உண்டு





Tel: 416-724-5453

790 Military Trail, Unit #1A
Scarborough, Ont.
(Morningside & Military Trail)

# பொங்கு தமிழ்

பொங்கு தமிழ்
பூவுலகைத் தூக்க வேண்டும்
சங்கத் தமிழ்
சமத்துவத்தைக் காக்க வேண்டும்

எங்கள் தமிழ்
இல்லாமை நீங்க வேண்டும்
தங்கத் தமிழ்
தாகங்கள் போக்கவேண்டும்

சிவக்கும் தமிழ்
சிறுத்தையாய் பாயவேண்டும்
இனிக்கும் தமிழ்
இளமையாய் வாழவேண்டும்

நம் நாட்டுத்தமிழ்
நான்காக மாறிடல் வேண்டும்
நம் வீரத்தமிழ்
நறுக்கென வீசிடல் வேண்டும்.

இலக்கியத் தமிழ்
இலட்சியத் தமிழ் ஆக்வேண்டும்
எழுந்திடும் தமிழ்
எல்லாவற்றையும் அமிழ்தாக்க வேண்டும்

கன்னித் தமிழ்
கல்விக்குள் பேசிடல் வேண்டும்
துணிவுத் தமிழ்
தூயவை வீசிடல் வேண்டும்

காப்பியன் தமிழ்
கணனித் தமிழாக வேண்டும்
காப்பியத் தமிழ்
கவிதையாய் ஆண்டிடல் வேண்டும்

வள்ளுவன் தமிழ்
வாழ்கைத் தமிழ் ஆக வேண்டும்
பின்னைத் தமிழ்
பெருமைகள் நீக்கவேண்டும்.

பொங்கு தமிழ்
புன்னகையில் மகிழவேண்டும்
பொங்கும் தமிழ்
போலிகளை மாற்றவேண்டும்

அறிவியல் தமிழ்
அனைத்து தமிழையும் ஆளல் வேண்டும்
அமிழ்தத் தமிழ்
வீர நிலாக்களை வாழ்த்த வேண்டும்

**நல்லை அமிழ்தன்**
பூ. புலேந்திரராஜா
நிர்வாக உதவியாளர்,
வலயக் கல்வி அலுவலகம்,
யாழ்ப்பாணம்.

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்!

* HIGH QUALITY
* DIGITAL EFFECTS & MIXING
* SPECIAL ALBUMS

உங்கள்
வைபவங்களுக்கு
வரமுடியாத
உறவினர்களும்
உங்களுடன் கூட வந்து
கலந்து மகிழ்ந்த
விதமாக எங்கள்
நுட்பத்தில் என்றும்
அழியா ஓவியமாக
வடிவமைத்துத்
தருவோம்!
சகலவிதமான
வைபவங்களையும்
சிறந்த முறையில்
குறைந்த கட்டணத்தில்
படம் பிடித்துக்கொள்ள
அழையுங்கள் 'சுதா'




* Weddings,
* Birthdays
* Puberty Ceremony
and any other
special occasions
* Out Door Photography

**Tel.: (905) 472-9157**
**Cell: (416) 827-3700**

# ஒற்றுமையே உறுதி

உலகில் எல்லாப் பிராணிகளும் ஒற்றுமையாகவே வாழ்கின்றன. ஒரே வரிசையில் ஒழுங்காகச் செல்லும் எறும்புக்கூட்டம் ஒரேபுற்றில் ஒன்று கூடிவாழக் காண்கிறோம். மந்தை மந்தையாகச் செல்லும் மாடு,ஆடுகள் எவ்வளவு ஒழுங்காக ஒற்றுமையாகச் செல்கின்றன. காட்டிலுள்ள மான் கூட்டம் மரைக்கூட்டம் எல்லாம்கூடிவாழ்கின்றன. இதனால் அவை தமக்குவரும் ஆபத்துக்களிலிருந்து தம்மை காத்துக்கொள்கின்றன.

ஆனால் பகுத்தறிவுடைய மனிதனோ சாதி, மதம், இனம் என்று பிரிந்தும் பிரித்தும் ஒற்றுமையைக் குலைத்து சண்டையிட்டு நீதிமன்றம் வரை செல்கின்றான் எத்தனைபேர். கொள்ளை, கொலை செய்பவர்கள் ஒரு புறம், தம் சகோதர்களிடம் சண்டைபிடிப்பவர் ஒருபுறம், மக்களுக்கு தொல்லை தருபவர் ஒரு புறம், அயல் நாடுகளை அழிப்பதே தொழிலாகக் கொண்டு, அமைதியைக் குலைக்கும் வல்லரசுகள் எத்தனை எத்தனை. அற்பசலுகைக்காக காட்டிக்கொடுக்கும் நயவஞ்சகர்கள் எத்தனையோபேர். உன்நிறம் கறுப்பு என்நிறம் வெள்ளை ஆகையால், நீ என்னிலும் தாழ்ந்தவர் என்று சொல்லி அடிமைப்படுத்திக் கொடுமைசெய்யும் மக்களும் எத்தனையோ பேர் இந்த உலகில் இல்லாமலும் இல்லை. அவர்களுக்குப் பஞ்சமும் இல்லை.

**'ஒற்றுமையே பலம்'** **'ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு'** என்றெல்லாம் பெரியார்கள் பலர்பொன்மொழிகளை உதிர்த்திச் சென்றுள்ளனர். ஒற்றுமையால் ஏற்படக் கூடிய நன்மைகள் பலவற்றையும் அனுபவத்தில் நாம் காணத்தவறுவதில்லை. இருப்பினும் சிறிய காரணங்களுக்காக ஒருவரோடு ஒருவர் போட்டியிடுகிறோம். சண்டை பிடிக்கிறோம். பிறரின் அழிவில் மகிழ்கிறோம். இவை எவ்வளவு கொடுமைகள். வாழ்கின்ற நாள்களோ சில. இதற்கிடையில் ஏன் இந்த வீண்சண்டைகள், ஒற்றுமையீனங்கள் இவற்றை நாம் நன்றாகச் சிந்தித்தல் வேண்டும் அவ்வாறு சித்தித்தால் எங்களின் மடமை எங்களை விட்டு விலகிப்போகும்.

அடம்பன்கொடி மிகவும் மெல்லிய கொடி. இழுத்தால் அறுவது இதன் இயல்பு. ஆனால், ஐந்தோ பத்தோ அடம்பன் கொடிகளை ஒன்றாகச் சேர்த்தால் அவற்றின் உறுதி அளவற்றதாகிவிடும். எந்தப் பலசாலியாலும் அவற்றை அறுத்தல் முடியாது இது போலவே தனித்து நிற்கும் மனிதனை எவரும் அழித்துவிடலாம். ஒற்றுமையாகக் கூடிவாழ்பவரை யாராலும் எதுவும் செய்தல் இயலாது. இவ் உண்மையை நாம் உணர்ந்து செயற்படுவோம். எம் இனத்தின் விடிவுக்காகவும் நாட்டின் விடுதலைக்காகவும் ஒற்றுமையுடன் ஒன்றுகூடி வாழ்வோம் என்பதை உறுதி பூணுவோமாக.

**'அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு'**

**செல்வி. செ. ரிஷிபா**

தரம் - 12

யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்!

# ஜெமினி மார்க்கட்






3230 Eglinton Ave. E.
Scarborough, ON
Tel:416-265-1010

தமிழர் உணவுப் பொருட்கள், இறைச்சி வகைகள், மீன், நண்டு முதலிய கடலுணவு வகைகள், மரக்கறி வகைகள், அரிசி, அரிசி-மா, நல்லெண்ணெய், மிளகாய்த்தூள், பழவகைகள் மற்றும் சகலவிதமான பலசரக்கு வகைகள் மிக மலிவாகக் கிடைக்கும்.

KEY CUT AVAILABLE

# MANIKANDAN

TAKE OUT & CATERING INC.



சிவா

**Tel: 416-283-1260**

இலங்கை, இந்திய உணவு வகைகள், சுவையான கொத்து ரொட்டி, இடியப்பம், பிட்டு, தோசை, மசாலதோசை, புரியாணி போன்ற சுவைமிக்க உணவுகளையும் மற்றும் சிற்றுண்டி வகைகள், வடை, கட்லட், மோதகம், றோல்ஸ், பற்றீஸ், சூசியம் போன்றவற்றை சுடச்சுடப் பெற்றுக் கொள்ள அழையுங்கள்! **"மணிகண்டன்"**

**790 Military Trail, Unit #1A**
**Scarborough, Ont.**
**(Morningside & Military Trail)**

# இனிமைத் தமிழை நீ நாடு

பொதிகையிலே விளையாடி-வள்ளுவப்
பெருமுனி வாயில் இளையோடி
வதிவிடம் ஒன்று தேடி-சங்க
வள்ளல்கள் வாய் வழி உருவாகி

அகத்தியத்தை அடியாக்கி-அரும்
அணியிலக்கண மொழியாகி
இதயத்திலே ஒளி பொங்கி எழுந்த
இன்பத் தமிழ் மொழியை நீ நாடு.

தொல்காப்பியர் தந்த செல்வம்-தமிழ்
தொல்மொழி தந்த இன்ப வெள்ளம்
நன்னூலை வரம்பெனக் கொள்ளும்
நம் பவுணந்தி தந்த தமிழ் மொழியை நீ நாடு

முத்தமிழ் முத்தான சிலம்பு-தரும்
முத்தமிழ் சிறப்பை நீ விளம்பு
வித்தகர் நாவில் குடியிருந்து-வாழும்
வீரத்தமிழ் மொழியை நீ நாடு

இயலிசை நாடகம் தன்னில்-எம்
இந்தியர் வாழ் பாரத மண்ணில்
முயலுவாள் மூவேந்தர் கண்ணில் முதிர்ந்த
மூத்த தமிழ் மொழியை நீ நாடு

வள்ளுவர் நாவில் உதித்து-வந்த
வாலியின் நெஞ்சில் புகுந்து
ஔவையின் மொழியினில் எழுந்து-இன்று
ஆரம் பதித்த தமிழை நீ நாடு

ஆயிரம் ஆயிரம் ஆண்டு-ஆண்ட
அரசர் சபையில் வளர்ந்து
பாயிரம் ஆயிரம் வடித்த -அந்த
பாஷைத் தமிழை நீ நாடு.

ஆத்தி சூடியால் புகுந்து-ஔவை
ஆக்கிய கொன்றையில் மலர்ந்து
மூதுரையில் மொழி சிறந்து-அவள்
முகிழ்த்த நல்ல தழிழை நீ நாடு

கம்பனின் நெஞ்சில் உதித்து-இராமர்
காதையிலே நடை பயின்று
அம்பிகாபதி நாவில் எழுந்து-சோழர்
அமராவதி அமிழ்ந்த தழிழை நீ நாடு

பாரதி உணர்வினில் கலந்து-எங்கள்
பாரத மண்ணில் தவழ்ந்து
பா-ரதம் தன்னில் அமர்ந்து-வந்த
பார் போற்றும் தமிழை நீ நாடு.

**செல்வி. செ. ரிக்ஷானா**
தரம் 12
யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம்.

# My. School

My School is J/Kondavil Hindu Maha Vidiyalayam It is at Kondavil, a small agricultural village. It is a 1C school. Miss.P.Markkabdu is our Principal. She is very energetic, kind and strict lady. Mr. Arunakiraivaran is our vice principal. There are 33 teachers and a management Assistant in our school. It is a mixed school in which nearly eight hundred students are studying. The classes are Grade I to Grade 13. Each Grade has two divisions. The Arts scheme was stared in 2001. From the 1st batch two students had been selected for university. It is a mile stone in the history of our school. There are two minor staff in our school. They are also very helpful to maintain the school.

Our principal and teachers take keen interest on the improvement of the students' studies and their extra curricular activities. Our principal and our teachers know each and every student individually. So they can encourage us according to our talents and hidden tatents. It is a developing school. The development depend on the hard working of the principal. teachers and the students.

Physical facilities are not enough in our school. We take computer as a subject. But there is no computer Iab or separate room for computer. We have only two computers. Our school hasn't special classes for aesthetic. So school authority took over a house in front of our school with the help of the Old students Association in Over seas and it is used as an aesthetic section. Most of the students in our school come from the agricultural society. So they can'help the school financially. The students' Association, school developmental society and the Old students who live in overseas are very helpful to the development of the school. The old students who live in Canada helped to buy a playgronud. We celebrate English Day, Tamil day competitions and religious Festivals. And also we have scouts team. Through those activities our students' personality development also develop perfectly. Our sachool is a small school and physical Facilities like buildings, labouratory and minor staff are not sufficient. Eventhough the school is maintained perfectly and punctually. I like and respect my school.

***P.Sinthuja***

**Grade 10 A**

**J/Kondavil Hindu M.V**

குருபாதம்

# நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்

ஸ்தாபகர்: **ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்:**

குருமஹா சந்நிதானம் ஆதி முதல்வர்.

ஆதீன முதல்வர்: **ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்:**

இரண்டாவது குருமஹா சந்நிதானம்.

*பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம், இலங்கை.*

தொலைபேசி: 021-222 2870 06-03-2004.

**அன்புசால் பெருந்தகையீர்,**

யா/கோண்டாவில் இந்து மகாவித்தியாலயம் தனது உயரிய கல்விப்பணியில் 125ம் ஆண்டினைப் பூர்த்தி செய்வதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

கோண்டாவில் பதிவாழ் மக்களின் கல்வித்தேவையினைப் பூர்த்தி செய்யும் வண்ணம் நூற்று இருபந்தைந்து ஆண்டுகாலமாக பணியாற்றி வரும் இப்பாடசாலையின் சேவை போற்றுவதற்குரியது. வித்தியாலய வரலாற்றினையும் பெருமைகளையும் சாதனைகளையும் நிதர்சனப்படுத்தும் வகையில் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க கனடாக் கிளை நினைவு மலர் ஒன்றினை வெளியிடுவதும் வரவேற்கத்தக்கதே.

**நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்**
**மண்மாண் புனைபாவை அற்று**

என்ற வள்ளுவன் வாய் மொழிக்கு ஒப்ப "கல்வி அழகே அழகு" என்ற மகுட வாக்கியத்தை இலச்சனையில் கொண்டு ஓம் எனும் ஓங்காரப் பொருளை மனதிருத்தி இந்துத்தமிழ்ச் சேவையாற்றி வரும் இப்பாடசாலையின் கல்வி வரலாற்றில் உருவாகிய கல்வியியலாளரகள், சான்றோர்கள் பலராவார். கல்வியிலும் ஏனைய துறைகளிலும் சிறப்புற்று விளங்கும் இப்பாடசாலை இன்னும் பல்லாண்டு காலம் சேவையாற்றவும் கல்வியிலும் பிற துறைகளிலும் சிறப்புற்று விளங்கவும் வாழ்த்துகின்றோம். இப்பாடசாலையின் வளர்ச்சியில் தம்மை அர்ப்பணித்துச் சேவையாற்றும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் அனைவரையும் இறைவன் ஆசீர்வதிக்கப் பிரார்த்திக்கின்றோம்.

**"என்றும் வேண்டும் இன்ப அன்பு"**

இரண்டாவது குருமஹாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள்

# இரத்த அழுத்தம் (BP)

டாக்டர் இராஜ் கிருபாகரன், M.B.B.S, M.D, C.C.F.P

கனடாவில் 18 வயதுக்கு மேற்பட்டவர்களில் 21வீதமும், 65 வயதிற்கு மேற்பட்டவர்களில் 50 வீதமும் இரத்த அழுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளனர். இரத்த அழுத்தம் என்பது Systobic pressure 140க்கும் கூட. அல்லது Distobic pressure 90க்குக் கூட. பலதடவை 6 மாதத்தில் எடுத்திருக்க வேண்டும். பெண்களில் கூடுதலான இறப்புக்குக் காரணம் இந்த இரத்த அழுத்தமே. இதனால் மாரடைப்பு (Heart Attack) வருவதற்கு வழிவகுக்கின்றது.

இரத்த அழுத்தம் உள்ளவர்கள்

35 **வீதமானர்கள்** Heart attack வரவும் 65 **வீதமானவர்கள்** வாதம் வரவும், விரைவில் இறப்பதற்குக் கூடும். இதனால் 24வீதமானவர்கள் கெதியாய் சாவதற்கு வழி வகுக்கின்றது. இரத்த அழுத்தம் உள்ளவர்களில் 45 வீதமானவர்களுக்கு அவர்களுக்கு அப்படி வியாதி உள்ளதாக தெரிந்திருக்கவில்லை. 22 வீதமானவர்கள் தெரிந்திருந்தும் மருந்து எடுக்கவில்லை. 21 வீதம் வியாதி கொன்றோலில் இல்லை. 13 விதம் ஆக மட்டும் கட்டுப்பாட்டுக்குள் உள்ளார்கள். அதிலும் 9 வீதமானவர்கள் Diabetes (நீரழிவு) உள்ளவர்கள் தம்மைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள்.

கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டிய விபரம் Systolic / Diastolic

சாதாரணமாக இருக்க வேண்டிய எண; <140/90
சலரோகம் உள்ளவர்கள்; <130/80
சிறுநீரக பிரச்சனை உள்ளவர்கள் ; <130/80

இரத்த அழுத்தத்தினை கட்டுப்படுத்துவதில் ஏற்படும் பிரச்சனைகள்

1. மருந்துக்களின் விலை அதிகம்
2. மருந்து வாங்குவதற்கு காப்புறுதி இல்லாமை (Insurance)
3. வீட்டில் ஏற்படும் பணக்க'டம்- மனக்க'டம்
4. எல்லாம் தெரிந்து இருந்தும் மருந்து எடுப்பதற்கு மனதில் விருப்பம் இல்லாமை
5. மருந்தினால் ஏற்படும் பக்க விளைவுகளை மனதில் கொள்ளல் (Side Effect)
6. தூங்குவதற்கு நேரமில்லாமல் உழைப்பு (Busy Life)

இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவதன் நன்மைகள்

வயது வந்தவர்களில் 65 வயதிற்கு மேற்பட்டவர்கள் 160/90 க்குக் கீழ் கொண்டு வருவதன் மூலம் நீங்கள் இருதய சம்பந்தமான வியாதிகள் (Heart events) 25 வீதமும், 36 விதமும் வாதம் வருவதையும் தடுக்க முடியும்.

சில வழிவகைகள்

1. இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்த மட்டும் ஒவ்வொரு மாதமும் வைத்தியரைப் பாருங்கள். அதன்பின்பு வருடத்திற்கு 4 தடவையாவது B.P. check பண்ணுங்கள்
2. வைத்தியரிடம் அதிக பிரச்சனைகளைக் கதைக்காதீர்கள். ஒரு நேரத்தில் ஒரு பிரச்சனையை மாத்திரம் விரிவாக கதையுங்கள்
3. உங்கள் வைத்தியரிடம் என்ன இரத்த அழுத்தம் எப்படி வடிவாக கட்டுப்படுத்தலாம்? என்று வடிவாக கதையுங்கள்.
4. வைத்தியரிடம் என்னவிதமான தேகப்பயிற்சி, சாப்பாடு கட்டுப்பாடு, எப்படி புகைத்தலை நிற்பாட்டுவது? போன்றவற்றை ஆறுதலாகக் கேளுங்கள்.
5. வீட்டில் ஒரு பிரசர் அளப்பதற்கான கருவியை வைத்திருங்கள். ஒரு புத்தகத்தில் பதிவு செய்து அடுத்தமுறை வைத்தியரிடம் செல்லும்போது ஆலோசிக்கத் தவறாதீர்கள்.
6. உங்களுக்கு மருந்து எடுப்பதில் காசு கஷ்டம் அல்லது, பாதிப்புக்கள் இருப்பின் வைத்தியரிடம் அல்லது "Pharmast இடம் தயக்கமில்லாமல் சொல்லுங்கள்.
7. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் சாப்பாட்டில் உப்பு சேர்ப்பதை தவிர்த்து கொள்ளுங்கள். ஆதிகமாக எண்ணை பாவிப்பதையும் தவிர்க்க வேண்டும். கொழுப்புச் சத்து உள்ள சாப்பாடு நண்டு, கணவாய்
8. தேகப்பயிற்சி, நடத்தல், ஓடுதல் போன்றவை இருதயத்தைப் பலமாக வைத்திருக்க உதவும்.
9. Weight .உங்கள் உடல் நிறையை உங்கள் உயரத்திற்கேற்ப வைத்தியரிடம் அறிந்து குறைத்துக் கொள்ளுங்கள்.

இப்படியான சில அறிவுரைகள் உங்கள் ஆரோக்கியத்திற்கு நல்லது. உங்களையும் நீண்ட காலம் வாழவைக்கும்.

# சிந்தனைச் சிதறல்

- கெட்டவர்களோடு சேர்வதை விட
  தனிமையில் இருப்பது சிறந்தது.

- தனிமையில் இருப்பதைவிட நல்லவர்களோடு
  பழகுவது நன்று.

- அழும் ஆண்களையும் சிரிக்கும்
  பெண்களையும் நம்பாதே.

- பெண்ணின் அழகுக்காகத் திருமணம் செய்யாதே
  அவளின் ஒழுக்கத்திற்காக திருமணம் செய்து கொண்ட
  பலரைப் பற்றி தெரிந்துகொள்

- சிலரோடு பழகி இருவர் மூவரோடு ஒட்டி உறவாடிப் பழகு.

- பிறரைப் பற்றிக் கதைக்கும் போது ஊமையாய் இரு.
  சந்தர்ப்பத்தை உருவாக்குபவர்களிற்கு வாழ்விலே தோல்வியில்லை ஆனால்
  தோல்வியிலும் உன் முயற்சியினை கைவிட்டு விடாதே.

- நீ சுயநலம் உள்வனாய் இராதே
  மற்றவனுக்கு தீங்கு செய்யும் எண்ணத்தை நினைக்காதே.

- உனக்கு தெரிந்தவற்றை மற்றவனுக்குச் சொல்லு.

- கொடுப்பதில் பொறாமை கொள்ளாதே.

- தாய், தந்தையரை என்றும் மறவாதே.

- எந் நேரமாயினும் சந்தர்ப்பவாதியாகி விடாதே.

☞ பொய் எனும் வார்த்தையைப் பேசிவிடாதே.

☞ உனக்கு மேலோனை மதியாமல் இராதே.

☞ துன்பங்கள் அனுபவித்த காலத்தை மறந்துவிடு
ஆனால் அது உனக்குக் கற்பித்த பாடத்தை மறவாதே.

☞ பிறருக்கு நன்மை செய்யவேண்டிய நீ
நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாதிரு.

☞ உன்னைப் பற்றி யாரும் குறைகூறின் அஃது
உண்மையாயின் திருந்திக் கொள்.
பொய்யாயின் நகைத்து விடு.

☞ மற்றவர்களை கீழே தள்ளிவிட்டு -நீ
ஏணியில் ஏற நினையாதே.

☞ காலத்தின் விலையை அறிந்துகொள் அதை
வீணாக்குவது நீ உன்னையே கொலை செய்வதுபோல் ஆகிவிடும்.

☞ சமயம் இல்லாத மனிதன் கடிவாளம் இல்லாத
குதிரையைப் போன்றவன்.

☞ உள்ளே நுழையும் முன் வெளியே
வருவதைப்பற்றி சிந்தனை செய்.

☞ நல்லமனம் இருந்தால் போதாது-நல்ல
முறையில் பயன்படுத்தப் பழகிக்கொள்.

செல்வி. ப. சிந்துஜா
தரம் 10
யா/கோண்டாவில் இந்து ம.வி.

# PEER PRESSURE

Peer pressure is a prevalent force that has a continuous presence in the lives of young adolescences. Many individuals, who enter their teenage years, are bound to find themselves in circumstances that directly result from peer pressure. Peer pressure is a force that is driven by individuals' desire to be part of a social group and be liked by others in their respective social circle. It is during their teenage years many individuals shape their principles and values about right and wrong and make a determination about the direction of their future. Thus, peer pressure has significant influence on these principles and values. However, the manner in which peer pressure affects individuals varies depending on the circumstances and the values and morals already entrenched in these individuals.

There is a common misconception that peer pressure always yields negative influences on individuals. However, there are pressures from peers that result in positive force on young adolescence. For example, peers provide moral and emotional support and encourage young adolescences to continue to try and not give up when he/she is not successful at his/her task. Consequently, not all peer pressure is bad!

More often than not, teenagers encounter negative peer pressure, which may persuade them to do or act in a particular manner that is contradictory to their normal behavior. For example, one individual may convince another to cut class. Although, one might be aware that it is wrong to cut class, he/she may be inclined to skip class in order to be "cool" or fit in with a specific circle of friends. Saying "no" may cause the individuals to be cast out of the social group, which is highly undesirable result to young teenagers. This example, however, is very minute compared to an individual who persuades another to take up smoking, or drinking, or even drugs, which may cause serious physical harm and could result in undesirable consequences, including legal issues. Even worse is pressure from friends to become a member of a particular gang, which if joined may be very difficult to get out from and could be life threatening.

It is very difficult to walk away from peer pressure but it can be done if a person sets their mind to it. Paying attention to one's own feelings and beliefs about what is right and wrong can help him/her acknowledge the right course of action. Inner strength and self-confidence can help oneself stand their ground and be firm and resist doing something when you know better. Yet another way to tackle peer pressure is to avoid those individuals who seem to provide you with such pressures. Avoidance is probably the best solution to tackle this problem facing many youngsters today. It may also help if one surrounds himself/herself with friends who have the similar values and beliefs and who will provide support in difficult circumstances in which a decision of the right thing to do must be established. Since friends have a vast influence, it is very critical to choose those friends who avoid bad habits thereby making you less prone to such bad habits. Consequently, it is wise to choose friends that can help you with your studies and advice those students who are driven away from moral behavior as opposed to those detract you from you education and moral principles.



**GAJALINI RAMACHANDRAN**
*UNIVERSITY OF TORONTO AT SCARBOROUGH*

# "The Nobel Prize Winner, DR. Subramanyan Chandrasekhar." (1910 – 1995.)

**BY: Easan Krishna, CFP.**
**Clarica/Sunlife.**

Whenever, The Kondavil schools association of Canada, promotes an event it always keeps children in focus. Be it a summer whole day get-together, or, a spring festival of New Year vizah. So I thought to use this opportunity to write this article about a real life story of our own Tamil, pre-eminent 20th century, Nobel Prize winning (ASTRO-PHYSICS-1983.) Scientist, legendary DR. SUBRAMANYAN CHANDRASEKHAR.

DR. SUBRAMANYAN CHANDRASEKHAR, born in to a well-respected & well-educated Tamil Family, which belonged to Madrazs, India. His early education was done at home by his parents & some private educators. First time he went to school was at the age of 12. At the age of 19, he completed his degree at the, Presidency College Madras, and received a scholarship from Cambridge University to do this Ph.D. He boarded a ship to England from Bombay, India. While on the voyage (those days at least 20-days of traveling) he developed a theory about the nature of stars for which he would be awarded the, Nobel Prize, 53 years later.

Dr. Subramanyan Chandrasekhar's, Nobel Prize winning theory initially was rejected by peers & journals in England. His professor, Sir. Arthur Eddington, publicly opposed it. After receiving, Ph.D at the age of 23 he was being appointed fellow of, Trinity College, Cambridge University. As a fellow of Trinity College, he traveled many parts of Europe & spent some time with many prominent scientists in Germany, Denmark, France, Norway & USSR. Although many leading scientists privately supported his theory but none of them could come out openly & support him. This is because Sir. Arthur Eddington, was too, powerful to deal with.

At this time, University of Chicago, sent their representative to meet with Dr. Chandrasekhar, & through their representative, invited him to come to the United States of America. Disappointed & reluctant to engage in public debate, Dr. Chandrasekhar, decided to move to the United States of America. TODAY, THE EXTREAMELY, DENSE NEUTRON STARS & BLACK HOLES, IMPLIED BY DR. CHANDRASEKHAR'S EARLY WORK ARE A CENTRAL PART OF ASTRO-PHYSICS.

Chandra, came to the United States of America in 1937. Where, he settled with University of Chicago. Even though, many Universities such as MIT, PRINCETON, HARVARD, competed for his services but he firmly decided to stay with, University of Chicago until his passing away. Later on University of Chicago's president pointed out, bringing, Dr. Chandrasekhar to his university was the finest moment in his entire career. At the University of Chicago, Dr. Chandrasekhar, spent most of the time with their, "YERKES OBSERVATORY" in Williams Bay, Wisc., His commitment to teaching was legendary. One time in the 1940's, he drove 200 miles round trip each week from, Yerkes, to teach a class at the main campus. One day he insisted on driving despite heavy snowstorm. Chandra, ended up teaching a class of only two that day. The both of those students won the 1957 Nobel Prize in Physics. They are Dr. Tsung Dao lee & Dr. Chang Ning Yang. They were the first, Chinese, Nobel Prize winners.

Chandra's almost 60 years of long teaching career at the University of Chicago has produced 51Ph.D,s. He trained his students meticulously. Out of those 51 Ph.D,s a few worn the Nobel Prize. Many are occupying higher academic positions as such as University presidents, provosts, deans, professors etc. Even, after educating them he always monitored their whereabouts. Well-respected, Astro- Physicist, late Dr. Carl Sagan, (popular cosmologist) is one of his students. He attracted students from all around the world.

Chandra, worked on many branches of physics, & produced definitive books on all areas of his work. More than one hundred thousand copies of his books had been sold. Normally, he spent 8-10 years, on one specific branch of Physics. One branch of Physics, for even to a Nobel Laureate, a lifetime of work. Where, Chandra finished it in 8-10 years. This marvelous achievement was noted by many, Nobel Laureates.

Winning a Nobel Prize is more harder than winning an Olympic gold medal. This is a lifetime of work. The work must produce to help the mankind & should receive a well recognition from world over. Even, then the scientist must wait for a long period of time before getting recognized by the Nobel committee. Another word one has to dedicate his entire life to his filed of work. Every year Nobel Prize is been awarded to Medicine, Physics,

Chemistry, Economics, Literature, & Peace. All the prizes are presented in Sweden expect the Peace prize, which is in Norway. The Nobel Prize is the highest honour a scientist can have. Nothing is bigger than a Nobel Prize. The Nobel Prize was established by Dr. Alfred Nobel a Sweden national & the inventor of dynamite. He established this coveted prize through his will. First prize was awarded in 1901. Economics was added to the list in 1968 by Sweden government in order to celebrate the central bank's anniversary.

Chandra's own famous uncle, Sir.C.V.Raman, was the first Asian, to win a Nobel Prize in science. He obtained the prize in 1930 for Physics. Imagine winning a Nobel Prize is more harder than winning an Olympic gold medal. Here, our own Tamil family produced two Nobel Prize winners. Both won the Nobel Prize for Physics. Physics, is the subject even to the brightest student finding it harder. Sir. C.V. Raman's work was named after his name as "RAMAN EFFECT", which describes the diffraction of light by crystals. First, Asian to win a Nobel Prize in science is another magnificent feat. Considering the fact Asia, is the largest continent in the World & almost 2/3 of the World's population lives there. The countries include, Japan, China, etc. Still, we manage to produce the first science Nobel Prize winner. Is not it amazing? What is this telling you? If you put your mind into it & work towards your goal, work hard be patient, things will come true. Do not expect any overnight results. Long term commitment should be applied.

Chandra, is one of the most outstanding, Physicists, of all time. One of the hand full of scientists who understood, Albert Einstein's work. Aside from this fact only other scientist comparable to Chandra, is, Stephen Hawking. Stephen Hawking, is at the moment considered the most respected living scientist. He teaches at University of Cambridge. Chandra, dedicated his entire life to his work. At this stage his work is the guiding post in deep space.

In the year of 2002, President Bush declared, month of, may, will be dedicated to the Asian, Pacific American, Heritage moth. From now on every may, is been dedicated to Asian, Pacific, American, Heritage month. To celebrate this occasion White House released a press release. On that particular press released, President Bush, noted, Dr. Subramanyan Chandrasekhar's work as a ground breaking work & forming as a foundation for the space program. Also he further said in the press released that his work is the center piece of the space program.

**NASA**, has named their largest observatory laboratory for "CHANDRA". NASA, sponsored a naming contest for the observatory that attracted more than 6000 entries from 51-states & 60 countries. The majority of the entries came to suggest "CHANDRA". Many wondered that his name was so strongly promoted by the public. He himself did not promote his work or do anything to create a public relation image for it.

- In addition to the naming of NASA, he received 20 HONORARY DEGREES.
- ELECTED TO 21 LEARNED SOCIETIES.
- In 1967-PRESIDENT JOHNSON AWARDED HIM WITH THE HIGEST PRESIDENTAL MEDAL. (White House ceremony held for this).
- 1944 ELECTED AS FRS. FELLOW OF THE ROYAL SOCIETY OF LONDON.
- GOLD MEDAL OF THE ROYAL ASTRONOMICAL SOCIETY OF LONDON.
- RUMFORD MEDAL OF THE AMERICAN ACADEMY OF ARTS & SCIENCES.
- ROYAL MEDAL OF ROYAL SOCIETY.
- NATIONAL MEDAL OF SCIENCE.
- HENRY DRAPEPER NEDAL OF THE NATIONAL ACEDEMY
- NOTED BOOKS ABOUT CHANDRA,
- "CHANDRA - A BIOGRAPHY OF S.CHANDRASEKHAR". WRITTEN BY KAMESHWAR WALI, SYRACUSE UNIVERSITY, PUBLISHED BY UNIVERSTIY OF CHICAGO PRESS 1991.
- "FROM WHITE DWARVES TO BLACK HOLDES" THE LEGACY OF S. CHANDRASEKHAR. WRITTED BY G. SRINIVASAN, PUBLISHED BY UNIVERSITY OF CHICAGO PRESS IN 1999.

<u>BOOKS WRITTEN BY "CHANDRA"</u>

1. INTRODUCTION TO THE STUDY OF STELLAR STRUTURE -1939.
2. PRINCIPLES OF STELLAR DYNAMICS –1943.
3. RADIATIVE TRANSFER –1950.
4. HYDRODYANMIC & HYDROMAGENETIC STABILITY –1961.

5. THE MATHEMETICAL THEORY OF BLACK HOLES –1983.
6. EDDINGTON-THE MOST DISTINGUISHED ASTRO PHYSICIST OF HIS TIME. –1983.
7. TRUTH & BEAUTY –1987.
8. NEWTONS PRINCIPIA FOR THE COMMON READERS –1995.

We as Tamils should take pride of his work. He is one of our own. Until, his passing away he maintained a vegetarian diet. Throughout his stay in United States he was being supported by his wife, Lalitha. They married in Sept/11/1936. His entire life he lived, a simple life on the basic of,

THE SIMPLE IS THE SEAL OF THE TRUTH
AND
THE BEAUTY IS THE SPLENDOUR OF THE TRUTH

The legendary scientist died in August/21/1995. The sympathies came from President Clinton, Queen Elizabeth & almost all of the heads of states from around the world & the scientific community from corner to corner. On his request the last rights has been performed privately by his wife & the University of Chicago. Attended by only a selected few. According to the Hindu custom he was being cremated & the ashes were spreaded all across his beloved University. But, his one-year anniversary, the University of Chicago, organized a two-day symposium. Which was attended by all the prominent Scientists in the world. Including, Stephen Hawking. The University allowed the students to attend free of charge. This event is currently considered one of the biggest scientific conferences of it's kind ever held in the United States. University also served pure vegetarian food for all the attendees during those two days.

In the future, I hope our young generation to duplicate this extra ordinary achievement & to make our Tamil community & our adopted country, Canada, to be proud of.

Thank you.

கோநகர் பொழுது '2004 சிறப்புற நடைபெற எமது நல்வாழ்த்துக்கள்!

# LIFE INSURANCE

உங்கள் விருப்பப்படி
எந்தக் கம்பனியில்
வேண்டுமானாலும்
காப்புறுதி செய்து தரப்படும்

## INSURANCE

* Individual Life
* Disability
* Accident
* Mortgage
* Group Life
* Guaranteed Issue
* Non - Medical Life Insurance
* Travel Insurance
* Extended Health Care
* Critical Illness Insurance
* RESP with Govt. Grant 20%
+ 15% addition from our company

உங்களுக்குத் தேவையான
வீட்டுக் கடன் (Mortgage)
குறைந்த வட்டி வீதத்தில்
பெற்றுக் கொடுக்கப்படுவதுடன்
அதற்காகக் கட்டணம் எதுவும்
அறவிடப்படமாட்டாது



மயில்வாகனம் இராசகுலசூரியர்
காப்புறுதி ஆலோசகர்
**Associate Life Underwriter**
**Res: 416-630-5126 Off:416-293-5559**
**Cell: 647-280-5126**
3490 Keel St. # Unit #33, Downsview, Ont.
email: soori51@hotmail.com

# SHAN Gift Mart







**Contact S. Deva**
727 Kennedy Road
Scarborough, Ontario
(Kennedy & Eglinton)
**Tel.: (416) 264-2134**



* **Cosmetics**
* **Ladies Wear**
* **Mens Wear**
* **Kids Wear**
* **Electronics**
* **Stationary**

# Obesity

BY: Dr. Coomaran Vettivelu.

Obesity otherwise known as over weight is a serious problem in industrialized countries. Obesity not only, high prevalence among the people in the western world, but also quite common among the immigrants who settled in those countries. Since, July of 1983 vast majority of Sri Lankan Tamils have migrated in these western Nations. Over the past twenty years, some how they have adapted to the western life style. However they have neglected their diet. As a result of this, many of them are suffering from obesity and other obesity related diseases.

Even after 20 years of western life many of us are still maintain our old eating habits. Having said that doesn't mean our traditional eating habits are not good. Really, our people's diets are not up to the standard. In western countries in general, people don't eat much rise or even bread, but they eat a lot of side dishes. Where as in Eastern nations, we consume lot of rice or other items like puttu or iddiappam, but our side dishes are very much less. However, Sri Lankan Tamil people in Canada eat the same amount of rice, pittu & string hoppers (idiappam), what they used to eat in their native country. On top of their regular meals they have increased the amount of the side dishes. Especially, the nonvegetarian side dishes such as chicken, mutton, beef etc. In short, what they consume in their day today life is a mixture of Eastern &western diet. There are many reasons for their increased consumption of nonvegetarian side dishes. In many developed countries food prices are very low in terms of an average earnings and other expenditures such as accommodation & transport. Moreover, some non-veg commodities are much cheaper than some of the vegetables. For example, price of a pound chicken is cheaper than some vegetables.

